# புதுவிதி
PUTHU VITHI


விலை 20/=

பக்கங்கள் 24

27 ஏப்ரல் 2019

புதுமை : 03 விதி : 151


## மதத்தின் பெயரால்...!



# இறைகுமாரன் - உமைகுமாரன் முதல் முள்ளிவாய்க்கால் வரை!

■ - மட்டுநேசன்

புளொட் இயக்கத்துக்கென எப்போதுமே வில்லங்கமான வரலாறு உண்டு. தாங்கள் செய்த பாதகங்களை யார் தலையிலாவது சுமத்தித் தப்பிக்க முயல்வர். இது அவர்களின் பாரம்பரியம்.

அளவெட்டியில் இறைகுமாரன் -உமை குமாரன் என இரு நண்பர்கள் இருந்தனர். விடுதலை வேட்கை நிறைந்தவர்கள் இவர்கள். தமிழ் இளைஞர் பேரவையில் அங்கம் வகித்த வர்கள். இவர்களில் உமைகுமாரன் நகைச்சுவை உணர்வு நிரம்பியவர். 1977 ஆம் ஆண்டுப் பொதுத் தேர்தல் சமயத்தில் தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் போட்டியிட்ட சகல வேட்பாளர்களும் (சம்பந்தன் மற்றும் ஆனந்த சங்கரி ஐயாமார் உட்பட) தந்தை செல்வாவின் சமாதி முன் நின்று கொண்டு தமிழீழ இலட்சியத்தைக் கைவிட மாட்டோம்", என சத்தியப்பிரமாணம் எடுத்துக் கொண்டனர். அமிர்தலிங்கம் ஐயா நல்லூர் வீரகாளியம்மன் கோவிலில் உள்ள வாளை எடுத்து மூன்று தலைமுறை தலையைச் சுற்றி இதே சத்தியப்பிரமாணத்தை மீண்டும் எடுத்தார். (இந்த வாள் நல்லூரை ஆண்ட சங்கிலி மன்னனுடையது என கருதப்படுகிறது.)

இந்தத் தேர்தலில் சேருவில தொகுதியில் அறிவிக்கப்பட்ட முஸ்லிம் வேட்பாளர் பின்வாங்கிவிட்டார். கல்குடா, கல்முனை, சம்மாந்துறை, மூதூர், புத்தளம் ஆகியவை தவிர போட்டியிட்ட சகல தொகுதிகளும் இக்கட்சியே அபார வெட்டியீட்டியது. ஆட்சியிலிருந்த சுதந்திரக் கட்சி மிக மோசமாகத் தோல்வியடைந்தாலும், தமிழரைப் பெரும்பான்மையாகக் கொண்ட தொகுதிகளில் கல்குடா தவிர்த்து தமிழர் விடுதலைக் கூட்டணியே வெற்றி பெற்றதாலும் எதிர்கட்சித் தலைவராகும் வாய்ப்பு அமிர்தலிங்கத்துக்குக் கிடைத்தது.

மொத்த நாட்டுக்குமே எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் அவரும் பல்வேறு வகையில் பணியாற்ற வேண்டியிருந்தது. - உதாரணத்துக்கு மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்கள் தமது கோரிக்கைகள் சிலவற்றை முன் வைத்து கூரையிலேறிப் போராட்டம் நடத்தினார்கள். அவர்களுடன் பேச்சு நடத்த அமிர்தலிங்கம் சென்றார். மாணவர்கள் இறங்கி வராததால் ஏணி வைத்து கூரை மீது ஏறி பேச்சு நடத்தினார். சில வாக்குறுதிகள் வழங்கினார். முடிவில் எல்லாம் சுபம். மாணவர்களும், அமிர்தலிங்கமும் கூரை வழியாக இறங்கினர். எதிர்கட்சித் தலைவர் என்றாலே கெத்துத்தானே! அதன் பின்னர் தமிழீழம் எதற்கு? மாவட்ட சபை என்று மாவாட்டினர் கூட்டணியினர். "தமிழீழத்துக்கான பாதையில் மாவட்ட அபிவிருத்திச் சபை தங்குமடம்" என்றார் சித்தார்த்தனின் அப்பா தர்மலிங்கம். மொத்தத்தில் அரசியல்வாதிகளின் தங்காமடமானது தமிழீழக் கோரிக்கை.

மாவட்ட அபிவிருத்தி சபையின் பிரமாதங்களை யாழ். பல்கலைக்கழகத்தில் நடந்த சந்திப்பொன்றில் விளக்க முனைந்தார். அமிர்தலிங்கம் அங்கிருந்தோரின் சரமாரியான கேள்விகளுக்கு அவரால் பதிலளிக்க முடியவில்லை. ஒரு கட்டத்தில் 'உன்ரை விசர்க் கேள்விகளுக்கெல்லாம் பதில் சொல்ல எனக்கு நேரமில்லை" என உமைகுமாரனைப் பார்த்துச் சொன்னார் அவர். 'ஓம் ஐயா... உங்களுக்கு ஓட்டுக்கு மேல இருக்கிறவங்கள இறக்கவே நேரமில்லை. இதுக்கு நேரம் கிடைக்குமே?", என்று சுடச் சுடச் சொன்னார் உமைகுமாரன். கூடியிருந்த அனைவருமே சிரித்து விட்டனர். வாயைக் கொடுத்து வாங்கிக் கட்டிக் கொண்டார் அமிர்தலிங்கம்.

இவ்வாறன வரலாற்றைக் கொண்ட உமை குமாரனையும் அவனது நண்பன் இறைகுமார னையும் நள்ளிரவில் கடத்திச் சென்று வயல் வெளியில் சுட்டு வீசினர் புளொட் குழுவினர். (இந்த நடவடிக்கைக்குத் தலைமை தாங்கிய சந்ததியார் பின்னர் உமாமகேஸ்வரனுக்கு அதிக விசுவாசம் கொண்டோரால் தமிழகத்தில் காணாமலாக்கப்பட்டார்) அளவெட்டியில் செய்த படுகொலைகளை தமிழர் விடுதலை கூட்டணி மீது சுமத்த புளொட் அமைப்பினர் முனைந்தனர். மட்டக்களப்பில் இறைகுமாரன், உமைகுமாரனுக்கு அஞ்சலிக் கூட்டம் நடத்தினர். நகரசபை மண்டபத்தில் நடந்த இக் கூட்டத்துக்குத் தலைமை இன்றைய பிரபல சித்தாந்தவாதி யோகன் கண்ணமுத்து. பிரதம பேச்சாளர் இரா.வாசுதேவா. இவரது உரை நேரடியாக தமிழர் விடுதலைக் கூட்டணியே இப்பாதகத்துக்குப் பொறுப்பு எனச் சுட்டிக்காட்டியது. 'கொன்றவர்களே அஞ்சலிக் கூட்டம் நடத்துகிறார்கள்" எனத் தலையிலடித்துக் கொண்டார் அமிர்தலிங்கம்.

• • •

வரலாறு மீண்டும் திரும்புகிறது. இறுதி யுத்தத்தின் இறுதிக் கணம் மட்டுமல்ல அதற்குப் பிறகும் தொடர்ந்தது இலங்கைப் படையினருக்கு சேவகம் செய்யும் புளொட்டி னரின் பணி. புலிகள் தோற்கடிக்கப்பட்டதைக் கொண்டாட மாபெரும் விருந்துக்கு ஏற்பாடு செய்தது.(அழைப்பு விடுவிக்கப்பட்டவர்களில் ஈ.பி.டி.பி. மட்டும் மறுப்புத் தெரிவித்தது) வன்னியில் தாம் இழந்த ஆட்சியை மீண்டும் பிடித்து விடலாம் என்ற எண்ணத்தில் வவுனியா நகர சபையில் தனித்துப் போட்டி யிட்டது. தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலிலும் போட்டியிட்டது. இரண்டிலும் ஏமாற்றம்தான்.

புலிகள் தோற்கடிக்கப்படுவதற்குத்தானே புளொட் தேவை. செட்டிகுளத்தில் புலிகளின் உடைமைகளை சொந்தமாக்கிக் கொள்ள முயன்றதில் படையினருக்கும் இவர்களுக்கு மிடையில் முரண்பாடு. வவுனியா மாவட்ட புளொட் பொறுப்பாளர் சூரி கைதுசெய்யப் பட்டார். படையினர் கைது செய்து விசாரணைக்கென புளொட்டிடம் ஒப்படைக்கப்பட்ட மாணவர்களின் படுகொலை பற்றிய வழக்கை இவர் எதிர்கொள்ள நேர்ந்தது. இந்த வழக்கில் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா ஆஜரானார். எப்படியோ சூரி வெளியில் வந்தார். (வழக்கின் நிலைமை தெரியவில்லை) வன்னி மக்களும் படைகளும் கைவிட்ட நிலையில் கூட்டமைப்புடன் சேருவதைத் தவிர புளொட்டுக்கு வேறு வழியிருக்கவில்லை.

• • •

கடந்த ஆண்டு மே 18 நிகழ்வின் பின்னர் யாழ்ப்பாணத்தில் நினைவேந்தல்களை எந்த அடிப்படையில் செய்வது என்பது



சம்பந்தமான ஆரம்ப கலந்துரையாடல் நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக பேராசிரியர், அரசியல் ஆய்வாளர்கள், மத குருமார், முன்னாள் போராளிகள், சமூக ஆர்வலர்கள் என குறிப்பிட்ட சிலர் இதில் கலந்து கொண்டனர். இதில் ஆரம்பத்திலேயே தீர்மானிக்கப்பட்ட விடயம் 2009 மே 18 வரை அரச படைகளுடன் ஒத்துழைத்த குழுக்கள், கட்சிகளை இணைத்துக் கொள்வதில்லை என்பதாகும். பின்னர் இவர்கள் பல்கலைக்கழக மாணவர்கள் ஏனைய மாவட்ட பிரதிநிதிகளுடன் இணைந்து மேலும் பல விடயங்களை ஆராய்ந்தனர்.

தொடர்ந்து முள்ளிவாய்க்கால் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்ட குழுவினருடன் கலந்துரையாடினர். மட்டு. மற்றும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இரு பகுதியினரை யும் இணைத்து ஒழுங்குபடுத்தினர். முள்ளிவாய்க்கால் மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இக் கருமங்கள் நடைபெற்றன. மேலும் தீர்மானிக்க வேண்டிய விடயங்களும் உள்ளன.

இந்நிலையில் புளொட் அமைப்பைச் சார்ந்த கனகராஜா தவராஜா என்பவர் ஒரு அறிக்கை வெளியிட்டார். இவர் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் தவிசாளராவார். இவர் இச்சபையின் பெரும்பான்மையைப் பெற யார் யார் உதவினர்?

அரசியல் கைதிகள் என்று எவருமில்லை எனக் கையை விரிக்கும் நீதியமைச்சர் தலதா அத்துகோறளை, படையினர் வசம் இருக்கும் காணிகளை விடுவிக்கச் சாத்தியமில்லை எனக் கூறும் ஜே.ஆரின் பேரனும் ரணிலின்

(22ஆம் பக்கம் பார்க்க)


புதுவிதி
PUTHU VITHI

இனியொரு விதி செய்வோம் - அதை
எந்த நாளும் காப்போம்
தனி ஒருவனுக்கு உணவில்லையெனில்
ஜகத்தினை அழித்திடுவோம்.

புதுமை : 03 27 ஏப்ரல் 2019 விதி : 151

# முப்படைகளை கட்டுப்படுத்தியதாலேயே தொடர் குண்டுவெடிப்புகள்

## மஹிந்தவின் கண்டுபிடிப்பு



இலங்கையில் கடந்த ஈஸ்டர் ஞாயிறன்று எட்டுப் பகுதிகளில் இடம்பெற்ற குண்டுவெடிப்புகளுக்கு தற்போதைய அரசாங்கம் புலனாய்வுப் பிரிவினரையும் முப்படைகளையும் கட்டுப்படுத்தியதே காரணம் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே அவர் திறமையான புலனாய்வாளர்களை கப்பம் கோரி ஆட்கடத்தலில் ஈடுபடுதல், வெள்ளை வானில் கடத்தி இரகசிய இடங்களில் சித்திரவதை செய்து படுகொலை செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்களில் இருந்து தடுத்து வைத்திருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

அவர், ஆட்சியிலிருந்தபோது முப்படைகளுக்கும், புலனாய்வாளர்களுக்கும் பூரண அதிகாரம் வழங்கியிருந்தார். ஆனாலும் அப்போது பள்ளிவாசல்கள் தாக்கப்படுவது, பேருவளை அலுத்கம ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள் மூலம் நடத்தப்பட்ட கொலைகள், கொள்ளைகளை ஏன் தடுத்து நிறுத்தவில்லை என்பது பற்றி அவர் தனது அறிக்கையில் எதுவும் தெரிவிக்கவில்லை.

ஏற்கனவே சில கோரிக்கைகளை முன் வைத்துப் பேரணி நடத்திய கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத் தொழிலாளர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தும், சுத்தமான குடிநீர் கோரிப் போராடிய மக்கள் மீது தாக்குதல் தொடுத்தும் உயிர்ப் பலி கொண்டு ஜனநாயகத்தைக் காத்த பெருமை முப்படையினருக்கும் உண்டு. சாதாரண மக்களைக் கொல்லத் தயங்காத முப்படையினரைக் கட்டுப்படுத்தியதால்தான் குண்டுவெடிப்பு தடுக்கப்படவில்லை என்பது அவரின் கண்டுபிடிப்பு.

**'பாலுக்குக் காவல் பூனையாம்"**

# தனி ஒரு மனிதனைக் கூட கைவிடாத இந்திய ஜனநாயகம்

கடந்த நடாளுமன்ற தேர்தலின்போது ஒரே ஒரு வாக்காளரைக் கொண்ட ஒரு ஊரில் ஒரு வாக்குச் சாவடி அமைக்கப்பட்டு அவருக்கு வாக்களிக்கும் வசதி செய்து கொடுக்கப்பட்டு இந்திய ஜனநாயகத்தின் பெருமை உலகறியச் செய்யப்பட்டுள்ளது.

அருணாச்சலப் பிரதேசத்திலுள்ள ஹிமாலய பகுதியில் தலைநகரிலிருந்து 443 கி.மீ தூரத்திலுள்ள ஒரு கிராமத்திலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்த ஊரில் 5பேரைக் கொண்டு ஒரே ஒரு குடும்பமே குடியிருந்தது. அதில் ஒருவர் மட்டுமே வாக்காளர்.

இவருக்கென வாக்குச் சாவடி அமைக்க, 2 வாகனங்களில் அரச அலுவலர்கள், பாதுகாப்பு படையினர் என ஒரு பெரும் பட்டாளமே போயிருந்தது. இது இந்தியா - சீனா எல்லையில் உள்ள கிராமமாகும்.

அதேவேளையில் பொதுமக்களுக்கு வாக்களிப்பதற்காக லஞ்சம் கொடுப்பதற்காகக் கொண்டு




செல்லப்பட்ட பெரும் தொகை பணம், தங்கம், உடுபுடவைகள் என்பன இந்தியாவின் பல பகுதிகளிலும் பறி முதல் செய்யப்பட்டுள்ளன.

**'ஒரு வாக்குக்கு ஜனநாயகம் பல வாக்குகளுக்குப் பணநாயகம்"**




# மீண்டும் மாவையின் கால அவகாசம்

அண்மையில் வவுனியாவில் இடம்பெற்ற தமிழரசுக் கட்சியின் இளைஞர் மாநாட்டில் பங்கு கொண்டு சிறப்புரை ஆற்றிய தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா இனப் பிரச்சினைத் தீர்வு தொடர்பாக அரசாங்கத்துக்கு கால அவகாசம் வழங்கப்படும் எனவும் அப்போதும் இனப்பிரச்சனைக்ககான தீர்வு எட்டப்படாவிட்டால் அடுத்த பேராளர் மாநாட்டில் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றித் தீர்மனிக்கப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

ஜெனிவா தீர்மானத்தை நிறைவேற்ற அரசாங்கத்துக்கு 2015 இல் முதலாவது கால அவகாசமும், 2017 இல் இரண்டாவது கால அவகாசமும், 2019 இல் மூன்றாவது கால அவகாசமும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பூரண சம்மதத்துடன் வழங்கப்பட்டன. இனப் பிரச்சின்னக்கு தற்சமயம் வழங்கப்படும் கால அவகாசமும் முன்னையது போன்று மீண்டும் மீண்டும் பிறப்பெடுக்குமா என்பது தெரியவில்லை.

4வருடங்கள் ஐ.தே.கட்சியுடன் ஒத்துழைத்து தேனிலவு அனுபவித்து விட்டும் நான்கரை வருடம் ஆக ஏதாவது ஒரு சாட்டுச் சொல்லி வெளியேறி விட்டு, சிங்கள அரசாங்கங்கள் ஏமாற்றி விட்டன என்பது தமிழரசுக் கட்சியின் பாரம்பரிய வழிமுறை என்பதைத் தமிழ் மக்கள் அறிவார்கள்.

தற்சமயம் தேர்தல் நெருங்குவதால் கால அவகாசம் ஒரு தரத்தோடும் முடியக் கூடும். எப்படியிருப்பினும் கால அவகாசமும் காரணத்தோடு தான்.

**தேர்தல் வரும் பின்னே திருகுதாளம் வரும் முன்னே"**



# உயிர்த்தெழுந்த நாளில் பலி எடுக்கப்பட்ட உயிர்கள்

■ **யோகநாராயணன்**

உலக மக்களை நரக நெருப்பிலிருந்து மீட்க தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து முள்முடி தரித்து, கசையடியும், கல்லடியும் பட்டுச் சிலுவை சுமந்து இறுதியில் சிலுவையில் அறையப்பட்டு மரணமானார். அந்நாளை பெரியவெள்ளியெனக் கிறிஸ்தவ மக்கள் சிறப்பு வழிபாடுகளை நடத்தி வருகின்றனர். கல்லறையில் அடக்கம் செய்யப்பட்ட அவர் மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்து விண்ணோக்கியதை ஈஸ்டர் ஞாயிறு என உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ மக்கள் நாடுகளைக் கடந்து, இன வேறுபாடுகளை மறந்து சிறப்பு ஆராதனைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அதை உயிர்த்தெழுந்த ஞாயிறு என அழைப்பதுண்டு.

அப்படியான இயேசுபிரான் உயிர்த்தெழுந்த அந்தப் புனித நாளில்தான் இலங்கையின் மூன்று முக்கிய தேவாலயங்களில் ஆராதனையில் ஈடுபட்டிருந்த மக்கள் மீது தாக்குதல் தொடுக்கப்பட்டது. கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயம், நீர் கொழும்பு கடுவாப்பிட்டி புனித செபஸ்தியார் தேவாலயம், மட்டக்களப்பு சீயோன் தேவாலயம் ஆகிய இடங்களில் வழிபாடுகளில் ஈடுபட்டிருந்த மக்கள் மத்தியில் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு உயிர்கள் பலி கொள்ளப்பட்டன. அது மடடுமின்றிக் கொழும்பில் உள்ள மூன்று ஐந்து நட்சத்திர ஹோட்டல்கள், தெகிவளை மிருகக்காட்சி சாலைக்கு முன்பாக உள்ள உணவு விடுதியிலும் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டு வெளிநாட்டவர்கள் உட்படப் பல பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இக்குண்டு வெடிப்புகளில் இதுவரை 354 பேர் கொல்லப்பட்டதாகவும் 500 க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்தோர் தொகை மேலும் அதிகரிக்கக் கூடும். உயிரிழந்தோரில் வெளிநாட்டவர்கள் 39 பேர் எனவும் காயமடைந்து சிகிச்சை பெறுவோர் 30 பேரெனவும் அறிவிக்கப்படுகிறது.

இவற்றைவிட தெமட்டகொடவில் தேடுதல் நடவடிக்கைக்காக சென்ற பொலிஸார் மூவர் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டுள்ளனர். கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலைய நுழைவாயிலிலும், கொச்சிக்கடையிலும் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப்பட்டுள்ளன. புறக்கோட்டை பஸ் நிலையத்திலும் 78 குண்டுகளை வெடிக்க வைக்கும் டெட்டனேற்றர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இக்குண்டு வெடிப்புக்கள் தொடர்பாக இதுவரை 60 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும் பலரைக் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. மேலும் இரு வாகனங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சம்பவங்களில் நோக்கம் என்ன என்று தெரிய வரவில்லை. வழமையாக இப்படியான வன்முறைகள் இடம்பெறும் போது, அவற்றிலிருந்து அவற்றின் நோக்கத்தை அறிந்து கொள்ள முடியும். மேலோட்டமாகப் பயங்கரவாத நடவடிக்கைகள் எனக் கூறப்பட்டாலும் கூட அவற்றுக்கு ஒரு உள்நோக்கம் இல்லாமலிருக்க முடியாது. குறைந்தபட்சம் பழிவாங்கும் நடவடிக்கையாகவாவது இருக்கும்.

அதேவேளையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளிநாட்டு தூதுவர்களைச் சந்தித்து நிலமைகளைத் தெளிவுபடுத்தியதுடன் இவை வெளிநாட்டுப் பயங்கரவாதத்துடன் தொடர்புபட்டிருக்கலாமெனவும் இவை தொடர்பான நடவடிக்கைகளுக்கு சர்வதேச நாடுகள் உதவ வேண்டுமெனவும் கோரியிருந்தார். இவை வெளிநாட்டுப் பயங்காரவாதத்துடன் தொடர்புடையவையாக இருந்தாலும் அவை இங்கு மேற்கொள்ளப்படுவதற்கான காரணமோ, தேவையோ என்ன என்பதே இங்கு எழும் கேள்வியாகும்.

கடந்த அரசாங்கத்தின் காலத்தில் பள்ளிவாசல்கள் மேல் நடத்தப்பட்ட தாக்குதல்கள். பேருவளை -அளுத்கம பகுதிகளில் முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் கடந்த வருடம் அம்பாறை மாவனல்ல போன்ற பகுதிகளில் முஸ்லிம்கள் மேல் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகள் என்பனவற்றிற்கு எதிரான பழிவாங்கலாக இருக்கலாமோ எனச் சந்தேகம் எழலாம். அந்த வன்முறைகளில் ஈடுபட்டவர்கள் சிங்கள - பௌத்த மத வெறியர்கள். அவற்றுக்கும் கிறிஸ்தவ மக்களுக்கிடையே எவ்வித சம்பந்தமும் இல்லை. எனவே இது முஸ்லிம்களின் பழிவாங்கும் நடவடிக்கையாக கருதி விட முடியாது.

அண்மையில் போதைவஸ்து பாவனைக்கு எதிராக கிறிஸ்தவ மக்கள் ஒரு பேரணியை நடத்தியிருந்ததுடன் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை ஒரு கடுமையான அறிக்கையையும் வெளியிட்டிருந்தார். அதற்குப் பழிதீர்க்கும் நடவடிக்கையாகப் போதைவஸ்து வர்த்தகர்களால் மேற்கொள்ளப்பட்டிருக்குமோ என்ற சந்தேகமும் எழலாம். இவ்விடயத்தில் கத்தோலிக்கர்களை விட ஜனாதிபதியும் பௌத்த மத பீடங்களுமே தீவிரமாக உள்ளபடியால் அவர்கள்தான் இலக்கு வைக்கப்பட்டிருக்கலாம்.

எனவே இந்த இரண்டு விடயங்களுக்கும் இடையே சாத்தியக் கூறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. இலங்கையின் பொருளாதாரம் சுற்றுலாத் துறையில் தங்கி நிற்குமளவுக்கு இலங்கைக்கு அதிகூடிய வருமானத்தைச் சுற்றுலாத் துறையே தருகிறது. மேலும் நாட்டின் அபிவிருத்திக்கு அந்நிய முதலீட்டார்களை நம்பியீரக்கும் நிலையும் வலுப் பெற்று வருகின்றது.

இப்படியான நிலையில் இந்த ஐந்து நட்சத்திர விடுதிகளில் நடத்தப்பட்ட தாக்குதலும், கட்டுநாயக்காவில் மீட்கப்பட்ட குண்டும் சுற்றுலாத்துறையை சீர்குலைக்கவும் அந்நிய முதலீட்டாளர்கள் இங்கு முதலீடு செய்வதை தடை செய்யவுமான முயற்சியுமாக இருக்குமா என்ற கேள்வியும் எழலாம். அதுதான் நோக்கம் என்றால் தாக்குதல்கள் ஏன் ஆலயங்களில் நடத்தப்பட்டன. அதிலும் தலைநகரிலிருந்து வெகு தொலைவிலுள்ள மட்டக்களப்பு சியோன் தேவாலயத்தில் ஏன் நடத்தப்பட்டது? எனவே இத் தாக்குதல்கள் இலங்கையின் பொருளாதாரத்தைச் சீர் நிலைக்கும் நோக்குடன் நடத்தப்பட்டது எனக் கூறவும் முடியாது.

இப்படியான நிலையில் இக்குண்டு வெடிப்புகளின் நோக்கம் என்ன? இதன் பின்னணியில் நின்று செயற்பட்ட சக்தி அல்லது சக்திகள் எவை? என இது வரை எவ்விதத் தகவலும் வெளிவரவில்லை.

இது ஒரு மத மக்களுக்கு எதிராக இடம்பெற்ற ஒரு வன்முறை நடவடிக்கை என மட்டுப்படுத்தி விட முடியாது. விரும்பியோ விரும்பாமலோ இதன் மூலம் கசப்புணர்வுகள் ஏற்படுவதும் பொருளாதாரத்தில் தாக்கம் ஏற்படுத்துவதும் தவிர்க்க முடியாததாகும். பெருந்தோட்டங்களை வாங்கி ஒன்றிணைக்கும் கோடீஸ்வரர் ஒருவரும் அவரின் குடும்பத்தினரும் ஷங்கரிலா ஐந்து நட்சத்திர ஹோட்டலில் கொல்லப்பட்டவர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும். எனவே முதலீட்டாளர்கள் இங்கு வருவதற்கு தயக்கம் காட்டுவது தவிர்க்க முடியாதது.

எனவே நேர்மையான முறையில் விசாரணைகள் நடத்தப்பட்டு உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு சட்டத்தின் முன் கொண்டுவரப்பட்டு உரியநடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இல்லையேல் இப்போது ஏற்படப்போகும் தாக்கத்தில் இருந்து விடுபடுவது அவ்வளவு இலகுவாக இருக்கப் போவதில்லை. ஆனால் தாக்குதல் நடத்தப்பட்ட பின்னும் மரண விசாரணைகள் முடிந்து, இறந்த உறவுகளுக்கு ஈமக் கிரியைகள் நடந்து முடியாத நிலையிலேயே ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டும் நிலை தோன்றி விட்டது.

(23ஆம் பக்கம் பார்க்க)

புதுவிதி
PUTHU VITHI

தொடர்புக்கு:
ஆசிரிய பீடம் : 021 493 7777
விநியோகம் : 021 493 2222
விளம்பரம் : 021 493 1111

107, இராசவீதி,
கோப்பாய் - திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
puthuvithi@gmail.com

# சிறுபிள்ளைத்தனமான தலைமைகள்...!

ஒரு தசாப்த காலத்தின் பின்னர், நாட்டில் மீண்டும் குண்டுச் சத்தங்களும் மரண ஓலங்களும் கேட்கத் தொடங்கியுள்ளன. மதத்தின் பெயரால் இடம்பெற்ற - தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் இந்தச் சம்பவங்கள் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தை கட்டுப்படுத்தியுள்ளதுடன் நாட்டின் பாதுகாப்பைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய ஜனாதிபதியும், அரசாங்கமும் தமக்குக் கீழே இருப்பவர்களைக் கைகாட்டிக் குற்றவாளிகளாக்கி விடத் துடிக்கின்றனர். இவர்களுக்குள் நிலவும் அதிகாரப் போட்டியில் மக்கள் நலன் - பாதுகாப்பு என்பன செல்லாக் காசாகியுள்ளன.

நாட்டில் பெரும் தாக்குதல் ஒன்று - தற்கொலைத் தாக்குதல்கள் நடத்தப்படவுள்ளன என உள்நாட்டு உளவு அமைப்புகளும் இந்திய உளவு அமைப்பான றோ எச்சரித்தும்கூட வழக்கமான அசட்டைப் போக்குடன் அரசாங்கம் செயற்பட்டுள்ளது. விளைவு 354 மக்கள் பலி கொல்லப்பட்டுள்ளார்கள். இவர்களில் 45 சிறுவர்களும் 38 வெளிநாட்டவர்களும் அடங்குவர். தெற்காசியாவில் இடம்பெற்ற மோசமான பயங்கரவாதத் தாக்குதல் இதுவே என்கின்றன செய்திகள். வடக்கு - கிழக்கில் இலங்கை அரச பயங்கரவாதம் நடத்திய தாக்குதல்களில் அதிகளவான தமிழ் மக்கள் கொல்லப்பட்ட சம்பவங்கள் உள்ளன என்பது வேறு.

தாக்குதல் இடம்பெற்று ஒரு வாரத்தை அண்மிக்கும் நிலையில் தொடர் கைதுகள், சுற்றிவளைப்புகள், ரோந்து நடவடிக்கைகள் என நடந்தாலும் கடந்த வியாழக்கிழமை மீண்டும் ஓர் குண்டுவெடிப்புச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. தொடரும் விசாரணைகளில் பல முஸ்லிம் அரசியல்வாதிகள் இத் தாக்குதல்தாரிகளுடன் தொடர்பில் இருந்துள்ளார்கள் என்பது வெளிப்பட்டுள்ளது. ஆனால், இதுவரை எந்த ஒரு அரசியல்வாதியும் கைது செய்யப்படவில்லை. இனியும் கைது செய்யப்படுவார்களா என்பதும் சந்தேகமே. காரணம் அரசியலில் அவர்களின் தயவை நம்பியிருக்க வேண்டிய நிலையில் ஆட்சியாளர்கள் இருக்கிறார்கள் என்பதே.

மதப் பிற்போக்குவாத பயங்கரவாதிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதல் நாளடைவில் வேறு வடிவில் வெடிப்பதற்கும் வழியுள்ளது. தாக்குதல் நடக்கும்வரை பொறுப்பற்ற அரசாங்கமாக செயற்பாட்டாலும், தாக்குதலின் பின்னர் சில விடயங்களில் பொறுப்புடன் அரசாங்கம் நடந்ததை மறுத்துவிட முடியாது. ஆனால், பொறுப்புக் கூறும் விடயத்தில் சிறுபிள்ளைத்தனமாகவே ஜனாதிபதியும் பிரதமரும் இவர்களின் அமைச்சுப் பரிவாரங்களும் நடந்து கொள்கிறனர்.

தமது பொறுப்புகளை மறந்தவர்களாக உயர் தலைமைகள் அதிகாரிகளைக் கைகாட்டி விட்டு பதவிகளைத் தக்க வைத்துக் கொள்வதிலேயே கண்ணுங் கருத்துமாக இருக்கிறார்கள். அரசியல் தலைமைகளின் சிறுபிள்ளைத்தனமான இந்த நடவடிக்கைகள் நாட்டையும் - நாட்டு மக்களையும் மேலும் அழிவுப் பாதைக்கே இட்டுச் செல்லும். பதவிகளை தக்கவைக்க அடுத்தவரை குற்றஞ்சாட்டமல், நேர்வழியில் செயற்படுவதே நாட்டின் இப்போதைய தேவை.

'யாதும் ஊரே! யாவரும் கேளிர்!!'

# ஈழத்தின் இறுதிப் போர் சாட்சியாய்...! 48

- வன்னிமகள்
எஸ்.கே.சஞ்சிகா

எனது வேண்டுதலையும் தோழியின் மாமியின் வயோதிபக் கண்ணீரும் இராணுவத்தினரின் இதயத்தை ஈரப்படுத்தியிருக்க வேண்டும். இருவரையும் என்னிடம் அனுப்பி வைத்தார்கள். பெரும் பெரும் சாக்குகளாலும் தரப்பாள்களாலும் இணைத்துப் பிணைக்கப்பட்ட கூரையற்ற அறைகள் போன்ற மறைப்புகளில் எங்களை உடற்பரிசோதனை செய்வதற்காக உருவாக்கி இருந்தார்கள்.

எஞ்சிய உயிரோடு வந்த மக்களிடம் என்ன தான் இருக்கப்போகிறது? நானும் தோழியும் இன்னும் சில பெண்களும் போன உடற்பரிசோதனை மறைப்புக்குள் இரண்டு முஸ்லிம் இராணுவப் பெண்கள் இருந்தார்கள். அவர்கள் வைத்தியசாலைகளில் மருந்தெடுக்கும் இடம்போல சிறிய கதவை வைத்து உள்ளே நின்றபடி கேள்வி கேட்டுக்கொண்டிருந்தனர்.

முன்னே போன பெண்ணை துருவித்துருவி கேள்வி கேட்பதும் அதற்கு அந்தப்பெண் பயந்து பயந்து பதிலளிப்பதனாலும் நிறையவே கேள்வி கேட்டு துளைத்துக் கொண்டிருந்ததால் நான் என்னை சற்று சுதாகரித்துக் கொண்டேன். இறுகிப்போன தாடைகளை இலகுவாக்கிக் கொண்டேன். வலிந்து புன்னகையை ஏற்படுத்திக்கொண்டேன். எனது முறை வந்தது. அந்த இராணுவப்பெண் தமிழிலேயே கதைத்தாள்.

'உங்கட பெயர் என்ன?"

'என்ர பெயர் லதா"

'உங்க ஊர் எது?"

'யாழ்ப்பாணம்"

'ஏன் வன்னிக்கு வந்தனீங்கள்?"

'படிப்பிக்க"

'நீங்க ஆசிரியரா?"

'ஓம்...", என்று கூறிவிட்டு, 'நீங்க நல்லாவே தமிழ் கதைக்கிறீங்கள். முஸ்லிம்கள் நல்லா தமிழ் கதைப்பினம் போல...", என இயல்பாக கதைத்தேன்.

'இராணுவத்தில் முஸ்லிம் பெண்களும் இருப்பதை இப்போதுதான் பார்க்கிறேன். நான் காணும் முதல் இலங்கை இராணுவ முஸ்லிம் பெண் நீங்கள்தான்" எனக் கதைத்தேன். அந்த இராணுவப் பெண் சிரித்தாள்.

கொஞ்சம் இயல்பாகி, 'ஏதிலிகளாக வந்த மக்களிடம் என்ன இருக்கிறதென நிர்வாணமாக்கி பார்க்கிறீர்கள்?", என கேட்டேன்.

'நான் என்னிடம் வரும் பெண்களை நிர்வாணமாக்கி பார்க்கவில்லை", என மறுமொழி தந்தார்.

'உங்களிடம் கதைக்கும் போது பயம் வரவில்லை", எனக்கூறினேன்.

ரேடியோ வைத்திருந்தேன். ரோச்லைட் வைத்திருந்தேன். அவற்றை இராணுவம் பரிசோதித்து பறித்துக்கொண்டிருந்தது. நான் அவற்றை குழந்தையின் உடைகளோடு கைப்பையில் வைத்திருந்தேன். இராணுவ முஸ்லிம் பெண்கள் என்ன நினைத்தார்களோ தெரியவில்லை. அங்கு நின்ற யாவரையும் உடற்பரிசோதனை செய்யாமலே அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து வெளியேறும் போது

" நீங்க எந்த இடம்?", எனக் கேட்டேன்.

ஒருத்தி புத்தளம்.

ஒருத்தி அனுராதபுரம்.

உடற்பரிசோதனை இடத்தில் இருந்து வெளிவந்த பின் பிறிதொரு பகுதிக்கு அனுப்பப்பட்ட தோழியின் மாமியாருக்காகக் காத்திருந்தோம். ஆட்களை உள்ளே பரிசோதனைக்காக அனுப்பிக்கொண்டிருந்த ஆமிப்பெண் வேகமாகப் பேருந்துக்குப் போகுமாறு கட்டளையிட்டுக் கொண்டிருந்தாள். அவளுடைய குரலில் தெறித்த மொழியும் அழகாயிருக்கவில்லை. அவளது விழிகளும் பற்கடிப்பும் விழியசைவுகளும் அழகற்றவை. இதிகாச புராணங்களில் வரும் அரக்க பாத்திரத்தை அவள் நினைவுபடுத்தினாள்.

என்னிடம் சாப்பாட்டைப் பறித்தோடிய இளைஞனை திட்டிய ஆமிப்பெண்ணுக்கும் இந்த ஆமிப்பெண்ணுக்கும் மலையும் மடுவும் போல குணத்தில் ஏற்ற இறக்கங்கள் இருந்தன. தோற்றுப்போன வேதனையோடு வந்த மக்களை ஆதரவு செய்யும் மனநிலை சில இராணுவத்தினருக்கு இருந்தது. வெற்றி பெற்றுவிட்டோம் என்ற மமதையில், நொந்து வருந்தி வருபவர்கள் மேல் தம் வீரப்பிரதாபங்களைக் காட்டவும் இந்த ஆமிப்பெண்போல் பலர் இருந்தனர்.

தோழியின் மாமியார் மிகவேகமாக எங்களை நோக்கி வந்தார். அவரது தாடைகள் இறுகி இருந்தன. கிட்ட வந்த மனுசி 'சஞ்சி அவளவை ( இராணுவப் பெண்கள்) நிர்வாணமாக பார்த்திட்டாளவை. இப்படி அவமானப்படவோ உயிர் பிழைத்தோம் " என இறுகப் பிடித்து அழத் தொடங்கினார்.

உயரமான அந்தத் தாய் உயரம் குறைந்த என் தோள்களில் ஆதரவு தேடி தலை வைத்தழுதது வேதனையைத் தந்தது. அவரது தலையைத் தடவிவிட்டு 'வாங்கோ. இன்னும் என்ன என்னத்தை காணப்போகிறோமோ?" என்றபடி பேருந்தை நோக்கிப் போனோம்.

கணவரும் மகனும் (அப்போது நான்கு வயது) கணவரின் அத்தானும் சந்தோஸும் வந்தார்கள். அவர்கள் முகங்கள் பேயறைந்தது போலிருந்தது. நடந்து செல்லும் இடைவழியில் சொன்னார்கள் நிர்வாணமாக பார்த்தது மட்டுமன்றி அடித்ததாகவும். அதிர்ந்து விட்டேன். சந்தோஸிடம் முடியை வைத்து நிறையவே விசாரித்து விட்டார்கள். அவனது முகம் வீங்கியிருந்தது. கணவரின் அத்தானார்தான் அவர்களிருவரும் தன் அக்காவின் பிள்ளைகள் என மன்றாடிக் கூட்டி வந்திருந்தார். கணவர் பிள்ளையோடு நின்றதால் அடி குறைவு என்றும் தெரிவித்தார்கள்.

பெண்கள் எம்மிடம் சொல்லக்கூடியதையே அவர்கள் சொன்னார்கள். தோழியின் மாமியார் அறுபதைத் தொட்டுக்கொண்ட வயதைக் கொண்டவர்.

(சாட்சியம் நீளும்)

# மதத்தின் பெயரால்...!

■ தமிழரசன்



“எழுந்தார் நாதன் சாவை வென்றே
எளியோர் எமக்கு உயிர் தரவே
ஐந்திருக் காயங்கள் அன்புடன் துலங்க
ஐயமின்றி அவர் உயிர்த்தெழுந்தார்...”, அமைதி நிறைய - பக்திப் பரவசத்துடன் பாடிக் கொண்டிருக்கிறார்கள் மக்கள். தேவாலயத்தில் கூடியிருந்தவர்களுக்கு மத்தியில் ஒருவர் முதுகில் பையுடன் ஊடுருவுகிறார்... அவர் ஊடுருவிய சற்று விநாடிக்கெல்லாம் பெரும் சத்தத்துடன் அதிர்கிறது. மக்கள் தூக்கி எறியப்படுகிறார்கள்...! பக்தியும் அமைதியும் நிறைந்து வழிந்த அந்த இடத்தை அவலக்குரல்களும் அபயக் குரல்களும் நிறைக்கின்றன.

எளியவர்களுக்காக உயிர் தர எழுந்த பிரானின் சந்நிதியிலேயே குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், இளையவர்கள், முதியவர்கள் எனப் பலரும் இறந்து வீழ்ந்தனர். பலர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு தேவாலயங்களில் உயிர்த்த ஞாயிறு சிறப்பு திருப்பலி ஒப்புக்கொடுத்தலின்போதே இந்த குரூரம் இடம்பெற்றது.

3 தேவாலயங்களில் மட்டுமின்றி 3 ஐந்து நட்சத்திர ஹோட்டல்களிலும் விடுதி ஒன்றிலும் வீடு ஒன்றிலுமாக மொத்தம் 8 இடங்களில் குண்டுகள் வெடித்தன. இதில் 7 தாக்குதல்கள் தற்கொலைத் தாக்குதல்கள் என்பதே துயரம். இவ்வாறான துயரத்தை இலங்கை சுமப்பது இதுதான் முதல் தடவையல்ல. இவ்வாறான தொடர்ச்சியான சம்பவங்களால்தான் இந்து சமுத்திரத்தின் கண்ணீர் துளி என அழைக்கப்படுகின்றது இலங்கை. ஆம்...! இலங்கை என்ற நாடு அறியப்பட்ட காலத்தில் இருந்தே செந்நீரும் கண்ணீரும் சிந்தப்படும் தேசமாகவே இலங்கையை இதிகாச, புராணங்கள் கூறின. அண்மைக்காலம் வரை தொடர்ந்த தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நடந்த காலத்திலும் - அது கொடூரமான முறையில் அடக்கப்பட்ட காலத்திலும் இரத்தமும் கண்ணீரும் தோய்ந்த தேசமாகவே இலங்கை காணப்பட்டது.

முன்னர் பௌத்த - சிங்கள பேரினவாதத்தின் பெயரால் ஒலித்த மரண ஓலங்களும் அவலக் குரல்களும் இப்போது, இஸ்லாமிய மதத்தின் பெயராலும் ஒலிக்கத் தொடங்கியிருக்கிறது என்பது வேதனையானது. இந்தத் தாக்குதலை நடத்தியவர்களின் நோக்கம் என்ன? இது ஓர் பழிவாங்கல் தாக்குதலா? என எதுவும் இன்னமும் முழுமையாகத் தெரியாத நிலையே நீடிக்கிறது. ஆனால், தாக்குதல்தாரிகள் இன்னமும் தாக்குதல் நடத்துவதற்கான நடைமுறைகளையே கைக்கொண்டுள்ளனர்.






**பேரழிவே இலக்கு**

தாக்குதல்தாரிகளின் இலக்கு பெரும் அழிவை ஏற்படுத்துவதே. இதனாலேயே நேரக்கணிப்பு குண்டையும் விட தற்கொலைத் தாக்குதலை தாக்குதல்தாரிகள் தெரிவு செய்தனர். ஏனெனில், அதிகளவில் மக்கள் கூடியிருக்கும் இடத்திற்குள் செல்லவும், அதிக மக்கள் இருக்கும்போதே குண்டை வெடிக்க வைக்கவும் தற்கொலைதாரிகளாலுமே முடியும். மேலும் நேரக் கணிப்பு வெடிகுண்டையும், ரிமோட்டில் இயக்கும் வெடிகுண்டையும் வெடிக்க வைப்பது மக்கள் மத்தியில் மிகச் சவாலானது மட்டுமில்லை. பேரழிவை ஏற்படுத்த முடியாமலும் போகலாம் என்பதும்தான்.

இதனால்தான் நடத்தப்பட்ட 8 குண்டுத் தாக்குதல்களில் 7 தாக்குதல்கள் தற்கொலைதாரிகளாலேயே நடத்தப்பட்டன. மேலும், அதிகளவில் இழப்புகளை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக வெடிகுண்டில் அதிளவில் இரும்பை சேர்த்திருந்தனர் என்கின்றனர் வெடிகுண்டு நிபுணர்கள்.

**தாக்குதலாளிகள் யார்?**

இந்தத் தொடர் குண்டு வெடிப்புகள் இடம்பெற்று இரு நாட்களின் பின்னர், ஐ.எஸ். பயங்கரவாதிகள் “நாமே தாக்குதல்களை நடத்தினோம்”, என உரிமை கோரினார்கள். மேலும், தாக்குதலை நடத்தியவர்கள் எனக் கூறப்படும் 7 பேரின் புகைப்படத்தையும் வெளியிட்டார்கள். இதேநேரம் இந்தத் தாக்குதலுக்கு உள்நாட்டு அமைப்பான தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் மீது குற்றஞ்சாட்டப்படுகின்றது.

பொதுவாக ஜமாத், ஜிகாத் என்ற பெயர்களுக்கு உரிய அமைப்புக்கள் தீவிர மத அடிப்படைவாதிகள். இவர்களைப் பொறுத்தவரை, இஸ்லாமியர்கள் தவிர்ந்த ஏனைய மதத்தவர்கள் சாத்தானின் வழி வந்தவர்கள் அல்லது மிருகங்களுக்கு இணையானவர்கள் என்ற கருத்தை ஆழமாகக் கொண்டிருப்பவர்கள்.

தௌஹீத் ஜமாத் என்பதன் பெயர் அர்த்தம் ‘ஏக இறைவன்’ என்பதே. இந்த அமைப்பினரின் கருத்துப்படி ‘அல்லாஹ் ஒருவனே இறைவன்” என்பதாகும். இவ்வாறு சமயப் பொறை இல்லாத இவர்கள், தீவிர இஸ்லாமிய வழியில் இருந்து பயங்கர வழியில் இஸ்லாமைப் பின்பற்றும் ஐ.எஸ். அமைப்புடன் தொடர்பைப் பேணி வந்தனர் என தாக்குதலின் பின்னான தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன.

2016 ஆம் ஆண்டிலேயே ஐ.எஸ். அமைப்பில் பயிற்சி பெற்றவர்கள் இலங்கைக்குள் ஊடுருவ ஆரம்பித்து விட்டார்கள்.

(மறுபக்கம் பார்க்க)

அவர்களுக்கு இருந்த அரசியல் செல்வாக்கு - குறிப்பாக தேசிய தௌஹீத் ஜமாத்துக்கு இருந்த அரசியல் செல்வாக்கு இவர்கள் மீதான நடவடிக்கையில் அரசு அக்கறை காட்டவில்லை என்பது தெளிவாகிறது. ஐ.எஸ். அமைப்பில் தாக்குதல் பயிற்சிகள், வெடிகுண்டு தயாரிப்பு என்பவற்றைப் பெற்று வந்தவர்களே இந்தத் தொடர் தாக்குதல் சதியில் ஈடுபட்டார்கள்.

**மதப் பயங்கரவாதம் இதுதான் முதல் தடவையா?**

மத ரீதியான பயங்கரவாதத்துக்கு இலங்கை முகம் கொடுத்திருப்பது இதுதான் முதல் தடவை என, ஜனாதிபதி, பிரதமர், நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களும் முழங்கி வருகிறார்கள். இதில் சற்றேனும் உண்மையில்லை. ஏனெனில் இலங்கையில் தமிழருக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட அரச பயங்கரவாதம் பௌத்த - சிங்கள அதாவது மதம், இனம் என்பவை இணைந்தே காணப்பட்டன.





இதுதவிர, தமிழர்களின் உரிமைகளுக்காக ஆயுதம் தாங்கிய அமைப்புகள் உருவாக்கம் பெற்றபோது முஸ்லிம்களும் தனியான ஆயுத அமைப்புகளை ஆரம்பித்தன. இவ்வாறு ஆயுத அமைப்பு ஒன்றை ஆரம்பித்து, பின்னர் அந்த அமைப்பை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புடன் இணைத்துக் கொண்டவரே கப்டன் ஜோன்சன் என அறியப்பட்ட ஜுனைதீன். இவரே தமிழீழக் கனவுடன் சாவைத் தழுவிய முதல் இஸ்லாமிய மாவீரர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு தோன்றிய அமைப்புகளில் ஜமாத் அதே இஸ்லாமி, ஜிகாத் என்ற இரு அமைப்புகள் 1986 இல் தமிழர்களுக்கும் முஸ்லிம் களுக்கும் இனவாத அல்லது மதவாதத் தீயைப் பற்ற வைக்கும் நோக்குடன் செயற்பட்டன என்கிறார் மூத்த ஊடகவியலாளர் ஒருவர்.

தீவிர மதப் போக்கு அமைப்பினரான இவர்கள், ஒஸ்மானியக் கல்லூரியின் முன்பாக வெடிகுண்டு தாக்குதல் ஒன்றை நடத்தினர். இதில் சிறுமி ஒருவர் காயமடைந்திருந்தார். இஸ்லாமிய மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளே இத் தாக்குதலை நடத்தினர் என இந்த அமைப்பினர் திட்டமிட்டு தகவல் பரப்பினர். இதையடுத்து ஆர்பாட்டங்களில் மக்கள் ஈடுபட்டனர். தகவல் அறிந்த அப்போதைய யாழ். மாவட்ட தளபதியான கேணல் கிட்டு இது தொடர்பில் விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிய அரசியல்துறைப் பொறுப்பாளர் தியாகி லெப். கேணல் திலீபனை அனுப்பி வைத்தார்.

மக்களின் ஒத்துழைப்பை பெற்றுக் கொண்டு விசாரணைகளில் ஈடுபட்ட திலீபன், சில மணி நேரங்களிலேயே இத் தாக்குதலை நடத்தியவர்கள் அல் இஸ்லாமிக் அமைப்பினரே எனக் கண்டறிந்தார். அவர்களிடம் இருந்து வெடிபொருட்களையும் கைப்பற்றினார். மக்கள் முன்னிலையில் சம்பந்தப்பட்ட அமைப்பினரை நிறுத்திய அவர், அந்த அமைப்பை தடை செய்து, இங்கிருந்து கலைத்தனர். இதுவே மதப் பயங்கரவாதத்தை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்ட முதல் தாக்குதல் என்கிறார் அவர்.

**ஜிகாத்தை அடக்கிய புலிகள்**

இதேபோன்று, 2002 - 2006 சமாதான காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தில் ஜிகாத் அமைப்பு தோற்றம் பெற்றிருந்தது. பாகிஸ்தானில் பயிற்சி பெற்ற இவர்கள் மூதூர் முழுமையாக முஸ்லிம்களுக்கு சொந்தமானது என உரிமை கொண்டாடி 2006 இல் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த மூதூர் பகுதிக்குள் தாக்குதல் நடத்தினார்கள். இதற்கு இலங்கை அரசும் இராணுவமும் பூரண ஆதரவு வழங்கியது.

விடுதலைப் புலிகளுடன் மோதிய ஜிகாத் அமைப்பினர் அப்போரில் தோல்வி கண்டனர். அவர்களில் ஒரு தொகையினர் புலிகளிடம் உயிருடன் பிடிபட்டனர். இறுதியாக அவர்களின் ஆயுதங்கள் களையப்பட்டு, மிகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டு அவர்கள் மூதூரை விட்டு விரட்டப்பட்டனர். இச்சம்பவம் நடந்த சில நாள்களிலேயே புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையே தாக்குதல்கள் ஆரம்பித்து விட்டன.

இப்போது அரசாங்கம் கூறுவதுபோல், மதப் பயங்கரவாதத்தை இலங்கை சந்திப்பது இதுதான் முதல் தடவையல்ல. மதப் பயங்கரவாதத்தை முதலில் கையில் எடுத்தது அரசாங்கமே. இஸ்லாமிய மதப் பயங்கவாதம் எழுந்தபோது, அது விடுதலைப் புலிகளால் வெற்றிகரமாக அடக்கப்பட்டது என்பதே உண்மை.

விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட நிலையில், பெருந்தொகை இராணுவம் வடக்கு, கிழக்கில் முடக்கப்பட்ட நிலையில் தேசிய பாதுகாப்புக் குறித்து ஆட்சியாளர்களால் சிந்திக்க முடியவில்லை. தென்னிலங்கையில் - சிங்கள மக்கள மத்தியில் இராணுவப் பிரசன்னத்தை விரும்பாத அல்லது நாடு முழுவதும் இராணுவச் சமநிலையை பேண மறுத்ததன் விளைவாகவும் இதனை நோக்க முடியும்.

**அதிகார மோதலும் அசண்டையீனமும்**

2015 ஆட்சி மாற்றத்துக்காக ஒன்றிணைந்த ரணில் - மைத்திரி இடையே ஏற்பட்டுள்ள முரண்பாடு இதன் விளைவாகத் தோன்றிய அதிகார மோதலும் இந்தத் தொடர் தாக்குதலுக்கு வழி சமைத்தது எனக் கூறினும் தவறாகாது.

இவ்வாறான தாக்குதல் ஒன்று இடம்பெறலாம் என ஒரு வாரத்துக்கு முன்னதாகவே உள்நாட்டு உளவுத் தகவல்களும், இந்திய உளவு அமைப்பான றோவும் எச்சரித்தும்கூட அதுபற்றி எந்த நடவடிக்கையும் அரசாங்கம் எடுக்கவில்லை. ஜனாதிபதி - பிரதமர் அதிகார மோதல் உச்சம் பெற்றதால் இத்தாக்குதல் குறித்துத் தகவல் கிடைத்தும் அது கண்டுகொள்ளப்படவில்லை. இதன் மூலம் ஒருவரை ஒருவர் பதவியை விட்டு விரட்டிவிடலாம் என்பதுகூட அவர்களின் ஓர் எண்ணமாக இருந்திருக்கலாம்.

ஏனெனில் இத்தாக்குதலைத் தொடர்ந்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் ஒருவரை ஒருவர் சாடுவதும், ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றத் துடிப்பதுமான கருத்துக்களையே வெளியிட்டு வருகின்றனர். இன்னொரு வகையில் இது இஸ்லாமியர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடுவதற்கான வழியாக இது இருக்குமா என்ற சந்தேகம் எழுவதையும் தவிர்த்து விட முடியாது.

**அச்சுறுத்தப்படுமா இஸ்லாமிய சமூகம்?**

தமிழர்களின் அரசியல் உரிமைப் போர் வலிந்து அடக்கப்படுவதற்காக 30 ஆண்டு போரில் - சுமார் 3 இலட்சம் தமிழர்கள் அழிக்கப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் அங்கவீனர்களாக ஆக்கப்பட்டனர். பல நூற்றுக்கணக்கானோர் காணாமல் ஆக்கப்பட்டனர். பல இலட்சம் பேர் சொந்த நாட்டில் இருந்து புலம்பெயர்ந்தனர். இதேபோன்று பல ஆயிரக்கணக்கானோர் சொந்த நாட்டுக்குள்ளேயே ஏதிலிகளாக இடம்பெயர்ந்தனர்.

உரிமை கேட்ட தமிழினத்துக்கு எதிராக பௌத்த - சிங்கள பேரினவாத அரசாங்கம் மேற்கொண்ட இந்நடவடிக்கைகள் முடிவுக்கு வந்து 10 ஆண்டுகள் கடந்து விட்டன. போரின் முடிவு இரண்டாவது சிறுபான்மையினமான ஈழத் தமிழர்கள் மூன்றாவது சிறுபான்மை இனமாகும் அபாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. இந்நிலையில் இரண்டாவது சிறுபான்மை இனமாக பெருவளர்ச்சி பெற்றுவரும் முஸ்லிம் களுக்கு எதிராக பௌத்த - சிங்கள இனவாதிகள் ஏற்கனவே கருத்துக்களை தீவிரமாகப் பரப்பி வந்தனர்.

இதன் அடுத்த கட்டமாக அளுத்கம, அம்பாறை, கண்டி - திகன கலவரங்கள் வெடித்திருந்தன. இவ்வாறான நிலையில், பழிவாங்கும் விதத்திலும் இந்தத் தாக்குதல் நடவடிக்கைகள் அமைந்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு.

எது எப்படி இருப்பினும் இப்போது தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது, நாட்டின் தலைநகர் மற்றும் அதை அண்டிய பகுதியில் மட்டுமல்ல, தாக்குதல் நடத்தப்பட்ட கொழும்பு கொச்சிக்கடை, நீர்கொழும்பு பகுதிகளில் அதிகளவில் தமிழர்களே வசிக்கின்றனர். மட்டக்களப்பில் அதிகப் பெரும்பான்மையினர் தமிழர்களே. இந்தத் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்களும் அதிகளவிலானோர் தமிழர்களே என்பதும் சில சந்தேகங்களை ஏற்படுத்துகின்றன. அது இஸ்லாமிய மதப் பயங்கரவாதம் என்பதையும் தாண்டிய ஒரு விடயம் ஏதோ ஒன்று உள்ளது என்பதே...!

ஆனால், அனைவரும் ஒரு விடயத்தை மட்டும் கவனத்தில் கொள்ள வேண்டும். இஸ்லாமிய பயங்கரவாதிகள் - அடிப்படைவாதிகள் சொல்வதுபோல் 'இஸ்லாத்துக்காக உயிர் துறப்பவர்கள் அல்லாஹ்விற்கு பிரியமானவர்கள். அவர்களுக்கு சுவர்க்கத்தில் அல்லாஹ்வின் அருகில் இடம் இருக்கும்", என்பது மட்டும் உண்மையில்லை. அவர்களுக்கு நரகத்திலும் கடைகெட்ட இடமே காத்திருக்கிறது. ஏனெனில், அன்பின் வழியே இஸ்லாம்.

# மின்சார மகிழுந்தில் சாதனை

புறச்சூழல் மாசடையாமல், தெரு வாகனங்கள் எல்லாம் இனி மின்சாரமய மாகப் போகின்றன. உலகின் இராட்சத மோட்டார் வாகன உற்பத்தி நிறுவ னங்கள், பெற்றோல், டீசலில் ஓடும் கார் உற்பத்திகளை ஒரேயடியாக நிறுத்திவிடும் காலம் வெகுதூரத்தில் இல்லை.

ஒல்லாந்து நாட்டவர் ஒருவர் மின்சாரத்தில் இயங்கும் தனது கார் மூலம், 95,000 கி.மீற்றர் தூரத்தை ஓடி முடித்து சாதனை படைத்துள்ளார். இவரது பெயர் வக்கார். The Blue Bandit எனப் பெயரிடப்பட்ட தனது மகிழுந்தை 33 நாடுகளூடாகச் செலுத்தி, ஒரு மின்சார மகிழுந்து மூலம் அதி உச்ச பயண தூரமாக 95,000 கி.மீற்றரை ஓடிமுடித்துள்ளார்.


நெதர்லாந்தில் ஆரம்பித்த இவர் பயணம், அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் முடிவடைந்தது. வெவ்வேறு புறச்சூழல் கொண்ட துருக்கி, ஈரான், இந்தியா, மயன்மார், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுகளூடாகவும் இவரின் பயணம் இடம்பெற்றுள்ளது. தூரம் மட்டுமல்ல புறச்சூழல்கூட காரின் இயக்கத்தைப் பாதிக்காது என இதன்மூலம் அவர் நிரூபித்துள்ளார்.



# நிறம் மாறும் "ஜேம்ஸ் பொண்ட்"

கிளுகிளுப்பூட்டும் அழகிகள், ஒன்றையொன்று துரத்தும் ஆடம்பரக் கார்கள், கோடிகளை உருட்டும் சூதாட்டக் கிடங்குகள் என்று அசத்தும் ஜேம்ஸ் பொண்ட் திரைப்படத்தின் கதாநாகனாக, கறுப்பு இனத்தவர் ஒருவரை, முதற்தடவையாக அறிமுகப்படுத்தப் போகிறார்கள். தற்போதைய நடிகர் டானியல் கிரெயிக்குக்கு பின்னர் ஒரு புதியவருக்கு கதவு திறக்கும் என்கிறார் திரைப்படத் தயாரிப்பாளர் புரொக்கொலி.

ஏற்கனவே 4, 007 திரைப்படங்களில் நடித்துவிட்ட டானியல் கிரெயிக்கின் புதிய பொண்ட் திரைப்படம், ஒக்ரோபர் 25இல் வெள்ளித் திரைக்கு வரலாம் என்று சொல்லப்படுகின்றது. பலர் பெயர் அடிபட்டாலும், இட்ரிஸ் எல்பா என்பற கறுப்பு இனத்தவருக்கே அடுத்த பொண்டாகும் வாய்ப்பு இருக்கின்றது. இதே சமயம் முதன் முதலாக 1962 இல் வெளிவந்த "டொக்டர் நோ" என்ற ஜேம்ஸ் பொண்ட் படக் கதாநாயகி ஒயினிஸ் கேசன், தனது 90 ஆவது வயதில் மரணமாகி இருப்பது பிந்திய செய்தி.





# ஐரோப்பாவின் அதி பலசாலி

ஐரோப்பாவின் மிகவும் பலசாலியானவரைத் தேர்வு செய்யும் போட்டி நிகழ்வு, இங்கிலாந்தின் லீட்ஸ் நகரில் கடந்த 6 ஆம் திகதி இடம்பெற்றது. நீண்ட மரக்குற்றிகளை தூக்கும் போட்டி முதலில் இடம்பெற்றது. 220கிலோ எடைகொண்ட ஒருஇராட்சத மரக்குற்றியைத் தூக்கி புதிய சாதனை படைத்திருக்கிறார். அயர்ன் பிபி என்பவர்.

இது ஒரு நிகழ்வுதான், இப்படி பல வேறுபட்ட நிகழ்வுகளில் பல பலசாலிகள் தெரிவாகி இருக்கிறார்கள். தொடர்ந்து 5 மணி நேரம் 25 தொன் எடை கொண்ட டிரக் வண்டியை இழுத்து பயிற்சி எடுக்கும் இந்தப் பலசாலிகள், பச்சை முட்டைகளை குடிப்பதோடு, குதிரை இறைச்சியையும் சாப்பிடுகிறார்கள்.

25வருட கால சரித்திரத்தைக் கொண்ட இந்தப் போட்டிகளில் பங்குபற்ற நல்ல பயிற்சியும் சத்துள்ள உணவும் தேவை என்கிறார்அயர்லாந்தின் பலசாலியான மான் பா என்பவர். போட்டிகளுக்கு தன்னைத் தயார்படுத்திக் கொள்ள தினமும் 10,000 கலோரி சக்தி கொண்ட உணவை உண்டு வருகிறேன் என்கிறார் இந்த அதிசய மனிதர். அதாவது நாளொன்றுக்கு ஏழு அல்லது எட்டு தடவைகள் உண்ண வேண்டும் என்கிறார் இவர். கொழுப்பு குறைவாகவும், புரதம் அதிகமாகவும் உள்ள குதிரை மாமிசத்தையே அதிகம் உண்கிறாராம்.



# 24 மணி நேரம் : 600 மி.யூரோ

பிரான்ஸ் தலைநகர் பரீஸில் எரியுண்ட தேவாலயம் பற்றிய தகவல்கள் நம்மை வியப்பின் உச்சிக்கு கொண்டு செல்கின்றன. 1200 இல் நிர்ணமாக்கப்பட்ட இந்தத் தேவாலயத்துக்கு தேவையான மரத் தளபாடங்களை தயார் செய்யவே 50 ஆண்டுகள் எடுத்தனவாம்.

முதலில் தறித்து வீழ்த்தப்பட்ட மரங்கள், வடக்கு நோக்கி ஒன்றன் மேல் ஒன்றாக , பூமியின் சக்தியை கிரகிக்க, அடுக்கி வைக்கப்பட்டன. அடுத்த கட்டமாக இந்த மரங்களின் பட்டைகள் அகற்றப்பட்டு, ஒரு சதுப்பு நிலத்தில் 25 வருடங்கள் புதைக்கப்பட்டன. பூச்சி அரிப்புகள், பூஞ்சை என்பவற்றிலிருந்து பாதுகாக்கவே இந்த ஏற்பாடு. 1225 இல்தான் மரங்கள் பலகைகளாக, குறுக்கு கம்பங்களாக அறுக்கப்பட்டனவாம்.

மீண்டும் இந்த மரங்கள் எல்லாம் 25 வருடங்கள் வெயிலில் காயவிடப்பட்டன. மரத்தை வெட்டியவர்கள், தேவாலயத்தின் கூரை நிர்மாணத்தை நேரில் பார்க்க உயிரோடு இருந்திருக்க மாட்டார்கள் என்கிறார் ஒருவர். அது அப்படியிருக்க, இந்த 850 வருட தேவாலயத்தை மீளக் கட்டியெழுப்ப, நாலா பக்கங்களிலும் இருந்து உடல் உதவிகள் வந்து குவிகின்றன. தேவாலயம் எரியுண்ட 24 மணி நேரத்தில் 600 மில்லியன் யூரோக்கள் வந்து சேர்ந்துள்ளன.

# இலையிலே கலைவண்ணம்

வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்... ஒரு நல்ல கலைஞன் சிறிய இலையிலும் தன் கலைவண்ணத்தைக் காட்டலாம். சோவியத் ஒன்றியத்திலிருந்து பிரிந்த கஸகஸ்தான் நாட்டு கலைஞர் ஒருவர் இலைகளில் அழகிய உருவங்களை செய்து அசத்துகிறார். இலைகள் பழுத்து வாடி விழுந்து அழிந்து போகும் தன்மையைக் கொண்டிருந்தாலும், அவற்றிற்கு உயிர் அளித்து இன்னொரு வாழ்வு கொடுக்க என்னால் முடியம் என்கிறார் இவர்.

இலைகள் மூலம் தனிக்கதை சொல்லும் இவர், இலையை கத்தரித்து , உருவாக்கும்



ஓவியங்கள் அசர வைக்கின்றன. முதலில் பொருத்தமான இலையைத் தேடியெடுத்து, அதை ஒரு தடித்த தாளில் ஒட்டியபின் தன் பணியை ஆரம்பிக்கிறார் இந்த ஓவியக் கலைஞர். நூர்ராஸின் என்பது இவர் பெயர். சீனாவின் 'சினார்' என்ற மர இலைகளையே இந்த ஓவிய வேலைக்கு பயன்படுத்துகிறார்கள். இந்த ஓவியம் நிலைக்க, 60 இற்கும் மேற்பட்ட வழிமுறைகளைக் கையாளுவதாகவும், சீனாவில் இந்த இலை ஓவியக் கலை, மிகப் பிரபல்யமாகி வருகிறது.

# வாரபலன்

### மேடம்
இவ்வாரத்தில் உங்கள் அந்தஸ்து உயரும். தடைகள் விலகி நலம் காண்பீர்கள். உங்களின் தெளிவான சிந்தனைகளை மற்றவர்கள் பாராட்டுவார்கள். உடல் ஆரோக்கியம் பலப்படும். குடும்பத்தில் சந்தோஷம் நிறையும். உத்தியோகத்தர்கள் விரும்பிய இடமாற்றத்தை பெறுவர்.

### துலாம்
இவ்வாரம் நிதி நிலமையில் வளர்ச்சி ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். திட்டமிட்ட செயல்களில் வெற்றி உண்டாகும். எவருக்கும் பிணை நிற்கவேண்டாம். அரசியல்வாதிகளுக்குப் பொதுச்சேவையில் அனுகூலமான திருப்பங்கள் ஏற்படும்.

### ரிஷபம்
இவ்வார பலனின்படி குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகள் கல்வியில் முன்னேறுவர். உங்கள் திறமைகள் வெளிப்படும் வாரம் இது. பயணங்களில் புதிய அனுபவங்கள் காண்பீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்கள் உழைப்புக்குத் தகுந்த ஊதியத்தைப் பெறுவர்.

### விருச்சிகம்
இவ்வாரம் உங்களுக்குக் கவலைகள் குறையும். உடல் ஆரோக்கியத்தில் சீரான நிலைமை தென்படும். உறவினர்களிடம் எதிர்பார்த்த ஆதரவைப் பெறுவீர்கள். குடும்பத்தில் சுபகாரியங்கள் நடக்கும். பொருள் வரவும் சிறக்கும்.

### மிதுனம்
இவ்வாரம் குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். அவ்வப்போது சிறு விரயங்களையும் சந்திப்பீர்கள். செய்தொழிலில் கடின உழைப்பை மேற்கொள்ளலாம். பயணங்கள் புதிய அனுபவங்களைத் தரும். உத்தியோகஸ்தர்கள் எதிர்பார்த்த உதவிகளைப் பெறுவீர்கள்.

### தனுசு
இவ்வாரம் ஆற்றல் அதிகரிக்கும். உங்கள் செயல்கள் திட்டமிட்டபடியே நடந்தேறும். உற்றார் உறவினர்களால் மகிழ்ச்சி கூடும். இடையூறுகள் மற்றும் குழப்பங்கள் ஏற்பட்டாலும் இறுதியில் முடிவு சாதகமாகவே அமையும்.

### கடகம்
இவ்வாரத்தில் நீண்டகாலமாக நடைபெற்றுவந்த வழக்குகள் முடிவடையும். உடன்பிறப்புக்கள் நன்மையளிப்பார்கள். பிணக்குகள் நீங்கும். வரவேண்டிய பணம் எவ்வகையிலாவது வந்து சேரும். விவசாயிகளுக்கு வரவு நன்றாக இருக்கும்.

### மகரம்
இவ்வாரம் நீங்கள் பயணங்களால் நன்மைகள் அடைவீர்கள். திட்டமிட்ட காரியங்களை குறிப்பிட்ட காலத்திற்குள் செய்து முடிப்பீர்கள். தெய்வ வழிபாட்டில் மனதைச் செலுத்துவீர்கள். உத்தியோகஸ்தர்களுக்கு பிரச்சினைகள் குறையும்.

### சிம்மம்
இவ்வாரம் உங்களுக்கு உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கும். பொருளாதாரம் சீராக இருக்கும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். மதிப்பு மரியாதை உயரும். தேவைக்கேற்ப பிறர் உதவுவார்கள். வியாபாரிகள் வருமானத்தைப் பெருக்க முயற்சி செய்வர்.

### கும்பம்
இவ்வாரம் உங்கள் செயல்களுக்கு அங்கீகாரம் கிடைக்கும். கவனத்துடனேயே வேலைகளைச் செய்து வரவும். விவசாயிகள் நல்ல லாபத்தைக் காண்பார்கள். பொறுப்புடன் நடந்து கொண்டு காரியங்களைச் சாதித்துக் கொள்ளவும். குடும்பத்தில் ஒற்றுமை கூடும்.

### கன்னி
இவ்வாரம் எடுத்த காரியங்கள் யாவும் வெற்றியடையும். பொருளாதார நிலை சீராக இருக்கும். இல்லத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். உறவினர்களின் மூலம் சிறு தொல்லைகள் ஏற்படலாம். மாணவர்கள் படிப்பில் அக்கறை செலுத்தவும்.


### மீனம்
இவ்வாரம் வெற்றிகள் எளிதாக உங்களைத் தேடி வரும். குடும்பத்தினரிடம் அன்பும் பாசமும் அதிகரிக்கும். புதிய வாகனங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் நன்றாக அமையும். தெய்வ அனுகூலம் இருக்கும்.



கல்வியங்காடு கிராம சேவையாளர் (J/259) பிரிவில் 2004 -2018 வரை கடமையாற்றி பணி இடமாற்றம் பெற்றுச் சென்ற கிராம சேவையாளர் சி.சுபாகரனுக்கான சேவைநலன் பாராட்டு விழா கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் சி.அண்ணாதுரை தலைமையில் அண்மையில் ஞானபாஸ்கரோதய சங்க மண்டபத்தில் இடம்பெற்றபோது...






நாட்டை உலுக்கிய தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்காக நாடெங்கிலும் அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

ஹலோ குட்டீஸ்
தொகுப்பு - எஜெனி -
புதுப்பிதி

# முட்டைத் திருட்டு




ஒரு கொக்கு இடுகின்ற முட்டைகளை எல்லாம் ஒரு நாகபாம்பு எப்படியோ தேடி எடுத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தது. தான் இடுகின்ற முட்டைகளை பாம்பு திருடி உண்கின்றதே என்ற கவலையோடு, கொக்கு தன் நண்பனான ஒரு நண்டிடம் சென்றது. தன் பிரச்சினையை அதனிடம் கூறியது. நண்டும் ஒரு தீர்வைச் சொல்லி வைத்தது. கீரியொன்று வாழும் வளையிலிருந்து, பாம்புப் பொந்துவரை வரிசையாக மீனைப் போட்டு வைக்கச் சொல்லியது. கொக்கும் அதன்படியே செய்தது. தன் வளையிலிருந்த மீனை ஆச்சரியத்தோடு சாப்பிட்ட கீரி, தன் அதிஷ்டத்தை நினைத்து மகிழ்ந்தது. தொடர்ச்சியாக தனக்கு சாப்பிட வழிநெடுக மீன்கள் கிடந்தமை அதற்கு மகிழ்ச்சியை இரட்டிப்பாக்கியது. பாம்பின் புற்றருகே வந்தபோது பாம்பு சீறியது. கீரி கோபத்தோடு பாம்புடன் சண்டையிட்டு, அதனைக் கடித்துக் குதறியது. முடிவில் பொந்தருகே இருந்த மீனையும் சாப்பிட்டபடி சென்றது.

திருட்டுப் பிழைப்பு என்றுமே ஆபத்தானதுதான்.

# திருக்குறளின் அதிசயங்கள்



1. திருக்குறளில் தமிழ் என்ற சொல் பயன்படுத்தப்படவில்லை
2. திருக்குறளில் உள்ள மொத்த எழுத்துக்கள் 42,194
3. திருக்குறளில் தமிழ் எழுத் துக்கள் 247இல். 37 எழுத்துக்கள் மட்டும் இடம்பெறவில்லை.
4. திருக்குளில் இரு மலர்களே இடம்பெறுகின்றன-"அனிச்சம்", "குவளை"
5. திருக்குறளில் இடம்பெறும் ஒரே பழம் "நெருஞ்சிப் பழம்"
6. திருக்குறளில் இடம்பெறும் ஒரே விதை "குன்றிமணி"

# விடுகதை

1. ஊர் உறங்கினாலும் வீடுகளில் ஓடிப்பிடித்து விளையாடுபவர்கள் யார்?
2. நான்கு கால்கள் இருந்தாலும் வால் இல்லாதவன் யார்?
3. கடல் நீரினால் வளருவான். மழை நீரினால் அழிவான். யார் இவன்?
4. ஊரைச் சுமந்து ஊளையிடுவது எது?
5. உலகில் மெலிந்தவன். உடுப்பைக் காப்பவன் .யார் அது?

**விடைகள்**
1. சின்ன முள், பெரிய முள் 2. நாற்காலி 3. உப்பு 4. ரயில் 5. ஊசி



# அலுவலக வாசஸ்தலம் எங்கே இருக்கின்றது?

1. இந்திய ஜனாதிபதி
2. இலங்கைப் பிரதமர்
3. பிரித்தானிய பிரதமர்
4. அமெரிக்க ஜனாதிபதி
5. பாப்பரசர்

**விடைகள்**
1.ராஸ்டிரபதிவான் - புது டில்லி 2. அலரி மாளிகை - கொழும்பு. 3. 10ஆம் இலக்கம் டவுனின் வீதி
4. வெள்ளை மாளிகை - வாஷிங்டன்
5. வத்திக்கான் - ரோம்

# கேள்விக்கென்ன பதில்?

1. புதிதாகப் பிறந்த ஒரு கங்காருக் குட்டியின் நீளம் என்ன?
2.புலிகள் அதிகமாக உள்ள கண்டம் எது?
3. உலகில் தோன்றிய முதல் உயிரினம் எது?
4. மிகத் தடிப்பான தோல் கொண்ட விலங்கு எது?
5. மிக மெதுவாக இயங்கும் பாலூட்டி எது?







**விடைகள்**
1. 25செ.மீ
2. ஆசியா 3. அமீபா
4. திமிங்கலச் சுறா
5. தேவாங்கு




# நோபல் பரிசு 6

நோபல் பரிசு பெறுபவர்களை தேர்ந்தெடுக்கும் உரிமை, அரசாங்கங்கள், சர்வதேச நீதிமன்ற உறுப்பினர்கள், பேராசிரியர்கள், கல்லூரி தலைவர்கள், முன்னாள் அமைதிக்கான நோபல் பரிசு பெற்றவர்கள் ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டு, அவர்களால் பரிந்துரை செய்யப்படுபவர்களின் விபரங்கள் நோபல் குழுவிற்கு அனுப்பப்பட்டு, அதன்பின்னர் ஆலோசனைகள் இடம்பெற்று, சாதனையாளர்களுக்கான நோபல் பரிசுகள் தனிநபர்களுக்கு வழங்கப்படுகிறது. இதேவேளை எல்பிரட் நோபல் குறிப்பிட்டதற்கு மேலதிகமாக கடந்த 1968ஆம் ஆண்டு முதல், சுவீடனால் பொருளியலுக்கான நோபல் பரிசு இதனுடன் இணைத்துக்கொள்ளப்பட்டது. அதற்கமைய வருடந்தோறும் எல்பிரட் நோபலின் நினைவு தினமான டிசெம்பர் மாதம் 10ஆம் திகதி, நோபல் பரிசுகள் வழங்கப்படுகின்றன. பிரதான நிகழ்வு சுவீடனிலுள்ள ஸ்டொக்ஹொம் நகரில் இடம்பெறுவதோடு, அமைதிக்கான நோபல் பரிசு மாத்திரம் நோர்வேயிலுள்ள ஒஸ்லோ நகரில் வழங்கப்படுகிறது. நோபல் வாழ்ந்த காலத்தில் நோர்வேயும், சுவீடனும் ஒரே நாடாக இருந்ததன் காரணமாகவே இவ்வாறு நோபல் பரிசு பிரித்து வழங்கப்படுகிறது. (முற்றும்)

# 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்





## அரசியல் + பணம் + ஆயுதம்

# விலகாத மர்மங்கள்

நோக்கன்

'நீண்டகாலம் நடந்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர எமக்கு உதவிய முஸ்லிம்களுக்கு நன்றி", என கடந்த ஆண்டு கடற்படைத் தளபதி தெரிவித்திருந்தார். ஒரு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர உதவிய முஸ்லிம்கள் இன்னுமொரு யுத்தத்தை ஆரம்பித்திருக்கிறார்கள் என்கிறார்கள் மக்கள். இதில் யார் யாருக்கு நன்றி சொல்லப் போகிறோம். இப்படிப்பட்ட குழப்ப நிலைகள் தோன்றுவதால் அதிக லாபத்தை ஈட்டக்கூடியவர்கள் யார்? அவர்கள் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டவர்களுக்கு நன்றி சொல்வார்களா?

இலங்கையில் நீண்ட காலமாக நடைபெற்ற யுத்தத்திற்குப் பின்னர் நாடு வழமைக்குத் திரும்பி இருப்பதாக மக்கள் நம்பியிருந்த வேளையில் அனைவரினதும் நம்பிக்கையைத் தகர்த்தெறிவதாகக் கடந்த ஈஸ்டர் திருநாள் தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற்றிருக்கின்றன.

தாக்குதல்களில் ஈடுபட்டவர்களில் அனைவரும் முஸ்லிம்கள். தமது மதத்தின் மீது அளவுகடந்த நம்பிக்கை கொண்டவர்கள். முஸ்லிம்களைத் தவிர வேறு மதத்தவர்கள் இப்பூமியில் வாழத் தகுதியற்றவர்கள் என்று அதிகம் நம்புகின்றவர்கள். எனவே முஸ்லிம்கள் அல்லாதவர்களை அழித்தொழிப்பது தமது மதக்கடமை என்று நம்புகின்றவர்களிடம் மனித நேயத்தை எதிர்பார்க்கலாமா? பிற மதத்தவர்கள் பற்றிய மேம்பாட்டை கொண்டவர்களாக எண்ணலாமா?


தற்கொலைத் தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் உறுப்பினர்கள் என அடையாளங் காணப்பட்டுள்ளனர். இந்த அமைப்பு மட்டக்களப்பு - காத்தான்குடியிலேயே இருப்பதற்கான ஆதாரத்தை இணையச் செய்திகள் வெளியிட்டிருக்கின்றன. அத்துடன் இவ்வமைப்பின் தலைவராக அடையாளம் காணப்பட்டவர் தற்கொலைக் குண்டினைத் தரித்து கொழும்பிலுள்ள நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் தாக்குதலை மேற்கொண்டவர் என்றது குறிப்பிடத்தக்கது.

அவர் கிழக்கு மாகாண ஆளுநருடனும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வுடனும் சேர்ந்தெடுத்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகியிருக்கிறது. இதன் மூலம் குறிப்பிட்ட அந்த நபரும், அவரின் அமைப்பின் அரசியல் பின்னணியும் அவர் கொண்ட செல்வாக்கினை நமக்கு உணர்த்துபவைகளாகவுள்ளன.

இலங்கையில் பெரும்பான்மை இனத்தவர்களாக இருக்கின்ற சிங்கள மக்களின் உணர்வுகளில் கலந்துள்ள புத்தபிரானின் சிலைகளை உடைத்து நொருக்கியதற்காகக் கைது செய்தவனை திறந்து விடுவதென்பது இலேசான காரியமா? இதையே ஒரு தமிழன் செய்திருந்தால்..?

அப்படிக் கைது செய்யப்பட்டவனே சில நாட்களுக்குப் பின்னர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொள்ள மூல காரணமானவனாகவும், தானும் குண்டுத் தாக்குதலை மேற்கொண்டு மரணித்துப் போனவனாகவும் இருக்கும் பட்சத்தில்... இக் குண்டுத்தாக்குதல்களையும் அதன் பின்னிலுள்ள அரசியலையும் விளங்கிக் கொள்ளுவது சற்றுக் கடினமான காரியமாக இருக்கிறது. இலங்கை அரசியலிலுள்ள முஸ்லிம்களின் பங்களிப்பை என்ன வென்று முற்றாக அறிந்தே இக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்ட முஸ்லிம் அணி செயற்பட்டிருக்கிறது. தற்போதைய அரசின் பலவீனத்தை அவர்கள் நன்றாகப் பயன்படுத்தி இருக்கிறார்கள். இப்படிப்பட்ட குண்டு வெடிப்புகள் தொடர்பான விசாரணைகளும், அவற்றை முன்னெடுப்பதிலுள்ள அரசியல் சவால்களையும் அரசு எப்படிச் சமாளிக்கப் போகிறது? இவை தொடர்பான விசாரணைகளில் அவர்களால் காத்திரமான முடிவுகளை மக்களுக்குக் கொடுக்க முடியுமா?

தம்முடன் சேர்ந்திருக்கின்ற முஸ்லிம் அரசியல்வாதிகளுடனான உறவை முறித்துக் கொண்டு அவர்களால் செயற்பட முடியுமா? ஏனெனில் குண்டுதாரிகளின் பின்னணியிலுள்ளவர்கள் பற்றி வெளிவரும் செய்திகளால் மக்கள் அதிர்ந்து போயிருக்கிறார்கள். முஸ்லிம் அரசியல்வாதிகள் அவர்கள் பின்னணியிலுள்ளார்கள் என்ற கசப்பான செய்தி தற்போது மெல்லக் கசியத் தொடங்கிவிட்டதே!



வட பகுதியில் எறிகுண்டின் பழைய ஓடுகளைத் தோண்டித் தோண்டி எடுக்கின்ற படையினரும், புலனாய்வுப் பிரிவினரும் நடைபெற்ற குண்டுத் தாக்குதல்கள் பற்றி முன்கூட்டியே அறிந்திராதது ஏன்? தற்கொலைத் தாக்குதல்களில் பாவிக்கப்பட்ட குண்டுகளைத் தயாரித்ததாகச் சந்தேகிக்கப் படும் செப்புத் தொழிற்சாலை ஒன்றினை பாதுகாப்புத்துறையினர் கண்டுபிடித்துள்ளார்கள் எனத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்சாலையானது கொழும்புக்கு அடுத்துள்ள வெல்லம்பிட்டிய என்ற இடத்திலிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தத் தொழிற்சாலையானது நான்கு குழந்தைகளுக்குத் தந்தையான இன்சாப் அகமட் என்ற இஸ்லாமியருக்குச் சொந்தமானது. அவர் ஒரு நடுத்தர வர்க்கத்திலிருந்து வந்தவர். அவர் ஏறத்தாழ இரண்டு கோடி ரூபா பெறுமதியான புதிய வெள்ளை லான்ட் குறூசர் வாகனத்துக்குச் சொந்தக்காரர். அவர் எப்பொழுதும் அமைதியாகவும் ஆன்மிகவாதியாகவும் காணப்படுபவர் என்றும் அவர் ஒரு போதும் இஸ்லாமியன் என்று அடையாளப்படுத்தக் கூடிய உடைகள் எதையும் அணிவதில்லை என்றும் அவரின் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒரு தொழிலாளி தெரிவித்தார். அவரது அந்தத் தொழிற்சாலையில் பணியாற்றியவர்கள் அனைவரும் வெளிநாட்டில் இருந்து வருவிக்கப்பட்ட இஸ்லாமியர்கள்.

தொழிலாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 150 அமரிக்கன் டொலர்களைச் சம்பளமாக வழங்கி இருந்தார். அவர் தினமும் தொழிற்சாலைக்கு வந்து போவார் என்றும் இருபது நிமிடங்கள் மட்டுமே பேசுவார் என்றம் அதுவும் மனேஜருடன் மாத்திரமே பேசுவார் என்றும் பங்களாதேசிலிருந்து வந்து அங்கு தொழிலாளியாகவுள்ளவர் தெரிவித்தார். அவர் யாருடனும் தன்னை இணைத்துப் புகைப்படம் எடுக்க அனுமதித்ததில்லை என்றும் அதற்குக் காரணமாக சமய ஒழுக்கத்தையும் கோட்பாடுகளையும் சொல்லுவார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

இன்சாப் அகமட் என்பவரே சினமன்ட் கிறாண்ட் என்ற நட்சத்திர ஹோட்டலில் குண்டை வெடிக்கச் செய்தவர். அவர் கடந்த வெள்ளி 19.04.2019 அன்று தான் சிம்பாவே என்ற நாட்டுக்கு வியாபார அலுவல்கள் நிமித்தம் செல்வதாகச் சொல்லிச் சென்றவர். அவர் குண்டு வெடிக்க வைத்த ஞாயிறன்று காலை 7.30 மணியளவில் தனது மனைவியைக் கடைசியாக அழைத்துப் பேசியிருந்தார். அப்போது அவர் தான் சிம்பாவேயில் நலமாக இருப்பதாகவும் தெரிவித்திருந்தார். அவரின் சகோதரனான இல்காம் என்பவரே சங்கரில்லா ஹோட்டலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஈடுபட்டவர். இருவரும் தாம் தாக்குதல்களை மேற்கொண்ட ஹோட்டல்களில் அறைகள் எடுத்துத் தங்கி இருந்தே இக் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளனர்.

இன்சாப் அகமட்டைப் பற்றி அவர் உறவினர் ஒருவர் குறிப்பிடு கையில், 'அவர் இப்படியான செய்கையில் ஈடுபட்டார் என்பதை நம்ப முடியாதிருக்கிறது. சம்பவம் நடைபெற்ற நாளுக்கு முதல் தினமும் எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார். தேங்காய் சேர்க்கப்பட்ட ரொட்டியைப் பரிமாறினோம். நீண்ட நேரம் கதைத்துவிட்டு வரும் நாட்களில் பொழுது போக்குக்காகக் காம்ப் ஒன்றுக்குப் போவது தொடர்பாகக் கதைத்தார். அவர் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பு கட்டுமுறிவு கிராமம் சொல்லும் கதை

■ பவித்திரன்

மட்டக்களப்பு மாவட்டம் வடக்கே வெருகல் ஆற்றைக் கொண்ட திருகோணமலை மாவட்டத்தையும் கிழக்கே வங்காள விரிகுடாவையும் தெற்கே அம்பாறை மாவட்டத்தையும் மேற்கே பொலனறுவை மாவட்டத்தையும் எல்லைகளாகக் கொண்ட 2633.1 சதுர கிலோ மீற்றர் பரப்புடைய பிரதேசமாகும்.

இது 14 பிரதேச செயலகப் பிரிவுகளை உள்ளடக்கியது. இங்கு 1,69,874 குடும்பங்களை உள்ளடக்கிய 5,88,202 பேர் வாழ்கிறார்கள். தமிழர்களை(72.24%) பெரும்பான்மையாகக் கொண்ட இம் மாவடட்த்தில் முஸ்லிம் (26.28%), பறங்கியர் (0.83%), சிங்களவர் (0.59%) உம் வாழ்கின்றனர். தேசிய ரீதியில் வறுமையில் முதலிடம் வகிப்பதுடன் மதுபாவனையால் மிகக்கூடிய வருமானத்தைக் கொடுக்கும் மாவட்டமாகவும் மட்டக்களப்புக் காணப்படுகின்றது. இதுமட்டுமன்றி 25 மாவட்டங்களில் ஆரம்பப்பிரிவு கல்விப் பெறுபேற்றில் 24 ஆவது இடத்தையும் , இடைநிலைக் கல்விப் பெறுபேற்றில் 22 ஆவது இடத்தையும் வகிக்கிறது.

14 பிரதேச செயலர் பிரிவுகளில் கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று மேற்கு, ஏறாவூர் நகரம், காத்தான்குடி ஆகிய பகுதிகள் முஸ்லிம்களை மிக அதிகமாகக் கொண்ட பிரதேசசெயலர் பிரிவுகளாகும். மாவட்ட முஸ்லிம்களில் (1,54,686) 62.23% (96,212) ஆனவர்கள் இந்த நான்கு பிரதேச செயலகப் பிரிவுகளிலும் வாழ்கின்றார்கள். மண்முனைப்பற்று பிரதேச செயலர் பிரிவில் கணிசமான முஸ்லிம்கள் உள்ளதுடன் மண்முனை வடக்கு, ஏறாவூர்ப்பற்று பிரதேச செயலர் பிரிவுகளிலும் கணிக்கத்தக்க எண்ணிக்கையினர் உள்ளனர்.

நாட்டுச் சூழ்நிலை, முஸ்லிம்களின் துரித இனப்பெருக்கம் காரணமாக மாவட்ட சனத்தொகையில் 26.28% ஐ வகிக்கும் இவர்கள் தமிழ் பிரதேசங்களை தம் வசப்படுத்திக்கொள்ளும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக அவ்வப்போது பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றது. பெரும்பான்மை இனக்கட்சிகளில் போட்டியிட்டு வெல்ல முடியாது என்பதை அறிந்திருந்தும் போட்டியிட்ட தமிழ் வேட்பாளர்கள் பெற்றுக்கொடுத்த வாக்குகளால் இரு முஸ்லிம் அரசியல் பிரமுகர்கள் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைக் கடந்தமுறை பெற்றனர். அத்துடன் கடந்தகாலச் சூழ்நிலை காரணமாக அரசியலிலும் அரச பதவிகளிலும் செல்வாக்குச் செலுத்தும் முஸ்லிம்கள் அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்புக்களில் தமிழர்களை புறக்கணிப்பதுடன் தமிழ் பிரதேச அபிவிருத்திக்கும் வளர்ச்சிக்கும் தடையாகவும் உள்ளனர்.

அரபு நாட்டு நிதி உதவியுடன் பெருந்தொகைப் பணத்தைக் கொடுத்து




தமிழர் காணிகளை தமக்கு உரிமையாக்குவது உட்படப் பல்வேறு விடயங்களையும் கனகச்சிதமாக அரங்கேற்றப்படுகின்றன. தமிழர் காணிகள் பறிபோவதைப் பலர் முகநூலிலும், இணையத்தளங்களிலும் பதிவிடுகின்றனரே தவிர ஆக்கபூர்வமான காரியம் எதுவும் இடம்பெறுவதாக தெரியவில்லை. அரசியல்வாதிகளோ அல்லது புலம்பெயர் நாடுகளில் வாழும் வசதிபடைத்த தமிழர்களோ இதைக்கண்டும் வாளாதிருக்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் இவற்றுக்கெல்லாம் ஈடுகொடுத்து அன்றில் இருந்து இன்றுவரை தமது பிரதேசத்தை பல சிரமத்தின் மத்தியில் கட்டிக்காத்துவரும் கிராமமே கட்டுமுறிவுப் பிரதேசம்.

கோறளைப்பற்று வடக்கு பிரதேச செயலகம், வாகரை 589 சதுர கிலோமீற்றர் பரப்பை உடையது. இது மாவட்டத்தில் பரப்பளவில்கூடிய இரண்டாவது பிரதேச செயலகமாகும். 16 கிராமசேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய 47 கிராமங்களைக் கொண்டது. 23,901 தமிழர்களும் 928 முஸ்லிம்களும் 162 சிங்களவர்களும் இங்கு வாழ்கின்றனர். (2016 புள்ளிவிபர அறிக்கை - மட்டக்களப்பு மாவட்ட செயலகம்) பொலநறுவை , திருகோணமலை மாவட்டங்களின் எல்லையில் இச்செயலக பிரிவு அமைந்துள்ளது. உள்நாட்டு யுத்த காலத்தில் சிரேஷ்ட போராளிகளின் மறைவிடமாகக் காணப்பட்ட இப்பகுதி பல அழிவுகளையும் இழப்புக்களையும் கண்டது. யுத்தம் நிறைவடைந்து 10 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வளர்ச்சி கண்டிராத பகுதியாகவே இது இன்றும் காணப்படுகிறது.

வாகரை பிரதேச செயலர் பிரிவில் அமைந்துள்ள கட்டுமுறிவு எனப்படும் பிரதேசம் கட்டுமுறிவு, ஆண்டான்குளம் ஆகிய இரு கிராமங்களை உள்ளடக்கியது. மட்டக்களப்பு நகரில் இருந்து 90கி.மீ. தரைவழித்தூரத்தையும் பொலனறுவை மாவட்டத்தில் இருந்து 5கி. மீ. காட்டுவழி தூரத்தையும் கொண்டது.





கதிரவெளி கிராமத்தில் இருந்து நோக்கின் 19கி.மீ. தரைமார்க்க தூரத்தில் கட்டுமுறிவு கிராமம் உள்ளது. இப்பாதையில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான ஒரே யொரு பேருந்து ஒரு நாளைககு ஒரு சேவையை மட்டுமே வழங்குகின்றது. முற்பகல் 6.30 மணிக்கு கட்டுமுறிவில் இருந்து புறப்படும் இப் பேருந்து வாழைச்சேனை சென்று மீண்டும் பிற் பகல் 3.00 மணிக்கு கதிரவெளியில் இருந்து கட்டுமுறிவுக்குச் செல்கிறது. இப்பாதையில் தனியார் போக்குவரத்துச் சேவை என்பதே கிடையாது.


கதிரவெளியிலிருந்து கட்டுமுறிவுக்கான தரைமார்க்க 'கிறவல்' பாதை சீரற்ற நிலையில் காணப்படுவதுடன் முழுப் பிரதேசமும் அடர்ந்த காட்டுப் பகுதியாகவும், மழைக் காலங்களில் வீதியைக் கடந்து நீர்பாயும் தாழ்வான பகுதி களும் ஆங்காங்கே காணப்படுகின்றன. பாதை யில் இடைக்கிடை சில 10 மீற்றர் 'கொங்கிறீட்' பாதை இடப்பட்டுள்ளது. வீதிகளில் உள்ள நீர்செல்லும் சில மதகுகள் உடைந்து அதனுள்ளே உள்ள இரும்புக்கம்பிகள் வீதியில் செல்லும் வாகனங்களின் "ரயர்"களை சேதப்படுத்தத் தயார் நிலையில் காணப்படுகின்றன. ஆங்காங்கே கிறவல் பாதையில் சேர்ந்துள்ள மணல் மோட்டார் வாகனச் சாரதிகளை வீழ்த்த கங்கணம் கட்டி காத்துக் கிடக்கின்றன. பாதையில் பயணிக்கும் வாகனத்தின் ரயர் காற்றுப் போனால் அதோகதிதான். இவ் வீதிகளில் பகல் வேளையில் கூட யானைகளின் நடமாட்டம் காணப்படுவதுடன் வீதியில் யானைகளின் நடமாட்டத்தைக் காட்டும் சுவடுகள் சர்வசாதாரணமாக காணப்படுகின்றது. ஆங்காங்கே யானைகளால் துவம்சம் செய்யப்பட்ட குடியிருப்புக்கள் சின்னாபின்னமாகக் காணப்படுகின்றன.

கட்டுமுறிவு பிரதேசத்தில் 267 குடும்பங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 1,100 மக்கள் வாழ்கின்றனர் எனக் கூறுகின்றனர் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள். 1956 இல் சிங்கள மொழி மட்டும் சட்டம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து ஏற்பட்ட சிங்கள, தமிழ் இனக்கலவரத்தின் போது வடக்கு, கிழக்குக்கு வெளியே வாழ்ந்த தமிழ் மக்கள் சொல்லொணா துன்பங்களையும் இழப்புக்களையும் கண்டனர். இவ்வாறு பாதிப்புற்ற மக்களே கட்டுமுறிவு பிரதேசத்தில் அதிகமாக வாழ்கின்றனர்.

இப்பிரதேசத்தில் உள்ள கட்டுமுறிவு குளம் 850 கனஅடி நீரைக்கொண்டதாக கூறப்படுகிறது. இது 25.5 சதுர கிலோமீற்றர் பரப்புக்கு நீர்ப்பாய்ச்சி பயிர்ச்செய்கைக்கு பயன்படுவதாகவும் அறியமுடிகிறது. இதன் காரணமாக இப்பிரதேச மக்கள் நன்னீர் மீன்பிடி, விவசாயம் என்பவற்றுடன் தேன் எடுத்தலையும் தமது பிரதான தொழில்களாக கொண்டுள்ளனர். கல்வி அறிவுமட்டம் மிகக்குறைவான இப் பிரதேசத்தில் அரச ஊதியம்பெறும் ஒருவரே உள்ளார். இவர்கூட ஒரு சிற்றூழியரே. கட்டுமுறிவு, ஆண்டான்குளம் ஆகிய கிராமங் களில் உள்ள சிறார்களுக்கு கல்வியை வழங்கும் ஒரேயொரு பாடசாலையாக கட்டுமுறிவு அரசினர் தமிழ் கலவன் பாடசாலை உள்ளது.

9 ஆண் ஆசிரியர்களுடன் ஒரு பெண் ஆசிரியையும் கொண்ட இப்பாடசாலை தற்காலிக அதிபரின் வழிநடத்தலில் செயல்படுகின்றது. ஆண்டு 01 தொடக்கம் 11 வரையிலான வகுப்புக்களைக்கொண்ட இப்பாடசாலையில் 96 ஆண்களும் 80 பெண்களுமாக 176 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 5 வகுப்புக்களைக் கொண்ட ஆரம்பப்பிரிவில் இரு ஆசிரியர்களே கடமை புரிகின்றனர். இடைநிலைப் பிரிவில் கணிதம் , விஞ்ஞானம் ஆகிய இரு பாடங்களையும் கற்பிக்க ஆசிரியர் அற்ற நிலையும் காணப்படுகின்றது. வெட்டவெளியில் அமைந்து பதிவான கூரைகளைக்கொண்ட பாடசாலைக் கட்டிடங்கள் சித்திரை வெயிலில் அனல் பறக்கும் வகுப்புக்களாக காணப்படுகின்றது. அதிபர் அலுவலகத்தின் முன் உள்ள மாணவர், பெற்றோர் தரிப்பிடம் வேயப்படாத கூரையுடனாக காட்சியளிக்கிறது. ஆங்காங்கே பல கட்டிடங்களின் கூரைகள் சிதைவடைந்து காட்சியளிக்கிறது. மொத்தத்தில் பெயரளவிலான பாடசாலையாகவே இது காணப்படுகினறது.





கதிரவெளிப் பிரதேசத்தில் இருந்து கடமைக்குச் செல்லும் ஆண் ஆசிரியர்கள் "கட்டுமுறிவு பாதையில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணி வரையிலான காலப்பகுதியே தமது பயணத்திற்கு பாதுகாப்பானது" எனக் குறிப்பிடுகின்றனர். "இரவு வேளையில் யாருக்காவது திடீர் சுகவீனம் ஏற்பட்டால் உங்கள் நிலை என்ன?" என வினாவினேன். "இவ்வாறான வேளைகளில் நான்கு ஐந்து மோட்டார் சைக்கிள்கள் புடைசூழ ஓசையை எழுப்பிக்கொண்டு சுகவீனமானவரை கதிரவெளி வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதே தமது வழக்கம்" என்றனர். மழை காலங்களில் தரைவழிப் போக்குவரத்து முற்றாகத் தடைப்படுவதால் கிராமமானது வாரக்கணக்கில் ஏனைய பகுதிகளில் இருந்து துண்டிக்கப்பட்ட நிலையில் காணப்படும்.

வாரத்திற்கு ஒருநாள் சில மணித்தியாலங்கள் மட்டுமே வைத்திய ஆலோசனை வழங்கும் ஒரு மருந்தகம் இங்கு காணப்படுகிறது. சரியான கல்வி வாய்ப்பின்மை, அத்தியாவசிய சுகாதார வசதி இன்மை, சீரிய போக்குவரத்து இன்மை, வனவிலங்குகளின் அச்சுறுத்தல் என்பவற்றின் மத்தியில் இக்கிராம மக்கள் இங்கு வாழ்கின்றனர். வசதி வாய்ப்புக்களுக்காகவும் சௌகரியத்திற்காகவும் தமது இருப்பிடங்களை மாற்றினால் இப்பிரதேசம் மாற்றுச் சமூகங்களால் கபளீகரம் செய்யப்படும் வாய்ப்பு உள்ளதாக மக்கள் குறிப்பிடுகின்றனர். இது நூற்றுக்கு நூறு வீத உண்மையும் கூட.

பாடசாலையில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பாக கல்வி அதிகாரிகளிடம் வினாவிய போது பல்வேறு விடயங்கள் வெளிப்பட்டன. கட்டுமுறிவுப் பாதையில் தினமும் "மோட்டார் சைக்கிளில்" பயணிக்கும் ஆசிரியர்கள் பலர் முள்ளந்தண்டு உபாதைக்கு உட்பட்டு உள்ளனர். இதன் காரணமாக ஏனைய ஆசிரியர்கள் இப்பிரதேசத்திற்கு செல்ல அஞ்சுகின்றனர். மேலும் கல்குடா கல்வி வலயத்தில் ஆசிரியர் தட்டுப்பாடு கடுமையாக நிலவுவதால் கட்டுமுறிவு போன்ற பகுதிகளுக்கு ஆசிரியர்களை அனுப்பும் பணி கடினமாக உள்ளதாகக் குறிப்பிடுகின்றனர். உயர் அதிகாரிகள் மற்றும் அரசியல்வாதிகளின் செல்வாக்கும் வலயப் பணிப்பாளரின் செயற்பாட்டுக்கு பெரும் சவாலாக உள்ளதாக கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

தமது வலயத்தில் உள்ள மாணவர்களின் கல்விக்கு சரியான பங்களிப்பை வழங்க அதிகாரிகளும், அரசியல்வாதிகளும் இடமளிக்காவிட்டால் தான் வலயக்கல்விப் பணிப்பாளர் பதவியிலிருந்து விலகுவேன் என கல்குடா வலயக் கல்விப் பணிப்பாளர் அண்மையில் ஓர் அறிக்கையை ஊடகங்களுக்கு வழங்கினார். இதன் மூலம் பல விடயங்களை நம்மால் ஊகிக்க முடிகிறதல்லவா!

கட்டுமுறிவுக் குளத்திலிருந்து திறந்துவிடப்படும் நீர் செல்லும் வாய்க்கால் பாடசாலையின் நுழைவாயிலுக்கு அருகாக பாய்ந்து செல்கிறது. புற்களும் புதர்களும் மண்டிக்கிடக்கும் அந்த வாய்க்காலில் எதைப்பற்றியும் கவலை கொள்ளாமல் பல சிறார்கள் நீராடிக் குதூகலிப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. விரக்தியுடன் அவர்களைப் பார்த்து விலகிச் சென்றோம்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைப்புறக் காவலர்களாக வாழும் தம்மையும் தமது சமூகத்தையும் அரசியல்வாதிகளும் ஏனையவர்களும் கண்டுகொள்ளாத நிலையே நிலவுவதாக இப்பிரதேச கிராம அபிவிருத்திச் சங்க (RDS) தலைவர் கதிரமலை விஸ்வநாதன் கவலையுடன் குறிப்பிடுகிறார். இவ்வாறான நிலைமையில் இருந்து எதிர்காலத்தில் தாம் விடுபட தமது பிரதேச சிறார்களின் கல்வியை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற திடமான எண்ணத்தில் இவர்கள் உள்ளனர். முதற்கட்டமாக தமது பிள்ளைகள் உயர்தரத்தில் கணிதம் , விஞ்ஞானம் கற்க வேண்டும் என்பது இவர்களின் அவா!

அண்மையில் வெளியான க.பொ.த (சா / த) 2018 பரீட்சைக்கு கட்டுமுறிவு பாடசாலையில் இருந்து 06 மாணவர்கள் தோற்றி 04 மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். பரீட்சைக்குத் தோற்றிய எவருமே கணித பாடத்தில் சித்தி பெறாமையால் உயர்தரத்தில் கணிதம் , விஞ்ஞானம் கற்பதற்கான தகுதியை இவர்கள் இழந்துள்ளனர். இது இம்மக்களுக்கு பெரும் ஏமாற்றத்தையும் விரக்தியையும் அளித்துள்ளது.

மாவட்ட எல்லைக் காவலர்களாக உள்ள கட்டுமுறிவு, ஆண்டான்குளம் மக்களின் நியாயமான தேவைகளையும் கோரிக்கைகளையும் நிவர்த்தி செய்ய யார் வருவார்கள் என ஏக்கத்துடன் பல ஆண்டுகளாக இம்மக்கள் காத்துக் கிடக்கின்றனர். யானைக்கான மின்வேலிக்குள் வாழும் இம்மக்களின் எதிர்பார்க்கைகள் நிறைவேறுமா? பல்வேறுபட்ட கனவுகளோடு காத்திருக்கும் கட்டுமுறிவு மக்களின் எண்ணங்களை நனவுகளாக்க யார் வருவார்கள்? என்ற நினைவுகளோடு மட்டக்களப்பை நோக்கி பயணிக்கலானோம்.

ஒரு நாட்டின் விடியலுக்காக இலக்கியங்கள் உதவியிருப்பதைப் போல விடுதலைப் பாடல்களும், அதனோடு இணைந்த இசையும் உதவிபுரிந்திருக்கிறது. போர்க் காலத்தே தோன்றிய படைப்புகள் எல்லாம் அவ்வப்போது காணப்பட்ட மக்கள் எழுச்சி பற்றியும், உணர்வு பற்றியும் விரிவாக எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாது தமது உரிமைகளை வென்றெடுக்கப் போராடுபவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாகவும் தமது அனுபவங்களைத் தெரியப்படுத்துவதில் முன்னிற்கின்றன. அது வழியே சூடானின் விடியலுக்காய் இசையும்....



தமிழில்: ஏ.கோபி

# இசை

## அரசியல் மாற்றமும் தரும்!

கடந்த முப்பது ஆண்டுகளாக இராணுவ சர்வாதிகாரியான ஓமர்-அல்-பஷீர் சூடான் நாட்டை கொடுங்கோல் ஆட்சி செய்து வருகிறார். தற்போது அவரது ஆட்சிக்கு எதிராக அந்நாட்டின் மக்கள் புரட்சி செய்து வருகிறார்கள். தற்போது ஏற்பட்டுள்ள மக்கள் எழுச்சியில், “ஆட்சியை விட்டு கீழ் இறங்குங்கள், அது போதும்” என்ற முழக்கமே எங்கும் சூழ்ந்துள்ளது. கடந்தாண்டு டிசம்பர் மாதம் தொடங்கிய இந்த எழுச்சி, கடந்த சில வாரங்களாக தீவிரமடைந்தது. இதன் விளைவாக ஏப்ரல் 11 அன்று தனது பதவியில் இருந்து இறங்கினார் அல் பஷீர். இந்த மக்கள் எழுச்சியில், முழக்கம் மட்டுமல்லாமல் சூடானின் இசையும் பெரும் உதவி புரிந்தது.

இந்த மாத தொடக்கத்தில் புரட்சி வேகமெடுத்ததை தொடர்ந்து, சூடான் நாட்டிலுள்ள அனைத்து சர்வதேச ஊடகங்களையும் வெளியே விரட்டியது அரசாங்கம். இதனால் மக்களின் எழுச்சியை வெளி உலகிற்கு தெரிவிக்க மொபைல் போன்களை கையிலெடுத்தனர் சூடானியர்கள். இங்கு நடக்கும் போராட்டங்களை சமூக ஊடகத்தில் பதிவு செய்து வெளிநாட்டில் வாழும் சூடனியர்களுக்கும் மற்ற நாட்டு மக்களுக்கும் தெரியப்படுத்தினர். ஊடக இருட்டடிப்பு முயற்சிகளை அரசாங்கம் செய்தாலும், உள்ளூர் ஊடக நிறுவனங்கள் தொடர்ந்து தங்களது வழக்கமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பி வந்தனர்.

மக்கள் எழுச்சியின் போது வெளியான வீடியோக்கள் அத்தனையிலும் பொதுவான விஷயம் ஒன்று இருந்தது அது நன்கு பழக்கமான இசை. இது எதிர்பார்க்க கூடியது தான். ஏனென்றால், அங்குள்ள அரசியல் சொல்லாட்சியில் எப்போதும் [illegible]ிய இசை உள்ளது. சூடானில் உள்ள அனைவரும் அரசியல்வாதிகளே என பொதுவாக கூறப்படுவதுண்டு. இதற்கு காரனம், இங்கு மக்கள் தங்கள் தினசரி உரையாடலில் அரசியலை குறிப்பிடாமல் இருக்கவே மாட்டார்கள். அதோடு சூடானிய மக்கள் இசைக்கு நன்கு பழக்கப்பட்டுள்ளதோடு பல பிரபலமான பாடல்களின் வரிகளை மனப்பாடமாக கூறுவார்கள்.

இதற்கு முன்பு சூடானில் ஏற்பட்ட புரட்சியில் சில பாடல்கள் முக்கிய பங்கு வகித்துள்ளன. இந்த முறை அதுபோன்ற பாடல்கலை குறிப்பிட்டு கூற முடியாவிட்டாலும், முரசுகளிலிருந்து தொடர்ந்து வெளிப்படும் ஓசைக்கு ஏற்றார்ப் போல் போராட்டக்காரர்கள் முழுக்கத்தை உசரித்தனர்.

சூடானில் அரசியலுக்கும் இசைக்கும் இடையிலான உறவு ஒன்றும் புதிதல்ல. இதற்கு சிறந்த உதாரணம் கூற வேண்டுமென்றால், கல்வியாளரும் கவிஞருமான ஓபைத் அப்துல் நூர் எழுதிய The Lady With Pleated Hair என்ற கவிதையை கூறலாம். இந்த கவிதையில் உள்ள சக்தி வாய்ந்த வரிகள் சூடானில் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தக் காரணமாக இருந்தது. 1924 ஆம் ஆண்டு எழுதப்பட்ட இந்த கவிதை, பிரிட்டிஷ் ஆக்கிரமிப்பிற்கு எதிராக சூடானிய மக்களை போராட வருமாறு அழைத்தது. தேசத்தின் முக்கியத்துவத்தை ஈர்க்கும்படியான வார்த்தைகளால் சிறப்பித்து தங்கள் சொந்த நாட்டிற்காக போராடுமாறு இளைஞர்களை இந்தப் பாடல் அழைத்தது. இந்தப் பாடல் பல கவிஞர்களுக்கு அரசியல் கவிதை எழுத தூண்டுதலாக இருந்தது.

மற்றொரு பாடலான Green October, ராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தின் போது புகழ்பெற்ற பாடகரான முஹமது வர்தியால் பாடப்பட்டது. அரசியல் மாற்றத்தை கொண்டு வரும் மக்களின் சக்தியை இப்பாடலின் வரிகள் புகழ்ந்தன. இப்பாடலில் குறிபிடப்பட்டுள்ள Green என்ற வார்த்தை சூடானின் பொருளாதாரம் மற்றும் விவசாயத்தின் முக்கியத்துவத்தை நேரடியாக குறிக்கிறது.

1985 ஆம் ஆண்டு, மறுபடியும் மக்கள் எழுச்சியால் மாற்றத்தை கண்டது சூடான். மறுபடியும் இராணுவ ஆட்சியை தூக்கி எறிய தெருவில் இறங்கி போராட துவங்கினார்கள் மக்கள். மறுபடியும் தேர்தல் மூலம் புதிய அரசாங்கம் பதவியேற்றது. மறுபடியும் இந்தப் புரட்சியில் இசையும் பாடல்களும் முக்கிய பங்கு வகித்தன.

வர்தியின் வரிகள் இந்த முறையும் புரட்சியில் முக்கிய பங்காற்றின. “மக்களே, உங்கள் நெருப்பே உங்கள் புரட்சி” என்ற அவரது பாடல் சூடான் மக்களின் மகத்தான நம்பிக்கையும் பெருமிதத்தையும் பேசுகிறது. சூடானிய மக்கள் தங்களது விதியை தீர்மானிப்பதற்கு இதுவே சரியான தருணம், இப்போதெ எழுந்து நில்லுங்கள் என இந்தப் பாடல் கூறுகிறது. 2012 ஆம் ஆண்டு முஹமது வர்தி காலமானார். இன்றும் “நுபியாவின் கடைசி அரசர்” என இந்தப் புகழ்பெற்ற பாடகர் அழைக்கப்படுகிறார்.

1956 ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்றதிலிருந்து ஐம்பது ஆண்டுகளுகும் மேலாக ராணுவ சர்வாதிகார ஆட்சியில் இருந்துள்ளது சூடான். இந்நாட்டின் மக்கள் அரசியல் சுதந்திரத்திற்காக ஏங்கிக் கொண்டிருகிறார்கள். ஜனநாயக பூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட எந்த அரசாங்கமும் தனது முழு பதிக்காலமும் ஆட்சியில் இருந்ததில்லை. இந்நிலையில், பாடல்களே இங்குள்ள மக்களுக்கு நம்பிக்கையை அளித்து வருகிறது. இவர்களின் வலிகளையும் வேதனைகளையும் இசை மட்டுமே குறைத்து வருகிறது.

பாடல்களுக்கு ஒருங்கிணைக்கும் சக்தி உள்ளது. அதற்கு 2019 புரட்சியே சாட்சி. “சுதந்திரம் வேண்டும்”, “ஒரே மக்கள் ஒரே ராணுவம்”, “ஆட்சியை தூக்கியெறிய மக்கள் விரும்புகிறார்கள்” போன்ற முழக்கங்கள் புரட்சியில் தொடர்ந்து ஒலிகின்றன. இந்த முழக்கமும் பாடல் வரிகளும் முரசுகளின் ஓசைக்கு ஒத்திசைவாக பாடப்படுகின்றன. சர்வாதிகாரி அல் பஷீர் தூக்கியெறியப்பட்ட நாளன்று ஒரு வீடியோ பரபரப்பாக உலகம் முழுவதும் பரவியது. அந்த வீடியோவில் போராட்டக்காரர்களில் ஒருவர் சக்ஸஃபோன் வாசிக்கிறார். மற்றொருவர் முரசு அடிக்கிறார். சுற்றியுள்ள அனைவரும் கொண்டாட்டத்தில் இணைந்து கொள்கிறார்கள்.

2019ஆம் ஆண்டிலும் மக்களுக்கு பாடல்கள் தூண்டுதலையும் வழிகாட்டுதலையும் வழங்கு; கிறது. ஆனால் அல் பஷீரின் முப்பது ஆண்டு கால சர்வாதிகார ஆட்சியை தூக்கி எறிந்ததால் இந்த புரட்சி வெற்றி பெற்றது என்று கூற முடியாது. ஏனென்றால் அவருக்குப் பதில் தற்போது இராணுவ அமைச்சரே பதவியேற்றுள்ளார். இது போராடக்காரர்கள் எதிர்பார்த்த ஜனநாயக மாற்றம் அல்ல. இனி வரப் போகிற நாட்களில் அரசியல் நிலவரம் எப்படி மாறப் போகிறது என்பதை பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். ஆனால் என்ன நடந்தாலும், விடா முயற்சியுடனும், பொதுவான இலட்சியத்தால் ஒன்றுபட்டும், சுதந்திர பாடல்களின் வழிகாட்டுதலோடு இருகிறார்கள் போராட்டக்காரர்கள்.

நன்றி: scroll.in

# சின்ன விஷயங்களின் கடவுள்

'இலக்கியங்களுக்கெல்லாம் மாதிரி நமக்கு மேற்கத்திய இலக்கியங்களே' என உலகளவில் நாம் பேசிக்கொண்டிருப்பது எல்லோரும் அறிந்தது தான். அம்மாதிரிப் படைப்பது தான் உயர்ந்த இலக்கிய வகை என எண்ணி அவைகளை அப்படியே நகல் எடுக்கும் கீழை நாட்டு இலக்கியவாதிகளும் ஏராளம். அத்தோடு பிரபல மேற்கத்திய இலக்கியவாதிகளும் விமர்சகர்களும் அவ்வப்போது வாந்தி எடுத்துத்தள்ளிய கருத்துக் களையும் பல்வேறு சூழலில் எழுதிச் சென்ற விடயங்களையும் தங்கள் படைப்புக்களின் உள்ளடக்கமாகக் கொண்டு இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்கள் பலரும் நம்மில் இல்லாமல் இல்லை. நாம் மேலே கண்ட எழுத்தாளர்களின் கண்ணோட்டத்தின் படி நம் நாட்டு இலக்கியங்கள் அனைத்தும் தரங்குறைந்தவைகளே.




ஆனாலும் மேலைநாட்டு இலக்கியங்களுக்கு நிகராக கீழை நாடுகளிலும் அவ்வப்போது உலகத்தரம் வாய்ந்த படைப்புகள் தோன்றாமல் இல்லை. இம்மாதிரியான படைப்புகள் பெரும்பாலும் வட்டார மொழிகள் மட்டுமே தெரிந்த இலக்கியவாதிகளால் படைக்கப்படுவதால் அவைகளெல்லாம் அந்தந்த வட்டாரங்களுக்குள்ளேயே அமுங்கிப் போய்விடுகின்றன. அம்மாதிரி படைப்புகள் சர்வதேச தரம் வாய்ந்தவைகளாக இருந்தாலும் கூட அவை மேற்கத்திய இலக்கிய உலகை எட்ட முடியாது. அப்படி எட்ட வேண்டுமானால் கண்டிப்பாகப் படைப்பாளி பிரதான மொழிகளில் ஒன்றிலாவது எழுதுவதற்குத் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அல்லது தரம் வாய்ந்த இலக்கிய இரசனையுள்ள மொழிபெயர்ப்பாளர்கள் நம்மிடையே இருக்க வேண்டும். அப்படியானால் தான் நம் படைப்புகள் மேலை நாட்டு வாசகர்களின் கைகளில் போய்ச் சேர முடியும்.

அந்தவகையில் இதற்கு முற்றிலும் விதிவிலக்கானவர்தான் அருந்ததி ராய். அவர் நான்கு வருடங்களாகச் சிரமப்பட்டு எழுதிய நாவல்தான் The God of Small Things. காலச்சுவடு வெளியீடாக வந்த இந்த நூலை தமிழில் ஜி.குப்புசாமி மொழிபெயர்த்துள்ளார். பொது நலவாய நாடுகளிலுள்ள ஆங்கிலத்தில் இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களின் மிக நல்ல நாவலுக்கு அளித்து வரும் புக்கர் விருதையும் இந்த நூல் பெற்றுக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த நாவலின் உள்ளடக்கம் 1960களிலுள்ள கேரளம்தான். ஒரு கிறிஸ்தவக் குடும்பத்தில் பிறந்த இரட்டையரான எஸ்தையும் ராகேலும் நாவலின் பிரதான கதாபாத்திரங்கள். அய்மனம் என்ற இடத்தில் அவர்களுடைய குடும்பத்தில் தாழ்ந்த சாதியை சேர்ந்த ஒருவனுடன் அவர்களது அம்மா வைத்திருக்கும் மறைமுகமான சரீர உறவு, வெளுத்தை என்ற பாத்திரத்தின் பொலிஸ் லாக்கப் மரணம், அம்மாவின் மரணம், ராகேலின் ஒற்றைப்பட்ட வாழ்க்கை, டெல்லியில் கல்வி பயின்றது, வெளிநாட்டவனைத் திருமணம் செய்தும் திருப்தியற்ற வாழ்க்கை, அது முடிந்ததும் இருபது வருடங்களுக்குப் பிறகு ராகேல் சொந்த இடமான அய்மனத்திற்கு வருவது, இந்த வருகைக்குப் பின்னர்தான் இந்த நாவலின் கதையே ஆரம்பிக்கின்றது.

கம்யூனிஸ்ட் ஆட்சியும் கேரள அரசியலும் அதனைத் தொடர்ந்து உருவான நக்சலைட் இயக்கம் இவைகளெல்லாம் இப்படைப்பினுள் கொண்டு வரப்பட்டுள்ளன. சில இடங்களில் சிலவற்றை விவரிக்க அவர் எடுத்துக்கொண்ட அதிக சிரத்தை வேறுசில விடயங்களுக்குப் பாதகமாகி உள்ளதாகவும் பேசப்படுகின்றது. அருந்ததி ராய் தனது படைப்பில் கேரள அரசியலை ஓரளவுக்கு மாத்திரமே தொட்டுக்காட்டி இருக்கின்றார். இதனால் இடதுசாரி அரசியல்வாதிகளின் விமர்சனத்திற்கும் ஆளாகி இருந்தார். கதாபாத்திரங்களான வெளுத்தைக்கும் அம்முவுக்கும் இடையேயுள்ள பாலியல் உறவு பற்றிய வருணனை இப்புத்தகத்தில் அதிகமாக இடம்பெற்றதாக வழக்கொன்றும் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. என்றாலும் அருந்ததி ராய்க்கு கிடைத்த புக்கர் விருது தென்னிந்தியாவுக்கு இலக்கிய ரீதியாகக் கிடைத்த ஓர் உலக அங்கீகாரமே.



நிசப்தமான அறையில்
'ணங்' என்ற ஒலியுடன்
சிதறி விழுகிறது
சற்றுமுன் நான் தேநீர்
குடித்து விட்டு
மேசையில் வைத்த
பீங்கான் குவளை.

எங்கிருந்து வந்தது
இந்த ஒலி?
குவளைக்குள்தான் இருந்ததா?
எனில்
நான் பருகிய தேநீருக்குள்ளும்
சில ஒலிச்சிதறல்கள்
போயிருக்குமா?

பலாமரத்திலிருந்து விழுந்த
கூழம் பலா போல்
சிதறிக் கிடக்கும்
பீங்கான் துண்டில்
எந்தத் துண்டிடம் கேட்பேன்?

இத்தனை ஒலியை
உள்ளுக்குள் வைத்திருந்தும்
ஏன் இதுவரை ஒரு வார்த்தைகூட
என்னிடம் பேசவில்லை.
குறைந்தது
ஒரு காலை வணக்கமாவது
சொல்லியிருக்கலாமே தினமும்.

- ஜெயதேவ




உங்கள் ஆக்கங்களை 'வாசிகை', ஆசிரியர் புதுவிதி, 107 : இராச வீதி, கோப்பாய், திருநெல்வேலி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கோ அல்லது sinnarajavimalan18@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அனுப்பி வைக்கலாம்.

# குறும்பட அனுபவப் பகிர்வு

திவானி கந்தசாமி

சமகால கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்பிற்கான இலங்கை ஆவணக் காப்பகத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்ச்சித் தொடரின் 64ஆவது பேச்சுத் தொடர் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் குறும்பட இயக்குனரான ஆனந்தரமணன் தனது அனுபவங்களைப் பகிர்ந்திருந்தார். அவரது குறும்படங்கள் பற்றிய முன்வைப்பை அடிப்படையாகக் கொண்டதாக இக்குறிப்பு அமைகிறது.

ஒரு நிகழ்வை, கருத்தை, கதையை குறுகியநேரத்தில் அழுத்தமாகத் தொழில்நுட்ப நேர்த்தியுடன் படக்காட்சியாக வெளிப்படுத்துவதை குறும்படம் எனலாம். ஒரு குறும்படம் சில நிமிடங்களில் இருந்து 30 நிமிடங்களுக்கு மேலாகவும் அமையலாம். படங்களைப் பதிவுசெய்வதும் பகிர்வதும் இலகுவாக்கப்படும் இன்றைய காலப்பகுதியில் குறும்படங்கள் முக்கிய ஒரு வெளிப்படுத்தல் ஊடகமாகப் பரிணமித்து வருகின்றன. போருக்குப் பிந்தைய காலத்தில் வடக்கு மற்றும் கிழக்கில் முனைப்பு பெற்ற வெளிப்பாட்டு வடிவமாக குறுந்திரைப்படங்கள் அமைந்துள்ளன. போர் முடிந்த உடனடிக் காலகட்டத்திலேயே யாழ்ப்பாணத்தில் மட்டும் கணிசமான குறும்படங்கள் வெளிவந்ததாகக் கூறப்படுகிறது. இந்நிலவரம் ஒருவகையில் போர் முடிந்த பல்வேறு சமூகங்களிலும் கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பத்தால் ஏற்பட்ட சாத்தியங்கள் அனுபவமாற்றம், பல்வகைத் தன்மையான கதைக்களன்கள் என்பன குறும்படங்களின் தோற்றுவாய்க்கு காரணமாக அமைந்ததுடன் இவற்றின் பின்புலத்தில் குறிப்பிட்ட சில தனிநபர் முயற்சிகளோடு அரசசார்பற்ற நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு வேலைத்திட்டங்களும் அமைந்திருந்தன.



இவ்வாறான சூழலில் குறிப்பிடத்தகுந்த மிகமுக்கியமான குறும்படங்களை எடுத்தவர்தான் ஆனந்தரமணன். யுத்தத்தின் பாதிப்புக்களையும் நெருக்கடிகளையும் அனுபவித்த சந்ததியைச் சேர்ந்த இவர் தனது குறும்படங்கள் வாயிலாக அந்த அனுபவங்களை நுணுக்கமாகச் சித்திரித்துள்ளார். தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் விருதுகள் பெற்ற பெருமைக்குரியவர். சிறுவயதில் இருந்தே

(16ஆம் பக்கம் பார்க்க)

## புதுவிதி போட்டி சிறுகதைகள் - ஓர் இரசனைக்குறிப்பு

# ஈழநல்லூர் கண்ணதாசனின் "விடுதலை"

- உடுவில் அரவிந்தன் -

குறித்தவொரு சூழலில் வாழ்ந்த அல்லது தற்போதும் வாழ்கின்ற சிலருக்கு அந்தச் சூழல் சார்ந்த படைப்புகளை நேர்த்தியாகத் தரக்கூடிய வல்லமை வாய்த்துவிடுகின்றது. தாம் சொல்லவந்த விடயத்தை உயிர்த்தன்மை குன்றாமல் வாசகரிடம் கடத்திவிடக்கூடிய திறன் இயல்பாகவே சித்திக் கின்றது. அது அவர்களின் பட்டறிவு சார்ந்தது. அவர்களுக்கு வார்த்தைசாலங்களோ வர்ணப்பூச்சுகளோ அவசியப்படாது. ஆகவே, காலமும் சூழ்நிலையுமே நல்ல படைப்பாளிகளை உருவாக்குகின்றன என்பதை உறுதியாகக் கூறிவிடலாம்.

ஈழநல்லூர் கண்ணதாசன் யாழ். பல்கலைக்கழகத்தில் இசைத்துறை விரிவுரையாளராக இருந்தவர். அவருடைய இசைஞானம் காலத்தின் தேவைகருதி மகத்தான பணியொன்றில் வசப்பட்டிருந்தது. அவருடைய விரல்களிலிருந்து எழுகின்ற அற்புதமான நாதம் ஆழ்மனதை உருக்கவல்லது. அந்த நாதம் இப்போது காற்றுவெளியில் கலப்பதில்லை. அந்த வெறுமையை எங்கள் இனத்தின்மீது உமிழப் பட்ட சாபமென்றுதான் சொல்லவேண்டும். அவர் எழுதிய "விடுதலை" என்ற சிறுகதை சிறையில் அடைபட்டுக்கிடக்கும் ஓர் அரசியற்கைதியினதும் அவனுடைய உறவுகளினதும் அவலநிலையை உணர்வுபூர்வமாகச் சொல்கிறது.

அவன் ஒரு முன்னாள் போராளி. யுத்தத்தின் முடிவில் புனர்வாழ்வுபெற்றுப் பொதுவாழ்வில் இணைந்து கொண்டவன். அவனுடைய கடந்தகாலங்களை நோண்டியெடுத்து, வாழ்நாள் முழுவதும் சிறையிலே கழிக்குமாறு விதிக்கப்பட்ட கொடுமையை என்னவென்பது? அவனை விடுவிப்பதற்காக அலைந்து திரிகின்ற மனைவி. தாயுடன் கொழும்புக்குச் சென்று அவனைப் பார்த்துவரும் மூத்தமகன். தந்தை கொழும்பில் வேலைசெய்கிறார் என்ற நினைவுடன் புறாக்களையும் கிளிகளையும் வளர்ப்பதிலே பொழுதுகளைக் கழிக்கும் சின்னமகன். இவ்வாறு மிகக்குறைவான பாத்திரங்களைக்கொண்டே சிறுகதை செதுக்கப்பட்டுள்ளது. இவர்களைப்போன்று மனம் முழுக்கத் துயரங்களைச் சுமந்தபடி, செயற்கையாக அணியப்பட்ட புன்னகைகளு டன் உலாவருகின்ற குடும்பப்பெண்களையும் பாவப்பட்ட குழந்தைகளையும் எங்கள் மண்ணில் சாதாரணமாகக் காணமுடியும்.

காரணமின்றித் தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற்கைதிகளின் வாழ்வு அவமாகக் கழிந்து கொண்டிருக்கிறது. சந்தர்ப்பவாத அரசியலில் அவர்கள் பந்தாடப்படுகின்ற அவலநிலை கண்முன் எழுகின்றது. பேரம்பேசக்கூடிய அரிதான சந்தர்ப்பங்கள் கனிந்தபோதெல்லாம் மக்களின் பிரதிநிதி களாகக் கருதப்படுபவர்கள் கண்களைமூடி உறங்குபவர்களாகவும் வேடிக்கை பார்ப்பவர்களா கவுமே இருந்திருக்கிறார்கள். தேர்தல்கள் வரும்போதுமட்டும் அவர்கள் துயில்நீங்கித் திருவாய் மலரத் தொடங்குவார்கள். நாங்கள் அவர்களுடைய அருளுரைகளிலும் சித்துவிளையாட்டுகளிலும் கிறங்கிக் கிடப்போம்.

இந்தச் சிறுகதையில் கொழும்பிலுள்ள சிறைச்சாலையொன்றின் காட்சிகள் சிறப்பாக விபரிக்கப்படு கின்றன. உறவுகளைச் சந்திக்க வருபவர்களை நெருங்கவிடாத இரக்கமற்ற சிறைத்தடுப்புகள், கறள் பிடித்த கம்பிவலைகளில் அழுத்தமாகப் படிந்திருக்கும் தூசுகள், சிலகணங்கள் தாமதித்தாலும் பார்வையாளர்களை விரட்டுகின்ற 'மாத்தயாவின்" கடமையுணர்ச்சி, ஏக்கந்தீராத பெருமூச்சுகள், கசங்கிப்போன இளமைக்கனவுகள், கசிந்துருகும் கண்ணீர்த்திவலைகள். இவ்வாறாகப் பல்வேறு உணர்வுகள் கலவையாகப் பொங்கிப் பிரவாகிக்கின்றன.

தந்தையை முதன்முறையாகக் காணச்சென்ற சின்னமகன் தமிழின் உள்ளார்ந்த வெளிப்பாடுகள் பின்வருமாறு அமைகின்றன.

"இண்டைக்கு அவரைக் கண்டதும் முதல்ல கதைக்கக்கூடாது. ஏனெண்டால், இவ்வளவுநாளும் வீட்டுக்கு வராம ஏன் இங்கேயே இருக்கிறீங்கள் என்று சண்டை பிடிக்கவேணும். கொஞ்சநேரம் சண்டை பிடிச்சுப்போட்டு, பேந்து சினேகமாகி அப்பாவைக் கட்டிப்பிடிச்சுக் கொஞ்சவேணும். அவற்றை தோளில ஏறி இருக்கவேணும். மீசையைப் பிடிச்சு இழுக்கவேணும்.."

மனம்நிரம்பிய கனவுகள் கலைந்துபோக ஏமாற்றமே பரிசாகக் கிடைக்கிறது. அவன் தந்தையின் முகத்தைக் காணமுடியாமல் குரலைமட்டுமே கேட்டுத் தளும்புகிறான். அந்தத் திகைப்பு அடங்காதவ னாகத் தாயுடன் வீடு திரும்புகிறான். அதற்குப்பிறகு அவனுடைய நடத்தைகளில் பக்குவமான அமைதி தெரிகிறது. கடைசியில், அவன் கூடுகளில் அடைக்கப்பட்ட பறவைகளைத் திறந்துவிடுகிறான். அந்தப் பிஞ்சுமனதில் ஏற்பட்ட மாற்றம் மிகைப்படுத்தப்பட்ட கூற்றுகள் ஏதுமின்றி இயல்பாக வெளிப்படு வதை இரசிக்கமுடிகிறது.

ஆற்றுவாரின்றித் தகிக்கும் அகவுணர்வுகளை அனுபவபூர்வமாகவும் ஆரவாரங்களின்றியும் வெளிப் படுத்தியமைக்காக ஈழநல்லூர் கண்ணதாசனை நிச்சயமாகப் பாராட்டலாம். அவர் தன்னுடைய சிறகு களை விரிக்கின்ற காலம் மீண்டும் வரும்.

## குறும்பட....

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

இவருக்கு கேட்கும் விடயங்களைவிடப் பார்க்கும் விடயங்கள் இலகுவாக மனதில் பதிந்துகொள்ளும். இதன் காரணமாக அவர் முதலில் நாடகத் துறையைத் தெரிவுசெய்துள்ளதுடன் அடுத்தகட்டமாக திரைத்துறைக்குள் காலடி எடுத்து வைத்துள்ளார்.

கலந்துரையாடலின் போது தனது குறும்படத்துறை வருகை என்பது பல்வேறுபட்ட அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான சந்தர்ப்பமாக அமைந்தது என ஆனந்தரமணன் குறிப்பிட்டார். இதன்போது இவரால் முதலாவதாக எடுக்கப்பட்ட குறும்படமான Ticket Please காட்சிப்படுத்தப்பட்டது. ஆனந்தரமணனின் கதை மற்றும் தயாரிப்பில் உருவான இப்படத்தில் மொகமட் பர்கான், சிந்துஜன் எட்வார்ட், ராசதுரை ஜெயந்தன் உட்படப் பலர் நடித்திருந்தனர். 2018 இல் காட்சிப்படுத்தப்பட்ட இக்குறும்படம் இரு மொழிகளுக்கிடையிலான பாரபட்சம் பற்றியதாக அமைந்ததுடன் சமூகத்தில் உள்ள மொழித்தடையைத் தகர்க்க சமத்துவம், பரஸ்பரபுரிதல், ஒருங்கிணைப்பு என்பவற்றின் அவசியத்தை தெளிவாக முன்வைப்பதாக அமைந்துள்ளது.

இக்குறும்படத்தில் வரும் முக்கிய கதாபாத்திரம் சிங்களமொழி பேசவோ அல்லது எழுதவோ தெரியாத ஒரு நபர் ஆவார். இவர் வெளிநாடு செல்லும் ஏற்பாடுகளைச் செய்வதற்காக கொழும்புக்குச் செல்கிறார். அப்போது அவரது சகோதரி ஆங்கிலப் பத்திரிகை ஒன்றையும் ஒருதாளில் 'துன்னா' 'துன்னே' என்று எழுதியும் கொடுக்கிறார். அவற்றைக் கொண்டு அவர் கொழும்பு பஸ்ஸில் பயணிக்கிறார். பயணத்தின் போது கையில் இருந்ததாளைத் தவறவிடுகிறார். நடத்துனர் சிங்களம் மற்றும் ஹிந்தி பேசும் ஒருவராக இருப்பதனால் இவர் மொழி தெரியாமல் எதிர்கொள்ளும் சம்பவங்களைப் பேசுவதாக அமைகிறது. இறுதிக்காட்சியில் இந்தியாவில் இருந்துவரும் ஒரு பயணி பேருந்தில் ஏறும்போது அவருக்கும் நடத்துனருக்குமான ஹிந்தி மொழியிலான உரையாடல் என்பது நட்புப் பாராட்டும் வகையில் அமைந்து ஹிந்தி பாடலுடன் குறும்படம் நிறைவுக்கு வருகிறது.

இக்குறும்படம் சிங்கள மொழி தெரியாதவர்கள் எமது நாட்டிலே எத்தகைய நெருக்கடிகளை எதிர்கொள்கிறார்கள் என்பதை வெளிப்படுத்தும் அதேசமயம் வேற்று நாட்டவரின் மொழிக்கு அளிக்கும் முன்னுரிமையை சொந்த நாட்டில் பேசும் மொழிக்கு வழங்காத அவலத்தை வெளிப்படுத்துவதாகவும் உள்ளது.

குறும்படத்துக்கான பாத்திரங்களுக்கு ஆனந்தரமணன் நடிப்புத்துறையில் இல்லாத நபர்களையே தெரிவு செய்துள்ளார். சில காட்சிகளை நேரடியாக வெளிப்படுத்தாது பார்வையாளர்கள் தாமாகவே புரிந்துகொள்ளும் விதத்தில் குறியீட்டுப் பாங்குடன் நகர்த்தியுள்ளார். குறிப்பாக குறும்படத்தில் வரும் பெண்பாத்திரத்தின் வகிபங்கு என்ன என்ற குழப்பம் ஆரம்பத்தில் பார்வையாளர்களுக்கு ஏற்பட வாய்ப்புள்ளது. ஏனென்றால் அவரின் முகபாவங்கள் மட்டும் தான் இக்காட்சியில் வெளிப்படுத்தப் படுகிறது. ஆனாலும் இக்கதை நகர்வில் முக்கிய பாத்திரமாக இப்பெண்ணே விளங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

இக்குறும்படம் ஆனந்தரமணனின் வாழ்க்கையில் நடைபெற்ற உண்மைச் சம்பவத்தை அடியொட்டி உருவாக்கப்பட்டது டன் மேலதிகமாகச் சிலகாட்சிகள் சுவாரஸ்யத்திற்காக கொண்டுவரப்பட்டுள்ளது. 2005இல் இக்கதையை உருவாக்குவதற்கான வாய்ப்பு கிடைத்திருந்தாலும் 2018 ஆம் ஆண்டே குறும்படம் வெளிவந்து சர்வதேச திரைப்படவிழாவில் விருதினையும் பெற்றுள்ளது. இதன் ஊடாக எமது சமூகம் மற்றும் வாழ்வியல், இருப்பு சார்ந்த எமது கலை அனுபவங்களை வெளிப்படுத்துவதற்கு எத்தகைய சவால்களை எதிர்கொள்ள நேரிடுகின்றது என்பதையும் உணரக்கூடியதாக உள்ளது.

எனவே இக்கலந்துரையாடல் ஊடாகப் போருக்குப் பிந்தைய இலங்கை சினிமா பற்றிய நிலவரத்தை தனது அனுபவம் வாயிலாக ஆனந்தரமணன் வெளிப்படுத்தியுள்ளார். ஒருவகையில் அவ்வனுபவமானது ஆனந்தரமணனின் அனுபவமாக மட்டுமன்றி போர் நடைபெற்ற காலத்தில் அத்தகைய நெருக்கடிகளுக்குள்ளான ஒவ்வொருவரின் அனுபவத்தையும் நினைவுக்கு கொண்டுவருவதாக உள்ளது.



'தர்பார்' படத்தில் ரஜினிக்கு வில்லியாக நயன்தாரா நடிக்கிறார் என தகவல் பரவியுள்ளது.

தந்தை மகள் பாசத்தை மையமாக வைத்து இப்படம் உருவாகிறது. ரஜினியின் மகளாக நிவேதா தாமஸ் நடிக்கிறார்.

இப்படத்திற்காக 60 நாட்கள் நயன்தாரா ஒதுக்கியுள்ளாராம்.

அமலா பாலும் விஷ்ணு விஷாலும் காதலிக்கின்றனர் என செய்திகள் பவரவியிருந்தன. விஷ்ணு விஷால் இதை மறுத்த போதும் அமலாபால் எதுவும் பேசாமல் இருந்தார்.

சமூகவலைத்தளத்தில் எப்போதும் ட்ரெண்டிங்கில் இருக்கும் அமலாபால், கடற்கரையில் காதல் என மலையாளத்தில் எழுதி அதனுடன் படம் எடுத்து வலைதளத்தில் வெளியிட்டுள்ளார்.

யாருக்கு அவர் காதல் சமிக்ஞை அனுப்பியுள்ளார் என்பதை வலைபோட்டு தேடிவருகிறார்கள் இணையவாசிகள்.





நம் நாட்டின் கேசினோ சூதாட்ட விடுதிக்கு பொலிவூட் நடிகைகள் வருவது வழமை ஏன் தெரியுமா?

வாடிக்கையாளர்களை உற்சாகப்படுத்தத்தான் இந்த உத்தியை நிறுவனம் கையாள்கிறது. இதற்காக பல கோடிகளை அள்ளிக் கொடுக்கிறதாம் கேசினோ நிறுவனம்.

பொலிவூட் நடிகைகளே அதிகளவில் வந்துபோன நிலையில் இம்முறை காஜல் அகர்வாலை அழைத்து வந்தனராம். இதற்காக கோடிகளில் அவருக்கு பணம் வழங்கப்பட்டதாம்.




'சீமராஜா' பட வெளியீட்டின் போது ஏற்பட்ட கடன் பிரச்சினை இப்போது பெரிதாக உருவெடுத்துள்ளது. இந்தப் பிரச்சினை 'மிஸ்டர் லோக்கல்" படத்திற்கும் பிரச்சினையாக மாறியுள்ளது.

இதனால் மே முதலாம் திகதியில் இருந்து 17 ஆம் திகதிக்கு படத்தின் வெளியீடு பின்தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

'பாகுபலி' இயக்குநரின் படத்தில் நடிக்க பலரும் போட்டி போடுகின்றனர். இந்நிலையில் தேடிச் சென்ற வாய்ப்பை மறுத்துள்ளார் ஷ்ரத்தா கபூர்.

இப்போது ராஜமௌலி 'ஆர்.ஆர்.ஆர்.' என தற்காலிக பெயர் கொண்ட படத்தை இயக்கி வருகிறார். இந்தப் படத்திற்காகவே ஷ்ரத்தாவை அவர் அணுகியுள்ளார்.

ஆனால், படத்திற்கு திகதிகளை ஒதுக்க முடியாததால் அந்த வாய்ப்பை அவர் மறுத்துள்ளார்.





அதா சர்மா பொலிவூட் படமான 'மேன் ரூ மேன்' படத்தில் நடிக்கிறார். பல நடிகையர்கள் நடிக்கத் தயங்கிய இப்படத்தில் அவர் துணிந்து நடிக்கிறார்.

ஆணாக இருந்து பெண்ணாக மாறிய ஒருவர் ஆண் ஒருவரை திருமணம் செய்கிறார். அவருக்கு இந்த உண்மை தெரிய வர அடுத்து நடக்கும் பிரச்சினைகளே படத்தின் கதையாம்.





தொகுப்பாளினியாக இருந்து பொலிவூட்டில் அறிமுகமானவர் ரியா சக்கர்போர்த்தி. அங்கு வளர்ந்து வரும் நடிகையான இவர், தமிழில் அறிமுகமாகவுள்ளார்.

ஹரிஷ் கல்யாண் நடிக்கும் 'தனுசு ராசி நேயர்களே' என்ற படத்தின் மூலமே ரியா தமிழுக்கு வருகிறார்.

## திக்... திக்... விநாடிகள்

# பெண் சிங்கம் செய்த முதல் 'சம்பவம்'





ஒன்றாகவே சேர்ந்து, வாழ்ந்துவிட்டு எதிர்பாராத ஒருநாளில் ஏதோ ஒரு விசயத்துக்காக 2 பேருக்கு மத்தியில் ஏதேதோ நிகழ்ந்து விடுகிறது. துரோகம், வஞ்சகம், சூழ்ச்சி என என்னவென்று சொன்னாலும் அது சம்பந்தப்பட்டவர்கள் பார்வையில் ஒரு மாற்றம் அவ்வளவுதான். மனிதன் விலங்கு என்ற பாகுபாடெல்லாம் இந்த மாற்றத்துக்குப் பொருந்தாது.

சிங்கங்களைப் பொறுத்தவரை அ முதல் ஃ வரை எல்லாமே ஆண் சிங்கம்தான். கூட்டத்தை வழி நடத்துவதிலிருந்து அதன் எல்லைக்குள் குடும்பத்தைப் பாதுகாப்பது வரை எல்லாமே ஆண்தான். ஆண், பெண் சண்டைகளில் பெரிய காயங்கள் ஏற்படும். சமயங்களில் ஆண் சிங்கம் பெண் சிங்கத்தைக் கொல்லும் சம்பவங்களும் உண்டு. சிங்கங்களின் உலக வரலாற்றில் பெண் சிங்கம் ஆண் சிங்கத்தைக் கொன்றதாக வரலாறே இல்லை. அந்த வரலாற்றை இப்போது மாற்றி எழுதியிருக்கிறது ஸூரி என்கிற பெண் சிங்கம்.

சிங்கக் கூட்டத்தைப் பொறுத்தவரை தலைவனோ, தலைவியோ கூட்டத்தின் ஓர் அங்கத்தினராகவே இருக்க வேண்டும். ஒரு கூட்டத்தில் பொதுவாக ஐந்து அல்லது ஆறு வயது வந்த பெண் சிங்கங்களும் வயது வந்த ஆண் சிங்கம் ஒன்றும் குட்டிகளும் இருக்கும். கூட்டத்தின் அமைப்பில் பெண் சிங்கங்களே அதிக முக்கியத்துவத்தைப் பெறுகின்றன. ஒரு கூட்டத்தில் இருக்கும் பெண் சிங்கங்கள் எல்லாம் நெருங்கிய உறவினர்களாகவே இருக்கும்.

ஆண் சிங்கங்களுக்கும் பெண் சிங்கங்களுக்கும் எப்போதாவது சண்டை மூளும். சண்டைகள் இருபாலருக்கும் சில பல காயங்களுடன் முடிவுக்கு வரும். சில நேரங்களில் ஆண் சிங்கம் பெண் சிங்கங்களைக் கொல்வதும் நிகழும். ஆனால், ஆண் சிங்கத்தை, பெண் சிங்கம் கொன்றதாக வரலாற்றில் எங்குமே பதிவு செய்யப்படவில்லை. குறிப்பாக உடலளவில் ஆண் சிங்கம் 150-250 கிலோ வரை எடை கொண்டதாக இருக்கும். பெண் சிங்கம் 120-150 கிலோ கிராம் எடை கொண்டதாக இருக்கும்.

ஆண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் என்பது 12 வருடங்களும் பெண் சிங்கங்களின் சராசரி ஆயுட்காலம் 16 வருடங்களும் ஆகும். ஒரு கூட்டத்தில் ஒரு வயது முதிர்ந்த ஆண் சிங்கமே இருக்க வேண்டும் என்பதால் தலைவனான ஆண் சிங்கம் 10 வயது வருவதற்குள்ளாகவே அக்குழுவில் உள்ள மற்ற இளைய சிங்கத்தோடு சண்டையிட்டுக் கூட்டத்தை விட்டு வெளியேற்றிவிடும். கூட்டத்தில் உள்ள இளைய ஆண் சிங்கம் தலைவனாகப் பொறுப்பேற்கும்.

கூட்டத்திலிருந்து விரட்டப்பட்ட சிங்கம் வயது முதிர்ச்சியாலும், நகங்களும் பற்களும் கூர்மை இழப்பதாலும் வேட்டையாடுவதற்கு மிகவும் சிரமத்துக்கு உள்ளாகிறது. இதனால் எளிய விலங்குகளை அடித்துக் கொன்று உயிர் வாழும். என்னதான் சிங்கமாக வாழ்ந்தாலும் வயதான சிங்கத்தின் கடைசிக் காலம் பரிதாபத்துக்குரியது. ஒரு கட்டத்தில் மொத்த பலத்தையும் இழக்கும் சிங்கம் அதன் வாழ்நாள் எதிரியான கழுதைப் புலிகளுக்கு இரையாகிவிடும். இதுதான் சிங்கங்களின் தொன்றுதொட்ட வரலாறு.

ஆனால் நியாக் (Nyack) வாழ்வில் நடந்தது வேறு. அமெரிக்காவின் இண்டியானாபொலிஸ் (Indianapolis) மாகாணத்தின் உயிரியல் பூங்காவில் ஸூரி என்கிற 12 வயதுப் பெண் சிங்கமும் நியாக் என்கிற 10 வயது ஆண் சிங்கமும் இருந்தன. கடந்த 8 வருடங்களாக இரண்டு சிங்கங்களும் 'உனக்கு நான் எனக்கு நீ' என்கிற கொள்கையின்படி பூங்காவில் வாழ்ந்தன. இதன் பலனாக 2015 ஆம் ஆண்டு ஸூரி 3 குட்டிகளை ஈன்றது. 2 ஆண் குட்டிகளும் ஒரு பெண் குட்டியும் இதில் அடங்கும்.

கடந்த 15 ஆம் திகதி எப்போதும் போல உயிரியல் பூங்கா பார்வையாளர்களுக்காகத் திறந்திருந்தது. ஸூரியின் 3 வயதுப் பெண் குட்டியான ஸுகரி (Sukari) சம்பவ நாளன்று தாய் தந்தையோடு ஒன்றாகவே இருந்தது. மற்ற 2 ஆண் குட்டிகளும் பருவம் எய்தியதால் தனித் தனிக் கூட்டுக்கு மாற்றப்பட்டிருந்தன.

உயிரியல் பூங்கா ஊழியர்கள் திடீரென சிங்கங்கள் இருந்த கூண்டை நோக்கிச் சத்தம் போட ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கு முன்பு இல்லாத அளவுக்கு 2 சிங்கங்களின் உறுமல் சத்தமும் ஆக்ரோஷமாகக் கேட்டிருக்கிறது. உடனே பூங்கா ஊழியர்கள் எச்சரிக்கை செய்கிறார்கள். சிங்கங்களின் கூண்டை கவனித்த மொத்த ஊழியர்களும் பதறிப்போகிறார்கள். பெண் சிங்கமான ஸூரி ஆண் சிங்கத்தின் கழுத்தைக் கௌவியபடி கிடந்தது.

பொதுவாகச் சிங்கங்கள் இரையை வேட்டையாடும்போது கழுத்தைக் குறிவைத்து வேட்டையாடும். அப்போதுதான் இரையை எளிதாகக் கொல்ல முடியும். தப்பிச் செல்லவும் முடியாது. அதே போன்று ஆண் சிங்கத்தின் கழுத்தைப் பெண் சிங்கம் பிடித்திருப்பதைப் பார்த்ததும் பூங்கா ஊழியர்கள் அதிர்ச்சியாகினர். பூங்கா ஊழியர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் எவ்வளவோ முயன்றும் பெண் சிங்கம் ஆண் சிங்கத்தின் கழுத்தை விடாமல் கொல்லும் நோக்கிலேயே செயற்பட்டது.

கடைசியில் ஆண் சிங்கத்தைக் காப்பாற்றும் முயற்சிகள் அனைத்தும் தோல்வியில் முடிய நியாக், பெண் சிங்கத்தின் கையால் இறந்த முதல் ஆண் சிங்கம் என்கிற பெயரை சுமந்து இறந்து போனது. பொதுவாக சிங்கங்கள் ஒன்றாக இணைந்து வாழும் குணம் கொண்டவை. என்னதான் அடித்துக் கொண்டாலும் பெண் சிங்கங்கள் இதுவரை எந்த ஆண் சிங்கத்தையும் தனி ஆளாக நின்று கொன்றதில்லை. சிங்கம் கொல்லப்பட்ட தினத்திலிருந்து இன்றுவரை கொலைக்கு என்ன காரணமெனத் தெரியாமல் பூங்கா நிர்வாகம் குழம்பிப் போயிருக்கிறது.

மிருகங்களின் ஆக்ரோஷத் தன்மையில் பெரும் பங்கு வகிப்பது அதன் புறச் சூழல்தான். காடுகளில் சுற்றித் திரியும் வரை, இந்த மிருகங்களின் குணாதிசயங்களில் பெரிய மாற்றங்கள் எதுவும் இல்லை. அங்கே ஆண் சிங்கம்தான் எல்லாவற்றிலும் ராஜா. ஆனால், கூண்டுகளுக்குள் எல்லாமே மாறிவிடுகிறது. தொடர்ச்சியாகக் கூண்டுகளுக்குள் இருப்பதும், இது போன்ற நிலைக்குக் காரணம் என்கின்றனர் காட்டுயிர் நிபுணர்கள்.

சில நாள்களுக்கு முன்னர், நிகழ்ந்த ஒரு சண்டையில் ஸூரி, ஆண் சிங்கத்தைத் தாக்கிய போதே ஆண் சிங்கமான நியாக் எந்தவிதமான எதிர்ப்பையும் காட்டவில்லை. அடுத்தடுத்த நாள்களில், அதிகாரத் தோரணையில் இருக்க வேண்டிய நியாக், சற்றே அடக்கி வாசித்து பணிந்து போனதாம். இலகுவாக சொல்வதென்றால் சரணடைந்துள்ளது. குட்டிகளும் பிறந்து 3 ஆண்டுகளைக் கடந்துவிட்டதால், தாய்மை என்னும் நிலையிலிருந்து ஸூரி முற்றிலுமாக மாறியிருந்தது. இவை அனைத்தையுமே காரணமாகச் சொல்கிறார்கள் விலங்கியல் ஆர்வலர்கள்.

கால காலமாக நடக்காத விடயங்கள் எல்லாம் திடீரெனத்தான் நிகழும். நியாக் விடயமும் இப்போது அப்படித்தான்!



# யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒரு வேண்டுகோள்!

நாட்டு ஒன்று ஜனாதிபதி ஒன்று பிரதமர் ஒன்று ஆனால் சட்டங்கள்தான் வேறு...வேறு...! இது, வேறு ஏதே ஒரு நாட்டில் என்று எண்ண வேண்டாம். இலங்கையில்தான் இந்தக் கொடூரம் நடக்கிறது.

அம்பாந்தோட்டைக்குச் சென்றோம். அங்குள்ள உணவகங்களுக்கும் சென்றோம். எல்லாம் சிங்களப் பாரம்பரியத்தைப் பறைசாற்றுவதாகவே அவர்களின் நடவடிக்கைகள் அமைந்திருந்தன. அவர்களின் பாரம்பரிய உணவு விற்பனை நிலையங்கள் எல்லாம் அந்த அடிப்படையிலேயே நடைபெறுகின்றன. அங்குள்ள பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் அத்தகைய உணவகங்களின் நடைமுறைகளைச் சிதைக்காதவாறுதான் தமது கடமைகளை ஆற்றுகின்றனர்.

மட்டக்களப்புக்கும் சென்று பார்த்தோம். வழி நெடுகிலும் அவர்கள் பண்டுதொட்டுச் செய்து வரும் பாரம்பரிய உணவான அப்பம் சுட்டு விக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அப்படி நம் நாட்டில் மட்டுமல்ல நான் சென்று பார்த்த உலக நாடுகளிலெல்லாம் பாரம்பரியங்களைச் சிதைக்காதவாறே அபிவிருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நவீனதொழில்நுட்பமும் அவர்களால் உள்வாங்கப்படுகிறது.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அப்படி அல்ல. வட பகுதி எங்கிலும் சட்டங்கள் வெவ்வேறாகக் காணப்படுகிறது. ஊருக்கு ஒரு சட்டம். அங்குள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தர் ஒவ்வொருவரும் தமக்கேற்றவாறு அல்லது தாம் புரிந்து கொண்டவாறு சட்டத்தைக் கையிலெடுக்கின்றனர். தமிழர் பாராம்பரிய உணவகங்களை எல்லாம் பொதுச் சுகாதரத் திணைக்களம் தொந்தரவு கொடுத்து மூடவைத்துவிட்டது. அதாவது அதைச் செய், இதைச் செய் என்று தொடர்ந்து கொடுத்த தொந்தரவைத் தாங்க முடியாது பலர் தத்தமது வியாபார ஸ்தலங்களுக்கு மூடுவிழாவைக் கொண்டாடிவிட்டு ஓடியே போய்விட்டார்கள்.

கே.கே.எஸ். வீதியில் இருக்கும் ஒரே மாதிரியான வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்களுக்கு வெவ்வேறு விதமாகச் சட்டங்கள் அமுல்படுத்தப்படுகின்றன. கே.கே.எஸ் வீதியிலுள்ள ஒரு பழ ஜூஸ் விற்கும் கடைக்குச் சென்று சர்பத் கேட்டோம். அவரும் கண்ணாடி கிளாஸ் ஒன்றில் சர்பத்தை நிரப்பித் தந்தார். "என்னய்யா இது பிளேன் சர்பத்தாக இருக்கிறதே. எங்கே கச கசாவைக் காணோம்" என்று கேட்டேன். "சர்பத்துக்குப் போடுவதற்காகக் கச கச கொட்டையைத் தண்ணீரில் போட்டு வைத்தேன். பீ.எச்.ஐ வந்து பார்த்துவிட்டு - இதைக் குடித்தால் கான்சர் வரும் தெரியாதா? என்று கேட்டுவிட்டு எடுத்து நிலத்தில் ஊற்றிவிட்டுச் சென்றுவிட்டார்" என்று கடைக்காரர் சொன்னார். ஆனால் சற்றுத் தள்ளிச் சென்று அதே சர்பத்தைக் கேட்டோம். தாராளமாகக் கச கசவைப் போட்டுக் குளிர்மையாகத் தந்தார் குடித்துவிட்டு வந்தோம்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் பிரபல மிக்சர் வியாபாரி அவரது தயாரிப்புகளுக்கெல்லாம் தாராளமாக அஜினோமோட்டோ போடுகிறார். அதனால் அவரது தயாரிப்புகள் எல்லாம் சுவை சற்றுக் கூடுதலாகவே இருக்கிறது. அஜினோமோட்டோ மிகவும் ஒரு கொடுமையான உப்பு என்று தெரியும். ஆனால் அதை அரசாங்கம் தடை செய்த பொருளாக அறிவிக்கவில்லை. எனவே, அதன் பாவனையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்று சொல்பவரும் ஒரு பீ.எச்.ஐ தான். இதேபோல பல விடயங்கள் உண்டு. சொல்லப்போனால் மகாபாரதக் கதைபோல நீண்டு கூடச் செல்லலாம்.

எனவே யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ஒரு வேண்டுகோள். இப்படியான நுணுக்கமாக நடவடிக்கைகளை எடுத்துப் பொது மக்களின் சுகாதாரத்தைப் பேணுவதற்கான முயற்சிகளை எடுக்கும் நீங்கள், ஏன் அஜினோமோட்டோ என்ற அந்தக் கொடுமையான உப்பைத் தடை செய்வதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு அரசாங்கத்தைக் கோரக்கூடாது.

ஒரு மக்கள் நலன் பாதுகாப்பு அதிகாரி என்ற வகையில் பொது நல வழக்குகளைப் போடுவதற்கான விழிப்புணர்வை ஏன் மக்களிடம் தூண்டக்கூடாது. அது இருக்கட்டும். உங்களுக்குப் பாதகமான ஒன்றையும் பற்றிப் பேசுவோம். தினம் தினம் அந்தக் கேவலத்தைத் தாண்டித்தானே உங்கள் காரியாலயத்துக்குச் செல்கிறீர்கள். யாழ். போதனா வைத்தியசாலையைச் சுற்றியும், காகில்ஸ் சதுக்கத்துக்கு எதிரேயும், வைத்தியசாலைக்கு எதிரே உள்ள மருந்துக் கடைகளுக்கும் சவப்பெட்டிக் கடைகளுக்கும் முன்பாகவும் ஓடும் சாக்கடைகள் பற்றித்தான் பேசுகிறோம்.

கையாலாகதவர்களிடம் போய் உங்கள் திணைக்களத்தைச் சேர்ந்தவர்கள் மிகவும் வன்மமாக நடந்து அவர்களிடம் குற்றம் கண்டு அவர்களைக் கொண்டு சென்று நீதிமன்றங்களில் நிறுத்துகிறீர்கள். அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கிறீர்கள். அவர்கள் விடுகின்ற தவறினால் மக்கள் பாதிப்படைவதாக நீங்கள் கருதினால், மேற்குறிப்பிட்ட சாக்கடையினாலும் மக்கள் பாதிக்கப்படுவர் என்ற விளக்கம் உங்களிடம் இல்லையா? இல்லாவிடில் அதிலிருக்கும் நேயைப் பரப்பும் கிருமிகளுக்கு அது அரசாங்கத்தின் தவறு என்று அறிந்து நோயைப் பரப்பாது விட்டுவிடுமா?

மக்கள் மத்தியிலே பணியாற்ற வேண்டியவர்கள் மக்களுடனான நல்லுறவினைப் பேணி அவர்கள் ஒத்துழைப்பைப் பெறுவதைவிட்டுவிட்டு அவர்களைக் குற்றமிழைத்தவர்கள் என்ற எண்ணத்தில் அணுகுவதும், அவர்கள் நீங்கள் தங்களைத் தண்டிக்க வருபவர்களாக எண்ணி அருவருப்படைவதுவும் சதா நடைபெறுகின்ற நிகழ்வு. அவர்களைப் பாதுகாப்பதற்காகத்தான் நீங்கள் அங்ஙனம் பணியாற்றுகிறீர்கள் என்ற எண்ணத்தை அவர்கள் மனங்களில் மேலோங்கச் செய்யக் கூடியவகையில் உங்கள் உறவு முறை அவர்களோடு பேணப்படுவதில்லை. அதேபோல அவர்களும் உங்களைக் கண்டு பயப்படுவதும், மிரளுவதுமான முறையினை வளர்த்தெடுத்து வைத்திருக்கிறீர்களேயன்றி ஒரு சுமூகமான உறவைப் பேண வல்ல சூழலை ஏற்படுத்தாத குறைபாட்டைக் காணக்கூடியதாக இருக்கிறது.

முன்னைய காலத்தில் மக்கள் ஆரோக்கியமாகவும் திடகாத்திரமாகவும் இருந்தார்கள். அப்போது முக்களுக்கு நோய் எதிர்ப்புச் சகத்தி தாராளமாக இருந்தது. இப்போது இளவயதிலேயே அவர்கள் நோயினால் பாதிக்கப்பட்டு விடுகிறார்கள். காரணம் அவர்கள் உட்கொள்ளும் எல்லாவற்றிலும் இரசாயனம் மிகுந்து காணப்படுகிறது. அதனால் அவர்கள் உடல்கள் வலுவானதாக இல்லை. எனவே வேளாண்மையில் இரசாயனத்தை உபயோகிப்பதைக் கட்டுப்படுத்துவதும் உங்களது தலையாய கடமை என்றே எண்ணுகிறேன்.

அரசு அவற்றைத் தடை செய்யவில்லை. அதனால் நாம் எப்படி நடவடிக்கை எடுப்பதென்று எண்ணி ஒதுங்குவீர்களானால் ஒரு சமூகவிரோதச் செயலுக்கு உடந்தையாகிறீர்கள் என்றதே எனது கருத்து. ஏனெனில் அதற்குரிய அதிகாரம் உங்கள் கைகளில் உண்டு. அதனால்தான் அந்த விடயத்தை உங்கள் கைகளில் எடுங்கள் என்று கேக்கிறோம்.

மக்கள் மயப்படுத்தப்பட்ட பணிகளிலே பணியாற்றுகின்ற அதிகாரிகள் ஒரு விடயத்தை மறக்கக் கூடாது. கடந்த காலத்தே, இப்படிப்பட்ட பணிகளிலே பணியாற்றியவர்கபள் மக்களுடன் நல்ல எண்ணத்தை வளர்த்ததனால் அவர்கள்பணியாற்றிவிட்டு மாற்றலாகிப் போகின்ற சமயத்தில் மக்கள் கண்ணீர்விட்டு அழுத சம்பவமும் நடைபெற்றிருக்கிறது. "எமது பகுதிக்குப் பொறுப்பாக இருக்கிற அதிகாரிக்கு எங்களால் கெட்ட பெயர் வந்துவிடக் கூடாது என்று மக்கள் எப்போது எண்ணி நடக்கின்றனரோ அன்றுதான் பணிகளும் மக்கள் மயப்படுத்தப்பட்டதாகவும் உண்மையானதாகவும் இருக்கும். உங்கள் பணிகளுக்கும் ஒரு அர்த்தம் உண்டாகும்.

நா.யோகேந்திரநாதன்

# நீந்திக் கடந்த நெருப்பாறு

75

நன்றி தமிழ்லீடர் – அவுஸ்ரேலியா



நன்றாக பொழுது விடிந்த போது இலுப்பைக்கடவை முழுமையாகவே வெறிச்சோடிப் போய்விட்டது. எனினும் வேவு விமானத்தால் அதைக் கண்டுபிடிக்க முடியாதவாறு முகாமில் பாவனைக்கு உதவாத கைவிடப்பட்ட வாகனங்களை மேலிருந்து பார்த்தால் தெரியும்படி விட்டுவிட்டு வந்திருந்தனர் போராளிகள். காவல் நிலைகளின் துவாரங்களிலும் ‘டம்மி’ துப்பாக்கிகளையும் 50 கலிபர் போன்று தோற்றமளிக்கும் வகையிலான பிளாஸ்ரிக் குழாய்களையும் வைத்துவிட்டிருந்தனர்.

எனினும் படையினர் அன்று பகல் முழுவதும் எவ்வித தாக்குதல்களையும் மேற்கொள்ளவில்லை. மாலை சேவாலங்கா குடியிருப்பிலும் இலுப்பைக் கடவைப் போராளிகள் முகாம் மீதும் நடத்தப்பட்ட விமானத் தாக்குதலைத் தொடர்ந்து எறிகணை வீச்சு ஆரம்பமாகியது. எனினும் அன்று மாலை நடைபெற்ற விமானத் தாக்குதல்களும், இரவு இடம்பெற்ற எறிகணைத் தாக்குதல்களும் துரோகிகள் வெகு சாதுரியமாகவே தகவல்களை வழங்கியிருந்தனர் என்பதைக் காட்டின.

எனினும் தலைமை எடுத்த புத்திசாலித்தனமான முடிவால் போராளிகளுக்கு இடம்பெற விருந்த பேரழிவு தவிர்க்கப்பட்டு விட்டது. போராளிகள் அன்று அதிகாலையில் படையினர் பறங்கியாற்றைக் கடந்து முன்னேறக்கூடும் என எதிர் பார்த்தபோதும் முற்பகல் வரை எதுவுமே நடக்கவில்லை.

● ● ●

முதல்நாள் மாலையே ஏராள மான மக்கள் முழங்காவிலை விட்டு இடம்பெயர்ந்தபோதிலும் வேலுப் பிள்ளையாலோ பரம சிவத்தாலோ எந்த ஒரு முடிவுக்கும் வரமுடிய வில்லை. ஆனால் மாலை இடம் பெற்ற விமானத் தாக்குதலும் தொடர்ந்து கேட்ட இடைவிடாத எறிகணை ஓசைகளும் அவர்களை முடிவெடுக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளிவிட்டன.

வெள்ளாங்குளத்தில் பங்கர்கள் அமைக்கும் பணியில் ஈடுபட்டுவிட்டு சுந்தரம் இரவு பத்து மணியளவிலேயே வீட்டுக்கு வந்திருந்தான். அவன் மறுநாள் சண்டை வெள்ளாங்குளத்துக்கு நகர்ந்து விடும் எனவும் இனி முழங்காவிலில் இருக்க முடியாது என்பதையும் பரமசிவத்துக்குக் கூறினான். அவனது கூற்றைத் தொடர் எறிகணை ஓசைகளும் உறுதிப்படுத்தின.

சுந்தரம் முத்தையாவுடன் சென்று கோயிலடியில் அவர் போட்டிருந்த தேனீர்க் கடையைப் பிடுங்கி ஏற்றிவந்தான். ஏற்றக்கூடிய பொருட்களை எல்லாம் வண்டிலில் ஏற்றிக்கொண்டனர். சமையல் பாத்திரங்களையும் சாப்பாட்டுச் சாமான்களையும் வேலுப்பிள்ளையின் லான்ட்மாஸ்ரரில் ஏற்றினர்.

வேலுப்பிள்ளையால் இடப்பெயர்வு என்பதைச் சகிக்கவே முடியவில்லை. ஆனால் உயிர் தப்ப வேண்டுமானால் அங்கிருந்து வெளியேறியே ஆகவேண்டும் என்ற நிலையில் அவருக்கு வேறு வழி தெரிய வில்லை. எனினும் முத்தல் வாழைக் குலைகளாக ஏழெட்டை வெட்டி வண்டிலில் சாமான் களுக்கு மேல் ஏற்றினர். அதிகாலையில் புறப்படுவது என்ற முடிவுடன் அனைவருமே முற்றத்திலேயே படுத்துவிட்டனர்.

இரவு பன்னிரண்டு மணியள வில் எறிகணை வீச்சுக்கள் நின்று விட்டிருந்தன. அதிகாலை புறப்படத் தயாரான நிலையில் வேலுப்பிள்ளை, “சத்தத்தைக் காணயில்லை... பாத்துப் போவமே?” எனக் கேட்டார்.

அதைச்சற்றுத் தொலைவில் நின்று கேட்ட சுந்தரம், “இப்பிடித் தான் நாங்களும் பாலம்பிட்டி யிலையிருந்து வெளிக்கிடேக்கை மனமில்லாமல் அந்தரப்பட்ட னாங்கள் இனி என்னதான் செய்ய முடியும்? மினக்கெட்டால் ஆபத்து” என்றான்.

வேலுப்பிள்ளை அதற்கு மேல் எதுவுமே பேசவில்லை. வண்டிலில் வீடு கட்டும் பொருட்களும், நெல்லு மூட்டை, மிளகாய் மூட்டை, வாழைக்குலை என்பன வும் ஏற்றப்பட்டன. அதில் ஒரு பக்கமாக முருகேசரும், பெருமாளும், முருகரும் ஏறி மிகச் சிரமப்பட்டு நெல்லு மூட்டைகளின் மேல் அமர்ந்துகொண்டனர்.

லான்ட் மாஸ்ரரில் சமையல் பாத்திரங்களும், சில அவசிய தட்டுமுட்டுச் சாமான்களும் ஏற்றப்பட்டன. இரு பக்கங்களி லும் பெண்களும், சிறுவர்களும் ஏறிக்கொண்டனர். சுந்தரம் அவர்களின் பின்னால் சைக்கிளில் புறப்பட்டான். லான்ட் மாஸ்ரர், வண்டில் என்பவற்றை வீதியில் ஏற்றமுடியாத அளவுக்கு, வீதி நகர்ந்துகொண்டிருக்கும் மக்களால் நிறைந்திருந்தது. வேலுப்பிள்ளை லாவகமாக தனது வாகனத்தை வீதியில் ஏற்றினார். அதன் பின்னால் பரமசிவத்தின் வண்டியும் ஏறிக்கொண்டது. அப்பெரும் மக்கள் வெள்ளத்தின் நகர்வில் அவையும் சங்கமமாகின.

முருகேசர் ஏக்கத்துடன் பரமசிவத்திடம் கேட்டார், “எங்க போறம்?”

பரமசிவம் ஒரு பெருமூச்சுடன், “ஏதோ போகும் மட்டும் போவம்”, என்றார்.


மன்னார் பூநகரி வீதியில் அந்த மக்கள் வெள்ளம் மெதுவாகவே நகர்ந்துகொண்டிருந்தது. கால்நடையாக தலையிலும் கையிலுமாக சில சிறிய மூடைகளுடனும் உடுப்புப் பெட்டிகளையும் சுமந்து செல்லும் பெருந்தொகையான மக்களைக் கடந்து வாகனங்கள் செல்வது எளிதான காரியமாக இருக்கவில்லை. உழவு இயந்திரங்களும், லான்ட் மாஸ்ரர்களும் வண்டில்களும் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களும் நின்று நின்று மெதுவாக ஊர்ந்தும் வசதியான இடங்களில் வீதியால் இறங்கித் தரவைகளாலும் செல்ல வேண்டியிருந்தது. குண்டும் குழியுமாகவும் குழிகளுக்குள் கூரான கற்கள் துருத்திக் கொண்டும் காட்சியளித்த அந்தப் பாதையால் நடந்து செல்வதுகூட அவ்வளவு சுலபமாக இருக்கவில்லை.

முதல்நாள் காலையிலேயே மக்கள் இடம்பெயர ஆரம்பித்து விட்டனர். இரவிரவாக இடப்பெயர்வு தொடர்ந்த போதிலும் மறுநாள் காலையில்கூட வீதியில் நெருக்கடி குறையவில்லை. மன்னார் மாவட்டத்தில் போராளிகளின் கட்டுப்பாட்டில் இருந்த அத்தனை பகுதி மக்களும் அந்த வீதியால் நகர்ந்து கொண்டிருந்தனர். அதைவிட இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து ஏற்கனவே வெளியேறி மடுவில் தஞ்சமடைந்தவர்களும் வடக்கு நோக்கி நடப்பவர்களுடன் இணைந்துகொண்டிருந்தனர்.

மடுவிலிருந்து புறப்படும்போது பல நூறுகளாக வெளியேறிய மக்கள் இப்போது ஆயிரங்களாகி, பல்லாயிரங்களாகி ஓர் இலட் சத்தை விட அதிகரிக்குமளவுக்குப் பெருகிவிட்டனர். எனினும்கூட அதில் சென்று கொண்டிருந்தவர்களில் ஒரு சிலருக்காவது தாங்கள் எங்கு செல்கிறோம் என்பது பற்றிய தெளிவு எதுவுமே இருக்கவில்லை. ஏதோ உயிரைக் காக்க ஓடுகிறோம் என்ற உணர்வு மட்டுமே எஞ்சியிருந்தது.

பரமசிவத்தின் வண்டில் நாச்சிக்குடாச் சந்தி, குமுழ முனைச் சந்தி என்பவற்றைக் கடந்து, தரவைவெளிக்கு வர நேரம் கிட்டத்தட்ட எட்டு மணியை எட்டிவிட்டது. பார்வதி இரு கரைகளிலும் எங்காவது ஒரு மரத்தரடி கிடைக்காதா என அவதானமாகப் பார்த்துக் கொண்டு வந்தாள். அவள் காலையில் புறப்படுவது என்ற முடிவை இரவு எடுத்தவுடனேயே உலையில் கூடுதலாக அரிசியைப் போட்டுச் சோறாக்கி வைத்திருந்தாள். அனைவரும் இரவு சாப்பிட்டது போக மிகுதியை நீரூற்றி வைத்திருந்தாள். அதை எடுத்து பக்குவமாக லான்ட் மாஸ்ரரில் ஏற்றி சரிந்துவிடாமல் பாதுகாப்பாகக் கொண்டுவந்தாள்.

(நெருப்பாற்றில் நீந்துவோம்)



# சுற்றுலா செல்ல வேண்டிய முக்கிய 12 நகரங்கள்

2019 ஆம் ஆண்டின் விடுமுறை காலம் தொடங்கியுள்ள நிலையில், பலர் எந்த நாட்டிற்கு சுற்றுலா செல்லலாம் என திட்டம் போட்டுக் கொண்டு இருப்பார்கள். அவர்களுக்காக சிறந்த பட்டியல் ஒன்றை நாங்கள் தருகிறோம்.

**வெலிங்டன், நியூசிலாந்து**

2018 ஆம் ஆண்டில் மிக முக்கியமான சுற்றுலா நகரங்களின் பட்டியலில் வெலிங்டன் நகரத்தின் பெயரும் இடம் பெற்றிருந்தது. கடற்கரை ஓரத்தில் இருக்கும் மற்ற நகரங்களைப் போலவே, வருடம் முழுவதும் இங்கு மிதமான வானிலையே நிலவுகிறது. இங்குள்ள மக்கள் நேசத்தோடு பழகுவதால், நீங்கள் புத்துணர்ச்சி பெறவும், ஓய்வெடுக்கவும் சிறந்த இடமாக இது திகழ்கிறது. முக்கியமாக, ஆகஸ்ட் மாதத்தில் இங்கு நடைபெறும் உணவு திருவிழா மிக புகழ்பெற்ற ஒன்று. அதுமட்டுமல்லாமல், இந்த நகரத்தில் ஸ்டார்டப் (வளர் இளம் நிறுவனங்கள்) தொழில்கள் பெருகி வருவதால், தகவல் தொழில்நுட்ப துறையில் பணியாற்றுபவர்களுக்கு பயனுடையதாக இருக்கும். மேலும், Look See Wellington என்ற திட்டத்தின் மூலம் 100 தொழில்நுட்ப பணியாளர்களுக்கு இந்த நகரத்தை சுற்றி பார்க்க ஒரு வார இலவச சுற்றுலாவை ஏற்படுத்தி தருகிறார்கள்.

வெலிங்டன் நகரத்தில் ஒரு சைக்கிளை வாடகைக்கு எடுத்துக் கொள்ளுங்கள். அங்கிருந்து விக்டோரியா மலைக்குச் செல்லுங்கள். நிச்சியம் அதிசயதக்க காட்சிகளை நீங்கள் அங்கு பார்ப்பீர்கள்

**போகோடா, கொலம்பியா**

ஒரு காலத்தில் வன்முறைக்கு பெயர் பெற்ற இந்த நகரம், இன்று அதையெல்லாம் மறந்து தென் அமெரிக்காவின் செல்வ செழிப்பான நகரமாக மாறியுள்ளது. கொலம்பிய தலைநகரான போகோடாவிற்கு செல்ல இதுவே சரியான தருணம். உங்களுக்கு களிப்பூட்டக் கூடிய வகையில் கலை, கலாச்சாரம், பேஷன் மற்றும் உணவு என அனைத்தும் இங்கு தாரளமாக உள்ளது. நகரம் முழுவதும் உலகப் புகழ்பெற்ற கொலம்பிய காஃபி கிடைக்கிறது.

போகோடா நகரத்தின் சுற்றுப்புறத்தை முழுமையாக அனுபவிக்க வேண்டுமென்றால், வரலாற்றில் இடம்பெற்ற லா கேண்டலேரியா மையத்திற்கு செல்ல வேண்டும். இந்த அருங்காட்சியகம் போகோடாவில் பிறந்த சிற்பியும் ஓவியருமான பெர்னாண்டோ போடேரியோவிற்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. ஞாயிற்று கிழமைகளில் இங்கு சாலைகளில் வாகனங்கள் செல்ல தடை இருப்பதால், தெருக்களில் உங்கள் வசதிகேற்ப மெது நடை அல்லது சைக்கிளில் செல்ல்லாம்.

**மராகெச், மோரோக்கோ**

வடக்கு ஆப்ரிக்காவின் கலை மற்றும் கலாச்சார மையமாக திகழும் மராகெச், வருடம் முழுவதும் சுற்றுலாவாசிகளுகு ஏற்ற இடமாக திகழ்கிறது. 2015ஆம் ஆண்டு தொடங்கப்பட ஓயாசிஸ் திருவிழா (உள்ளூர் மற்றும் சர்வதேச இசைய மைப்பாளர்களின் சங்கமம்) மற்றும் மூன்று வருடத்திற்கு முன்பு திறக்கப்பட்ட யெவிஸ் செயிண்ட் லாரெண்ட் அருங்காட்சியகம் ஆகியவை நகரின் கலாச்சார நிலப்பரப் பிற்கு கூடுதல் சிறப்பாக அமைந்துள்ளது. இலையுதிர் மற்றும் வசந்த காலங்களில் அருமையான சீதோஷ்ன நிலை நிலவுகிறது. மேலும், நகரம் முழுவதும் முதல் தரமான ஷாப்ஜபிங் மால்கள் உள்ளன. மராகெச்சில் உள்ள மெதினா மையத்தை உலக பாரம்பரிய சின்னமாக UNESCO அறிவித்துள்ளது. ஆனால், அங்குள்ள தெரு வாழ்க்கையும் பலவகையான வண்ணமயமான சந்தைகளும், அருங்காட்சியகத்தில் இருக்கும் உணர்வை உங்களுக்கு வரவழைக்கும்.

1923ஆம் ஆண்டு ஃப்ரெஞ்ச் கலைஞர் ஜேக்குயுஸ் மஜோரெலி உருவாக்கிய மஜோரெலி தோட்டத்தை நீங்கள் கண்டிப்பாக பார்க்க வேண்டும்.

**புத்தபெஸ்ட், ஹங்கேரி**

இங்குள்ள கட்டடக்கலையின் மூலமே இந்த நகரத்தின் பல் அடுக்கு வரலாற்றை அறிந்து கொள்ளலாம். கோதிக், மறுமலர்ச்சி, கிளாசிக் மற்றும் பரோக்யு பானியில் உள்ள கட்டிடங்கள் உங்கள் கவனத்தை ஈர்க்கும். வெப்ப குளியலுக்கு பெயர் பெற்ற இந்த நகரம், ஹங்கேரிய உணவு வகைகளுக்கும் புகழ் பெற்றது. இரவு நேர உணவிற்குப் பிறகு, பாழடைந்த அதே சமயத்தில் கண்ணை பறிக்கும் மதுக்கூடங்களில் காக்டெயில் பானத்தை அருந்தலாம்.

**இஸ்தான்புல், துருக்கி**

2500 ஆண்டு பழமையான இந்த நகரம், சமீப வருடங்களாக சுற்றுலாவில் எழுச்சி பெற்றுள்ளது. வரலாற்றில் நான்கு பேரரசுகளின் (ரோமன், பசேண்டின், லத்தீன் மற்றும் ஓட்டாமான்) தலைநகராக இருந்துள்ளது இஸ்தான்புல். இங்குள்ள மிகப்பெரிய கடைத் தெருக்கள் உங்கள் உணர்வை நிச்சியம் தாக்கும். முக்கியமாக, இந்த வருடம் செப்ரெம்பர் - நவம்பர் மாதங்களில் இஸ்தான்புல் கலை திருவிழா நடைபெறுகிறது.

போஸ்போரஸ் நகருக்கு படகு சவாரி செல்லுங்கள். இந்த ஊர் கருங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைப்பதோடு ஐரோப்பா மற்றும் ஆசிய கண்டத்தை இரண்டாகப் பிரிக்கிறது.

**டோக்கியோ, ஜப்பான்**

இந்த வருடம் செப்ரெம்பர் மாதம் டோக்கியோவில் ரக்பி உலக கோப்பை தொடங்கப் போகிறது. அடுத்த வருடம் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறப் போகிறது. ஆகையால் ஜப்பான் தலைநகரான டோக்கியோவிற்கு செல்ல இப்போதே திட்டமிடுங்கள். இங்கு மிச்சிலின் நட்சத்திர அந்தஸ்து பெற்ற 200 உணவகங்கள் உள்ளது. வேகமாக நகரும் இந்த நகரத்தில், உலகத்திலேயே மிகவும் திறமையான போக்குவரத்து அமைப்பை அனுபவியுங்கள்.

மாலை நேரத்தில் ஷிஞ்சுகு நகரத்தில் நியான் லைட்களின் வெளிச்சத்தை காண தவறாதீர்கள்.

**லிமா, பெரு**

பெருவின் மச்சு பிச்சு மலை தொடர் உங்கள் கவனத்தை நிச்சியம் கவரும். அறுசுவை உணவின் அதிகாரபூர்வமற்ற தலைநகராக அறியப்படும் லிமா, உலகின் எந்த நாட்டின் உணவிற்கும் போட்டியாக விளங்குகிறது. இங்கு காலையில் அலை சறுக்கு விளையாடலாம்.

செஸ் வோங் என்ற சிறிய உணவகத்தில் செவிச்சி உணவை ருசிக்க தவறாதீர்கள்

**கேப்டவுன், தென் ஆபிரிக்கா**

உயர்தரமான வைன் தயாரிக்கும் நகரம் என பெயர் பெற்றுள்ளது கேப் டவுன். சமீபத்தில் திறக்கப்பட்ட ஆபிரிக்காவின் சமகால் கலை பறைசாற்றும் செயிட்ஸ் அருங்காட்சியகம் நகரின் முக்ச கலாச்சார சான்றாக இருக்கிறது வட துருவத்தில் குளிர் காலம் தொடங்கியதும், இந்நகரத்தில் பின் மாலை வரை சூரிய ஒளியி குளித்து இளைப்பாறலாம்.

**ஹோ சீ மின் சிட்டி, வியட்னா**

தற்கால இளைஞர்களுக்கு ஏ சுற்றுலா தளமாக இந்த நகரம் விளங்குகிறது. பொருளாதார முன்னேற்றத்தால் இங்குள்ள நகரம் பல்மடங்கு வளர்ச்சி அடைந்துள்ளது. இதை விமா நிலையத்தை விட்டு வெளியே வந்ததும் நீங்களே பார்ப்பீர்கள் இங்கு கிடைக்கும் ஐஸ் டீ உங்கள் உற்சாகத்தை மேலும் அதிகப்படுத்தும். வளைந்து நெளிந்து செல்லும் தெருக்களில் சாலையோர உணவகங்களையும் பொதுமக்களின் கலை வெளிப்பாடுகளையும் நீங்கள் காணலாம்.

**ஒஸ்டின், அமெரிக்கா**

இங்கு நிலவும் மிதமான குளிரும் அற்புதமான இறைச்சி உணவுகளும் இந்நகரத்தின் மக்கள் தொகையை பத்தாண்டுகளில் இரு மடங்காக உயர்த்தியுள்ளது. இசை, உணவு, தொழில்நுட்பம் ஆகியவைகளுக்கு முக்கிய இடமாக திகழும் ஒஸ்டின், ஒவ்வொரு நிமிடமும் உலக தொழில்முனைவோர்களின் சிறந்த நகரமாக வளர்ந்து வருகிறது. அதுமட்டுமல்லாமல் நேரடியான இசை நிகழ்ச்சியின் தலைநகரமாகவும் இது திகழ்கிறது. இங்குள்ள ஃப்ராங்க்ளின் பார்பிக்யு உணவகத்தில் சாப்பிட வேண்டுமென்றால் நீண்ட தூரம் வரிசையில் நிற்க வேண்( என்பதை மறந்துவிடாதீர்கள்.

(23ஆம் பக்கம் பார்க்க)

# ஆரிட்டை சொல்லி அழ?



## இது நாட்டு நடப்பைப் பற்றிய ஒரு (வி)சித்திரத் தொடர்

### சும்மா திண்டு குடிச்சிட்டு கிடந்தெழும்பத் தெரியாது! தெண்டா எடுக்கிறியள்?

சங்கரப்பிள்ளை அண்ணை சைக்கிளை எடுத்துக் கொண்டு போகேக்கை எல்லாரும் பாத்துக் கொண்டுதான் நிண்டவை. ஒருதரும் ஒண்டும் பறையேல்லை. எடுத்த சைக்கிளை இரண்டு உழக்கு உழக்கினாப்போலை சைக்கிள் ஒழுங்கை முடக்குக்கு வந்திட்டுது. திடீரென அங்கை ஒருத்தி மோட்டச் சைக்கிளிலை வந்தாள். சங்கரப்பிள்ளை சைக்கிளின்ரை பிறேக்கைப் பிடிச்சிது. சைக்கிள் நிக்கேல்லை. சங்கரப்பிள்ளை சைக்கிளை வெட்டித் திருப்ப அது வேலிக்கை விழுந்து கதியாலை முறிச்சுப்போட்டுத்தான் நிண்டுது. ஐயோ எண்டபடி எல்லாரும் ஓடிச்சினம். "ஏன் அண்ணை, என்ன நடந்திது? " எண்டு சங்கரப்பிள்ளேட்டைக் கேட்டினம். "சைக்கிளுக்கு பிறேக்கில்லை.பிடிச்சன் பிடிக்க மாட்டெண்டிட்டுது" எண்டார் சங்கரப்பிள்ளை. எல்லாரும் சைக்கிள் சொந்தக்காரைத் திரும்பிப் பாத்தினம். "ஓம், சைக்கிளுக்கு பிறேக்கில்லைத்தான்" எண்டார் அவர். "அப்ப ஏன் அவர் எடுக்கேக்கை சொல்லேல்லை" எண்டு ஆக்கள் கேட்டினம். "விழுந்தாப் பிறகு சொல்லுவம் எண்டிருந்தனான்" எண்டு பதில் சொன்னார் அந்தாள். எப்பிடி இருக்கு இது?

அந்த மாதிரித்தான் இருக்கு எங்கடை அரசாங்கத்தின்ரை கதையும். வெடிக்க முன்னமே சொல்லப்பட்டுதாம் குண்டு வைப்பங்கள். வெடிக்கப்போகுது எண்டு. ஆனால் அதைப்பற்றி ஒருத்தரும் அக்கறைப்படவு மில்லை. ஏன் நாய் எண்டு கேக் கவும் இல்லை. சொன்னவை தங்க பாடு. செய்தவையும் தங்க பாடு. அது இப்ப பல இடங்களிலையும் வெடிச்சு எத்தினை பிரச்சினை யைக் கிழறிவிட்டுக் கிடக்கு. இனி ஓடுப்பட்டுத் திரியிங்கோவன். "வரு முன் காப்பதோ? வந்த பின் காப்பதோ? நல்லது" எண்டு இனி ஒரு கேள்வி பதில் போட்டி ஒண்டு நடத்தவேணும்.

குண்டு வெடிச்ச இடத்தை ஒரு தரும் கண்கொண்டு பாக்கேலாமைக் கிடக்கு. அதுவும் எங்கடை நாட்டைப் பாத்து இரசிச்சுத் தங்கடை பொழுதைப் போக்கலாம் எண்டு வந்த வெள்ளையள்தான் பாவம். ஹோட்டலிலை காலமைச் சாப்பாட்டுக்கு வரிசையிலை நிண்டவையள்தான் அதிகமாச் செத்தது. சந்தையிலை மரவள்ளிக் கிழங்கை எடுத்து அடுக்குற மாதிரி அவையின்ரை காலை எடுத்து அடுக்கினதைப் பாத்தம். கண்ணிறாவியாக் கிடந்திது.

இப்ப கொஞ்சம் கொஞ்சமாத்தான் கதை வெளியிலை வருகிது. நியூசிலாந்திலை வெள்ளை ஒண்டு மன நோயாலை துவக்கெடுத்துப் பள்ளி வாசலைக்கு புகுந்து சுட்டதெல்லே? அதுக்குப் பழிக்குப்பழி தான் தாங்கள் இதைச் செய்திருக்கினம் எண்டு சொல்லினம். நியூசிலாந்திலை உள்ள ஆளிலை இருக்கிற கறளை சிறாவிக் கொட்ட எங்கடை ஊரே இவைக்குக் கிடைச்சது?

இப்ப சும்மா கிடந்த சங்கை ஊதிக்கெடுத்துப் போட்டு நிக்கினம். உவை உந்தச் சன்னதம் கொண்டது இண்டைக்கு நேற்றைக்கெண்டே நினைக்கிறியள்? அது கனகாலமா நடக்கிது. இப்ப பத்துப் பன்ரண்டு வருசத்துக்கு முன்னம் சுய பாதுகாப்பெண்ட பேரிலை அரசாங்க ஆசிர்வாதத்தோடை உவையின்ரை ஆட்டம் துவங்கினது. பிறகு மெல்ல மெல்ல வளந்து இரண்டொருபேர் பிடிபட்டவை எண்டு செய்தியா வந்து அமளிப்பட்டவை. பிறகு கனகாலமா அதைப் பற்றி ஒரு கதையும் இல்லை. இப்ப ஆர், எவர்? எண்டு அமளிப்பட்டால்... இனி கண்டவன், கதைச்சவன் எண்டு எல்லாரையும் போட்டுக் குத்த... உப்பிடி எத்தினையைப் பாத்திட்டு இருக்கிறம்!

இப்ப முன்பின் யோசினை ஒண்டும் இல்லாமல் சகோதரங்கள் குட்டையைக் குழப்பிப்போட்டி னம். உதிலை பெரிசா ஒண்டும் ஆகப்போறதில்லை. சும்மா மத வெறியாலை உப்பிடியான விசியங்களைச் செயியிறதாலை ஒருதரும் சப்போட் பண்ண மாட்டினம். அதுவும் இலங்கை மாதிரியான நாட்டிலை ஒரு குருவியும் உதுக்குத் துணைவராது. இன்னும் இருக்கிற அவையின்ரை ஆக்களுக்கு உதாலை ஆக்கினையே அல்லாமல் ஒண்டும் புதுசா நடக்காது. இஞ்சையும் கரைச்சல் தான். அவை வெளிநாடு போற திலையும் கரைச்சல்தான். வேணு மெண்டால் ஏதாவது முஸ்லிம் நாடுகளுக்குப் போகலாம். அதுகும் பிரச்சினையை விரும்பாத நாடுகளும் அவைக்கு ஒண்டும் செய்யாது.

இப்பத்தேக் காலத்திலை ஒண்டைச் செய்ய முன்னம் வடிவா யோசிக்க வேணும். குண்டைக் கட்டிப் பாயிறதோடை உங்கடை கதை முடிஞ்சிது. இருக்கிறவைக் கெல்லே சங்கடம். சரி உலகத்தை ஒரு இராட்சியத்துக் கீழை கொண்டு வாறதுக்குத்தான் உப்பிடி கட்டிக் கொண்டு பாயிறியள் எண்டு வைச்சுக் கொள்ளுவம். நீங்கள் நினைக்கிற மாதிரி அப்பிடி அதை ஆக்கிப்போட்டு என்ன செய்வியள்? பிறகு குத்தி முறிய வெளிக்கிடுவியள். அதுக்கையும் இஸ்லாத்துக்கு எதிரான ஆக்கள் எண்டு உங்களுக்கை இருக்கிற பிரிவுகளிலை உள்ள ஆக்களைப் போட்டுத் தள்ளுவியள், கழுத்தை வெட்டுவியள். கல்லாலை எறிஞ்சு சாக்காட்டுவியள்? கட்டிப் பாஞ்ச சமூகம் சும்மா இருக்குமோ? கை கறுவத் துவங்கும். அதுக்கை இதுக்கை கையைவிட்டுச் சொறியப் பாப்பியள்.

நீங்கள் கட்டிக் கொண்டு பாயிறியள். கொஞ்சப்பேர் திண்டு குடிச்சிட்டு வீட்டுக்கை சும்மா கிடக்கத் தெரியாமல் மற்றவையின்ரை வீடு வீடாப் போய் "எங்களோடை வாருங்கோ. சந்தோஷத்தைக் காட்டுறம். நின்மதியைத் தாறம். உங்கடை ஆக்கள் பிசாசுகள்" எண்டு அவை ஒரு பக்கம் தங்கடை சேட்டையள்? உதாலை நாடு உருப்படுமோ?

**- கோளரங்கன்**

---

## இறைகுமாரன்....

(02ஆம் பக்கத் தொடர்ச்சி)

மருமகனுமான ருவான் விஜயவர்த்தன போன்றோர் அங்கம் வகிக்கும் ஐ.தே.கவின் உறுப்பினர்கள் , இனப்படுகொலையை நடத்தி முடித்த மஹிந்தவின் தற்போதைய குடும்பக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் துஷாரா மற்றும் இன்னொருவர், மற்றும் ரெலோ சார்பானோர். முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை இவ்வாண்டு தாங்களே மேற்கொள்ளப் போவதாக கனகராஜா தவராசாவின் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நடந்தது இனப்படுகொலை என்பதை ஒப்புக் கொள்ள மறுக்கும் ஐ.தே.க. மற்றும் மஹிந்த கட்சியினரின் துணையுடன் இறுதிப் போர் முடியும் வரை படையினரின் எடுபிடியாக இருந்த கட்சியினரின் தலைமையில்தான் இந் நிகழ்வு நடைபெறவுள்ளதாகத் தெரியவருகிறது.

இறைகுமாரன் உமைகுமாரன் படுகொலைக்கு புளொட் மட்டக்களப்பில் அஞ்சலிக்கூட்டம் நடத்திய போது 'கொலை செய்தவர்களே அஞ்சலி செய்கிறார்கள் என வெளிப்படையாகக் கூறும் தைரியம் அமிர்தலிங்கத்துக்கு இருந்தது. இறைகுமாரன் - உமைகுமாரன் படுகொலை குறித்த உண்மை தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசாவுக்கும் தெரியும். இறுதி யுத்தம் வரை புளொட் எப்படி இயங்கியது? யார் யாரைக் கொன்றது? யுத்த வெற்றியை எப்படிக் கொண்டாடியது என்பதுவும் அவருக்குத் தெரிந்திருக்கும். இறுதி யுத்தத்தில் தனது இரு பிள்ளைகளை இழந்த முன்னாள் போராளியொருவர் கரைதுறைப் பற்று பிரதேச சபை யார் யார் தயவுடன் இயங்குகின்றது என்பதையெல்லாம் அவருக்குச் சுட்டிக் காட்டியுள்ளார். அவரது கருத்தை மாவையும் ஒப்புக்கொண்டுள்ளார். தான் அதனைப் பார்த்துக் கொள்வதாக வாக்கும் அளித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட பிரஜைகள் குழு தலைவர் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் இது தொடர்பாக உரையாடியுள்ளார். அவர் பிரதேச சபை இதனை நடத்துவது பொருத்தமில்லை என்பதை ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது. மயானம் என்ற வகையில் இது அவர்களிடம் கையளிக்கப்பபட்டாலும் உரித்துடையவர்களே உறவுகளுக்குக் கடமை செய்ய வேண்டுமே தவிர மயானக்காரன் தானே பொறுப்பேற்று கடமைகளைச் செய்ய முடியாது என்பதும் அவரது அபிப்பிராயம் போலுள்ளது. இன்னொரு எம்.பி. நான் சொல்வதை ஒருவருமே கேட்கிறார்கள் இல்லையே அபிவிருத்திக் கூட்டங்களுக்கும் நான் போவதை விட்டுவிட்டேன் என்று கூறுகிறார்.

இனி நிகழ்வு நடத்த பொலிஸ் தடை விதிக்கலாம். அந்தச் செய்திக்கு கீழே அதை எதிர்த்து வாதிட சுமந்திரன் வருகிறார் என்றும் வரலாம். ஆபத்பாந்தவனும் நானே அனாதரட்சகனும் நானே என்ற இவ்வாறன அரசியல் சித்து விளையாட்டுக்கள் நாம் ஏற்கனவே கண்ட காட்சிகளே.

எப்படியோ உயிரிழந்த எமது உறவுகளை கொச்சைப்படுத்துவதாக எதுவுமே நடக்க கூடாது. தமிழரசு மற்றும் ரெலோ கட்சித் தலைவர்கள் இந்த விடயத்தில் தீர்க்கமான முடிவெடுக்க வேண்டும்.

இக்கட்டுரையின் முதல் பந்தியை மீண்டும் படியுங்கள்.



## ஐ.எஸ். எனும் புற்றுநோய்

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம் இஸ்லாத்திற்கு எதிரானது.முஸ்லிம்கள் யாரும் அதனை ஆதரிக்கக் கூடாது என்று சிலோன் தௌஹீத் ஜமாத் அறிக்கை விட்டிருக்கிறது.

ஒருவர் மற்றொருவரைக் கொலை செய்தால் அவர் எல்லா மனிதர்களையும் கொலை செய்தவர் போலாவர். ஒரு மனிதனை வாழவைத்தவர் எல்லா மனிதர்களையும் வாழவைத்தவர் போலாவர் - அல் குர் ஆன் (05.32)

இப்படித்தான் இஸ்லாம் சொல்லுகிறது. ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது சொல்லுவது “உங்கள் மீது அமைதி நிலவட்டும்” அன்பு பாராட்டுவதுவும், வாழ்த்துவதுமாகத்தான் அவர்கள் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. எந்த விதத்திலும் அமைதியையும், சமாதானத்தையும் வலியுறுத்துவதுமாக இஸ்லாத்தின் வழிகாட்டல் அமைந்திருக்கிறது. இஸ்லாத்தில் சொல்லப்பட்ட கடமையான ஜிஹாத் பற்றிய கட்டளையைத் தவறாகப் புரிந்து கொண்ட சிலரே தங்களுக்கென ஆயுதக் குழுக்களை உருவாக்கிஅதனூடாக தாக்குதல் நடத்துவதுகொலை செய்வது போன்ற காரியங்களில் ஈடுபடுவதாக சிலோன் தவ்ஹீத் ஜமாஅத் குற்றஞ் சுமத்தி இருக்கிறது.

இஸ்லாமிய அரசாங்கத்தை உருவாக்கப் போகிறோம், உலகையே இஸ்லாத்தின் குடையின் கீழ் கொண்டுவரப்போகிறோம் என்ற கோஷத்துடன் ஆரம்பிக்கப்பட்ட ஐ.எஸ்.ஐ.எஸ். இயக்கம் ஈராக் மற்றும் சிரியாவின் பகுதிகளைக் கைப்பற்றிநாங்கள் இஸ்லாமிய அரசாங்கம் என்று கூறி அங்கு செய்யும் காரியங்கள் இஸ்லாம் அனுமதித்த வையல்ல என்றும், இஸ்லாத்தைச் சரியா கப் புரியாமல் குருட்டுத்தனமான கண் ணோட்டத்தில்தான் தற்போது இலங்கை யையும் இவர்கள் கறி வைத்துள்ளனர் என்று மேலும் சொல்லி இருக்கிறது சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பு.

ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கத்தின் தவறான வழிகெட்ட சிந்தனையால் கவரப்பட்டு அவர்களை ஆதரித்து ஸஹ்ரான் காசிம் என்பவன் உரையாற்றிச் சமூக வலைத்தளங்களில் செய்திகள் பரப்பிக் கொண்டிருந்த நேரத்திலேயே இந்தக் குழு ஆபத்தானது.இவர்கள் பற்றி அதிக கவனம் எடுங்கள்.இவர்களைக் கைது செய்யுங்கள்.நாட்டில் சமாதானம் தொடர வழி செய்யுங்கள்.என்று பல முறை சிலோன் தௌஹீத் ஜமாத் சார்பில் பாதுகாப்புப் பிரிவுக்குப் பல முன்னெச்சரிக்கைத் தகவல்களை நாம் வழங்கியும் அவர்களஅதனைக் கருத்தில் கொள்ளவில்லை என அந்த அறிக்கையில் சிலோன் தௌஹீத் ஜமாத் அமைப்பினர் தெரிவித்திருக்கின்றனர்.

இத் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் நடைபெற முன்னர் இந்தியா இலங்கை அரசுக்கு இது பற்றி எச்சரித்திருக்கிறது. இலங்கைப் புலனாய்வுப் பிரிவும் அரசை எச்சரித்திருக்கிறது.ஆனால் எவரும் இந்த சிவப்பு எச்சரிக்கையை சிரமேல் கொள்ளவில்லையோ அல்லது நடக்கட்டும் பார்க்கலாம் என்றிருந்தனரோ தெரியவில்லை... குண்டுகள் வெடித்துவிட்டது. நாடு குழம்பிப் போய்க் கிடக்கிறது. மக்கள் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். எரிகின்ற வீட்டில் கூதல் காய்வதைப்போல அரசியல்வாதிகள் தம் பக்க நியாயத்தைச் சொல்பவர்களாகவும், தம்மில் கறைபடியாது தம்மைக் காப்பாற்றுகின்றவர்களாகவுமே இருக்கிறார்கள்.குறிப்பாக முஸ்லிம் அரசியல் வாதிகள் என்னத்தைச் செய்வதென்று திக்குமுக்காடிப் போயிருக்கிறார்கள். தொடரும் விசாரணைகளின்மூலம் கைதுசெய்யப்படுபவர்களைப்பார்த்தால் ஐ.எஸ்.ஐ.எஸ் இயக்கம் புற்றுநோய் பரவுவதைப்போல் சந்து பொந்துகளெல்லாம் பரவியிருக்கிறது போல் தெரிகிறது.

இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமது பொறுப்பை உணர்ந்து சிலோன் தௌஹீத் ஜமாத் இயக்கம் செயற்பட்டிருக்கிறது.

### உயிர்த்தெழுந்த...

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத் தளபதி மகேஷ் சேனநாயக்க இந்த வன்முறை தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்க தமக்கு உரிய அதிகாரம் வழங்கப்படவில்லை என குறைபட்டுக் கொண்டார். எனினும் சம்பவம் நடந்த அடுத்தநாள் நள்ளிரவு தொட்டு, அவசரகாலச் சட்டத்தின் பயங்கரவாத எதிர்ப்புப் பிரிவு அமுலுக்கு வந்துள்ளது.

இன்னொருபுறம் கடந்த 4 ஆம் திகதியே எச்சரிக்கை கிடைத்தும் பிரதமருக்கோ, தமக்கோ அறிவிக்கவில்லை ஓர் அமைச்சருக்கு தாக்குதல் சம்பவம் தொடர்பாக தெரிந்தும் அவர் ஆராதனைக்கு செல்லாமல் விட்டார் எனவும் அவர் எல்லோருக்கும் அறிவித்திருந்தால் இழப்புகளை தவிர்த்திருக்க முடியும் எனவும் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும் சம்பவம் நடந்து முடிந்போது பிரதமர் பாதுகாப்புச் சபையினரை அடுத்த நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாக ஆலோசனை மேற்கொள்ள அழைத்தபோது எவரும் வரவில்லை எனவும், பின்பு அவர் பாதுகாப்புக்கு அமைச்சுக்கு சென்று சபையைக் கூட்ட முயன்ற போதும் 20 நிமிடங்கள் தங்களுக்குள் ஆலோசனை நடத்திய பின்னரே சமுகமளித்தனர் என்றும் தெரியவருகின்றது.

சம்பவம் நடந்தபோது பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சிங்கப்பூரில் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது எனினும் ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் உள்ள முறுகல் இது தொடர்பான நடவடிக்கைகளிலும் பிரதிபலிக்குமானால் உண்மைகள் கண்டறியப்பட முடியுமா என்பதே இங்கு எழும் கேள்வியாகும்.

எப்படி இருப்பினும் இன்னும் சில நாட்களில் எதிர்காலம் எப்படி அமையும் என்று தெரியவரும் என்றே நம்புவோமாக!

எப்படியிருந்தபோதிலும் உயிர்த்த ஞாயிறில் பலிகொள்ளப பட்ட உயிர்களுக்கு அதிகாரத் தரப்பினர் பதில் சொல்லியே ஆக வேண்டும்.

### அரசியல்....

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

மிகவும் மதிப்பிற்குரிய டி.எஸ்.சேனநாயக்கா கல்லூ ரியில் படித்தவர்.", அவர் தனது குடும்பத்தவருடன் தெமட்டக்கொடவிலுள்ள தனது தகப்பனாருக்குச் சொந்தமான தொடர் மாடிவீடு ஒன்றில் வசித்துவந்தபோதே அந்தச் சம்பவம் இடம்பெற்றது. அந்த வீட்டிலேயே அவரது மனைவி வெடிகுண்டை வெடிக்கச் செய்து தனது பிள்ளைகளுடன் தன்னையும் மாய்த்துக் கொண்டார். அப்போதே அவர்களைச் சோதனையிடச் சென்ற மூன்று பொலிஸாரும் கொல்லப்பட்டனர்.

இந்த விசாரணைகளை முன்னெடுப்பவர்களில் ஒருவர் மெயில் ஒன் லைன் என்ற இணையத்துக்கு அவர் பற்றித் தெரிவிக்கையில், அவருக்கு எங்கிருந்து இவ்வளவு பணம் கிடைத்தது என்று தெரியாமல் இருக்கிறது. அவரது நடவடிக்கைகள் எல்லாம் கான்சர் நோயைப்போலப் பரவிக் காணப்படுகிறது. அதனை நாங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்காக முயற்சித்துக் கொண்டிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

நடைபெற்ற தாக்குதல்கள் பற்றி இலங்கை அரசின் நடவடிக்கைகளை மேற்குலக நாடுகள் மிகவும் அவதானித்துக் கொண்டிருக்கிறது. இதில் தமது இனம் பாதிக்கப்படவில்லையே என பேரினவாத அரசு ஒதுங்கியிருந்து முறையான தீர்வை வழங்காவிட்டால் இனிவருங் காலத்தில் இலங்கை அரசு பாரிய அளவில் அரசியல் , பொருளாதார மாற்றத்தைச் சந்திக்க வேண்டிவரலாம்?

### சுற்றுலா...

(21ஆம் பக்கத் தொடர்ச்சி)

**போர்டோ, போர்சுகல்**

போர்சுகல் நாட்டின் இரண்டாவது பெரிய நகரமாக திகழும் போர்டோ, கடற்கரை சொர்க்கமாக திகழ்கிறது. உணவு விரும்பிகளுக்கும் வடிவமைப்பில் அதிக ஆர்வம் கொண்ட நபர்களும் கண்டிப்பாக செல்ல வேண்டிய ஊர்களில் ஒன்று. பாரம்பரிய முறைப்படி கடல் உணவுகளை சமைத்து, அதோடு இரு கிளாஸ் வைன் அருந்தி உங்கள் நாளை இங்கு தொடங்குங்கள். இந்நகரத்தில் உள்ளூர் வைன் ஆறாக பெருக்கெடுத்து ஓடுகிறது. கலை மற்றும் வடிவமைப்பு என்று வந்துவிட்டால், பாரம்பரிய துணிகள் முதல் சமகால சிறப்புகள் வரை என அனைத்தையும் போர்டோ நகரம் வழங்குகிறது போர்டோ. தெருக்களில் நடந்தாலே, இலவசமாக அருங்காட்சியகத்திற்குள் இருப்பது போல் உள்ளது. தெருவின் ஒவ்வொரு மூலையிலும் சுவரோவியங்களும் தெருக்கலையும் நிரம்பியுள்ளது.

**ஓசாகா சிட்டி, மெக்சிகோ**

உலக பாரம்பரிய இடமாக திகழும் இந்நகரம் மெஸ்கல்லின் பிறந்த ஊராகவும் உள்ளது. பாரம்பரிய வரலாற்றையும் கலாச்சாரத்தையும் கொண்டுள்ள இந்த நகரத்தில் ஸ்பானிஷ் உள்பட 17 மொழிகள் பேசப்படுகின்றன. இங்கு வாழும் உள்ளூர் மக்கள், வண்ணமயமான, பாரம்பரிய உடை அணிந்தே கடைகளுக்குச் செல்கிறார்கள். வரலாற்று பொக்கிஷங்கள் இந்நகரத்தில் நிரம்பியுள்ளன. இங்குள்ள பிரமிட்டுகளை கண்டிப்பாக நீங்கள் பார்க்க வேண்டும். உள்ளூரில் தயாரிக்கப்படும் மண் பாண்டங்கள், தையல் வேலைபாடுகள் மற்றும் கையால் செய்யப்பட்ட விரிப்புகள் ஆகியவை பெருமளவில் இங்கு கிடைக்கின்றன. ஓசாகாவின் சமகால கலையை அறிய இங்குள்ள அருங்காட்சியகத்திற்கு செல்லுங்கள். அதே தெருவில் மிகப்பெரிய வெளிப்புற சந்தையும் உள்ளது.

தமிழில்: ஏ.கோபி

நன்றி: theculturetrip.com




# குறும்பட்டியல் வெளியீடு

தொழில்முறை உதைபந்தாட்ட வீரர்கள் சங்கத்தினால் வருடந்தோறும் சிறந்த வீரர்களுக்கான விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன. அந்தவகையில் 2018 / 19 பருவகால வீரர்களைத் தெரிவு செய்வதற்கான ஆறு பேர் கொண்ட குறும்பட்டியல் கடந்த வாரம் வெளியிடப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் சிறந்த வீரருக்கான குறும்பட்டியலில் மன்செஸ்ரர் சிற்றி அணி வீரர்களான சேர்ஜியோ அகுரா, ரஹீம் ஸ்ரேலிங், பெர்னாடோ சில்வா, லிவர்பூல் அணி வீரர்களான வேஜில் வான் டிக், சடியோ மனே, செல்சி அணி வீரரான ஈடன் ஹசாட் ஆகியோர் இடம்பெற்றுள்ளார்கள்.

இதுபோல சிறந்த இளம் வீரர் விருதுக்கான குறும்பட்டியலில் மன்செஸ்ரர் சிற்றி அணியின் ரஹீம் ஸ்ரேலிங் மற்றும் பெர்னாடோ சில்வா லிவர்பூல் அணியின் டிரென்ற் அலெக்சாண்டர் ஆர்னோல்ட், வெஸ்ற்ஹம் யுனைற்றட்டின் டெக்ளன் றைஸ், மன்செஸ்ரர் யுனைற்றட்டின் மார்கஸ் ரஷ்போர்ட், போர்ண்மவுத் வீரர் டேவிட் புறூக்ஸ் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

தொழில்முறை உதைபந்தாட்ட வீரர்கள் சங்க அங்கத்தவர்கள் அளிக்கும் வாக்குகளின் அடிப்படையில் வெற்றியாளர்கள் தீர்மானிக்கப்படுவர். நாளை (28.04.2019) நடைபெறவுள்ள வருடாந்த விருதுகள் வழங்கும் நிகழ்விலேயே வெற்றியாளர்கள் அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஆலோசகராக நியமனம்




எதிர்வரும் உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளைக் கருத்திற்கொண்டு மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் வீரரான ராம்நரேஷ் சர்வான் அவ்வணியின் துடுப்பாட்ட ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். இந்நிலையில் அயர்லாந்தில் நடைபெறவுள்ள முத்தரப்பு ஒருநாள் தொடர் மற்றும் உலகக் கிண்ணத்தில் பங்குபற்றவுள்ள வீரர்களுக்கு நடைபெறும் பயிற்சிமுகாமில் சர்வான் தற்போது இணைந்துள்ளார்.

இது குறித்து சர்வான் 'வீரர்களுக்கு ஒரு வழிகாட்டியாகச் செயற்படுவதற்கு நான் இங்கு வந்துள்ளேன். எந்தத் தொழில்நுட்ப ரீதியிலும் வீரர்களுக்கு என்னால் முடிந்தளவுக்கு உதவ முயற்சிப்பேன். இந்த வாய்ப்பு தலைமைப் பயிற்சியாளருக்கும் துணைப்பயிற்சியாளர்களுக்கும் நிச்சயம் உதவிகரமானதாக இருக்கும் என நினைக்கிறேன். கடந்தகாலங்களில் எமது அணி வீரர்கள் துடுப்பாட்டத்தில் எங்கே தவறிழைத்தார்கள் என்பதை நானறிவேன். அதனால் அத்தகைய விடயங்களில் போதிய கவனம் செலுத்தவுள்ளேன். இந்த மாற்றம் ஒரு இரவில் மாத்திரம் சாத்தியப்படக் கூடியதல்ல. ஆனாலும் இது தொடர்பான எண்ணங்களை வீரர்களுடன் பகிர்ந்து அணியைக் கட்டியமைக்க வேண்டும்' எனக் கூறியுள்ளார்.

தற்போது 38 வயதான சர்வான் மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் 87 டெஸ்ட் போட்டிகளிலும் 181 சர்வதேச ஒருநாள் போட்டிகளிலும் 18 சர்வதேச இருபதுக்கிருபது போட்டிகளிலும் விளையாடி மொத்தம் 11944 ஓட்டங்களைக் குவித்தமை குறிப்பிடத்தக்கது.

# சிறப்பான அங்கீகாரம்




அமெரிக்காவில் இருந்து வெளிவரும் Time சஞ்சிகை 2019ஆம் ஆண்டின் செல்வாக்குமிக்க 100 நபர்களின் பட்டியலை கடந்தவாரம் வெளியிட்டுள்ளது. இந்த 100 நபர்களின் பட்டியலில் அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் டிரம்ப், பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டன் உட்பட விளையாட்டுத்துறையைச் சேர்ந்த லிவர்பூல் உதைபந்தாட்ட அணியின் நட்சத்திர வீரரான முகமட் சாலா, ஜப்பான் ரென்னிஸ் வீராங்கனையான நயோமி ஒசாகா, அமெரிக்க கூடைப்பந்தாட்ட வீரரான லிப்ரன் ஜேம்ஸ், அமெரிக்க கோல்வ் வீரரான ரைகர் வூட்ஸ் ஆகியோரும் இடம்பெற்றுள்ளார்கள்.

அந்தவகையில் உதைபந்தாட்ட உலகில் முகமட் சாலா எகிப்தியர்கள் மற்றும் முஸ்லிம்களின் தனித்த அடையாளமாக விளங்குகின்றார். இது குறித்து லிவர்பூல் அணியின் முகாமையாளரான ஜுர்கென் குளொப் 'எமது அணியில் முகமட் சாலா மற்றும் சடியோ மனே ஆகியோர் முஸ்லிம் வீரர்களாக விளங்குகின்றார்கள். முஸ்லிம்கள் குறித்து ஆபத்தான விவாதங்களே நடைபெற்று வருகின்றன. அவர்கள் எல்லோருமே அப்படித்தான் என்று பொத்தாம் பொதுவான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படும் சூழலில் அதில் உண்மை இல்லை என்பதை நாம் அறிவோம். அந்தவகையில் இந்த அங்கீகாரம் நல்லதே' எனக் கூறியுள்ளார்.

# நேரம் மாற்றம்



அடுத்தாண்டு ஒலிம்பிக் போட்டிகள் ஜுலை 24 – ஓகஸ்ட் 9 வரை ரோக்கியோவில் நடைபெறவுள்ளது. ஆனாலும் இக்காலப்பகுதி ஜப்பானில் கோடை காலமாக விளங்குவதனால் வெப்பநிலை அதிகரித்து உயிரிழப்புகள் ஏற்படலாமென ஜப்பான் மருத்துவர் குழாம், ஒலிம்பிக் ஏற்பாட்டுக் குழுவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. இதையடுத்து போட்டியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு அதிக வெப்பநிலையைத் தவிர்க்கும் முகமாக ரக்பி 7, டிரையத்லான், 50 கிலோமீற்றர் ஆண்கள் மரதன் ஓட்டம் போன்ற விளையாட்டுக்களின் நேரத்தில் மாற்றம் செய்ய முடிவெடுக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் 50 கிலோமீற்றர் ஆண்கள் மரதன் ஓட்டப் போட்டிகள் ஜப்பான் நேரப்படி அதிகாலை 5.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. 2016ஆம் ஆண்டு பிறேசிலின் றியோடி ஜெனீரோவில் ஆண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டி உள்ளூர் நேரப்படி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியிருந்தது. அதன் பொழுது வெப்பநிலை 19 பாகை செல்சியஸாக இருந்தது. இதற்கு முன்னதாக 1964 ஆம் ஆண்டிலும் ரோக்கியோவில் ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றிருந்தாலும் கோடை வெப்பநிலையைத் தவிர்க்கும் முகமாக ஒக்ரோபரிலேயே நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பயணிப்பதில் சிக்கல்

ஜெற் ஏர்வேஸ் நிறுவனம் நிதி நெருக்கடி காரணமாக தனது அனைத்து விமான சேவைகளையும் கடந்தவாரம் இடைநிறுத்திய தால் பயணங்களுக்காக முன்பதிவு செய்த பயணிகள் பலரும் பாதிப்படைந்துள்ளனர். இதில் இந்திய அணியினரும் பாதிப்படைந் துள்ளமை தற்போது தெரியவந்துள்ளது. ஏனென்றால் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்காக இங்கிலாந்து செல்வதற்காக இந்திய அணியும் இதே விமான நிறுவனத்திடமே முன்பதிவு செய்திருந்தது. இதனால் உலகக் கிண்ணப் போட்டிகளுக்காக தற்போது எமிரேற்ஸ் விமான நிறுவனத்திடமும் வேர்ஜின் ஏர்வேர்ஸ் நிறுவனத் திடமும் முன்பதிவு செய்வதற்கான பேச்சுவார்த் தைகளில் இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஈடுபட்டு வருகின்றது. இது குறித்த இறுதி முடிவு ஓரிரு நாட்களில் தெரியவரலாம்.



கடந்தவருடம் இங்கிலாந்துக்கு இந்திய அணி சுற்றுப்பயணம் மேற்கொண்ட பொழுது எமிரேற்ஸ் விமானத்திலேயே சென்றமை குறிப்பிடத்தக்கது. எது எப்படி இருப்பினும் மே மாதம் 25 ஆம் திகதி இந்திய அணி தனது முதலாவது பயிற்சி ஆட்டத்தை நியூசிலாந்தோடு விளையாடவுள்ளதனால் ஏற்கனவே தீர்மானித்ததைப் போல் மே மாதம் 22 ஆம் திகதி இந்திய அணி இங்கிலாந்து புறப்படுவதில் எந்தவித மாற்றமும் இருக்காது என்றே கருதப்படுகின்றது.

இந்தப் பத்திரிகை லக்ஷ்மி பிறின்டர்ஸ் (பிறைவேற்) நிறுவனத்தால் 27.04.2019 அன்று 107, இராச வீதி, கோப்பாய் - திருநெல்வேலி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.